விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 06 செவ்வாய்க்கிழமை (23.08.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 247

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ரீம்கோ சீமெந்து

## யாழில் கிறீஸ் மனிதன்?

# நாவாந்துறையில் களேபரம்

# வடமராட்சியில் மக்கள் கொதிப்பு

## இராணுவம் துப்பாக்கிச் சூடு கலகம் அடக்கும் பொலிஸார் குவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், நாவாந்துறை மற்றும் வடமராட்சி தேவரையாளிப் பகுதியில் இராணுவம் மற்றும் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் நேற்றிரவு முறுகல் நிலை ஏற்பட்டது. கிறீஸ் மனிதன் என சந்தேகிக்கப்படும் நபர்களை மக்கள் துரத்திச்சென்றபோது அவர்கள் இராணுவ முகாமுக்கு சென்றதையடுத்தே இம் முறுகல் நிலை ஏற்பட்டதாக கூறப்பட்டது. இம் முறுகல் நிலையையடுத்து இராணுவத்தினர் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். கலகமடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அமைச்சின் அறிக்கை அமெரிக்காவிடம் கையளிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போர் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சினால் தயாரிக்கப்பட்ட மனிதாபிமானப் போரின் உண்மை சார்ந்த அலசல்கள் என்ற தலைப்பிலான அறிக்கை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாடுகள் கொழும்பிலுள்ள அனைத்து இராஜதந்திர தூதரகங்கள், ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஊடகங்களுக்கும் இவ்வறிக்கையின்பிரதிகள் அனுப்பி வைக்கப்

(20ஆம் பக்கம் பார்க்க)

## கிறீஸ் பூதம் என்பது வதந்தி மக்கள் அஞ்சத் தேவையில்லை

### யாழ்.கட்டளைத் தளபதி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணத்தில் கிறீஸ் பூதம் என்பது வதந்தி. அது தொடர்பில் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. பொலிஸார் பூரண பாதுகாப்பு வழங்குவர். இவ்வாறு யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

யாழ்.நாவாந்துறை, வடமராட்சியில் கிறீஸ் பூதம் தொடர்பில் பொது மக்களுக்கும் படையினருக்குமிடையே

(20ஆம் பக்கம் பார்க்க)

## கிளர்ந்தெழுந்த மக்கள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நாவாந்துறை மற்றும் வடமராட்சி தேவரையாளிப் பகுதி ஆகிய இடங்களில் கிறீஸ் மனிதன் என சந்தேகிக்கப்படும் நபர்களை பிடிப்பதற்காக அப்பகுதி மக்கள் கிளர்ந்தெழுந்ததாக தெரிவிக்கப்பட்டது.

வீடுகளிலிருந்த பொல்லுகள், தடிகளுடன் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வீதிகளில் இறங்கினர். இரவிரவாக வீதிகளில் நின்ற இளைஞர்கள் கிறீஸ் மனிதர்கள் என சந்தேகிக்கப்படும் மனிதர்களை பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## தஞ்சம் மறுக்கப்பட்டதால் தன்னை வெட்டிய தமிழ்ப்பெண்

(லண்டன்)

பிரித்தானியாவில் தஞ்சக்கோரிக்கை நிராகரிக்கப்பட்ட தமிழ் பெண் ஒருவர் பிரித்தானிய எல்லை முகவரக அதிகாரிகளைக் கண்டதும் தன்னைத்தானே கத்தியால் வெட்டிக் காயப்படுத்தியுள்ளார்.

தஞ்சக் கோரிக்கை பிரித்தானிய அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்ட நிலையில் நாடுகடத்தப்படவிருந்த 3 வயது குழந்தையொன்றின் தாயான 40 வயதுடைய குறித்த பெண்ணின் வீட்டுக்கு மூன்று எல்லை முகவரக அதிகாரிகள் சென்றனர்.

அவர்களைக் கண்டதும் அந்தப் பெண் ஓடிச் சென்று கத்தியை எடுத்து தனது தோள்பட்டையில் வெட்டிக்கொண்டுள்ளார். விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களைக் கடத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட இவரது கணவருக்கு இலங்கையில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வீட்டிலிருந்த ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து இவரது கணவர் தலைம்றைவானார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனின் வீடு முற்றாக இடிப்பு

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறையிலுள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனது பிறந்த வீட்டின் எஞ்சிய பகுதியும் நேற்றிரவு இரவோடு இரவாக இடித்தகற்றப்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் அறிவித்துள் ளார்.

இரவோடு இரவாக வல்வெட்டித்துறைப் பகுதி எங்கும் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்த அவர் கனரக

(02ஆம் பக்கம் பார்க்க)

## நாவாந்துறைச் சம்பவம் நேரில் சென்ற எம்.பிகள்

யாழ்.நாவாந்துறைப் பகுதியில் நேற்றிரவு மர்ம நபர்களால் ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலையை அடுத்து அங்கு பெருமளவிலான இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

இச்சம்பவத்தினால் பொதுமக்களுக்கும் இராணுவத்திற்கும் இடையில் முறுகல் நிலை தோன்றியிருந்தது. இதன்போது பொது மக்கள் பலர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தைக் கேள்வியுற்று இன்று அதிகாலை 2 மணியளவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று இராணுவத் தரப்புடனும், பொலிஸாருடனும்

(20ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர் உற்சவ காலப் பணிக்கு என மேலும் ஆயிரம் பொலிஸார் வரவழைப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசாமி கோவில் திருவிழா பாதுகாப்பு பணிக்கு என மேலதிகமாக ஆயிரம் பொலிஸார் வரவழைக்கபட்டுள்ளனர் என யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவா தெரிவித்துள்ளார்.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று மாலை நல்லூர் திருவிழாவுக்கென வரவழைக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான கடமையாற்றும் பகுதிகள் பகிர்ந்தளிக்கும் பொருட்டு கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதில்கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு பல்லாயிரக் கணக்கான

(20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மர்ம மனிதன் விவகாரத்தை பூதாகரமாக்கிய ஊடகங்கள்

## நீதி அமைச்சர் குற்றச்சாட்டு

மர்ம மனிதன் விவகாரத்தின் பின்னணி மற்றும் உண்மைகள் விரைவில் வெளிச்சத்திற்கு வரும். மர்ம மனிதர்கள் விவகாரம் பொது மக்கள் மத்தியில் விரைவில் பூதாகரமாக பரவுவதில் ஊடகங்களின் பங்களிப்பு கணிசமானதாகும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டார்.

மர்ம மனிதர்கள் விவகாரத்தில் நாட்டு மக்கள் சிந்திக்காதவர்களாக நிதானமற்று நடந்து கொள்கின்றனர். மக்கள் வதந்திகளை விரைவில் நம்பி விடுகின்றனர். இதனால் ஜனாதிபதி மிகவும் கவலையுற்றுள்ளார் என்றும் அவர் கூறியுள்ளார்.

கம்பளையில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் தொடர்ந்து



உரையாற்றுகையில், நாடு முப்பது வருட யுத்தத்தின் பின்பு பாரிய அபிவிருத்தியை கண்டு வரும் நிலையில் மக்கள் மத்தியில் பதற்றத்தையும் அச்சத்தையும் தோற்றுவிக்கும் வகையில் மர்ம மனிதர்கள் தொடர்பான விவகாரம் அமைந்துள்ளது.

மர்ம மனிதர்கள் தொடர்பான செய்திகள் பொது மக்கள் மத்தியில் விரைவாக பரவுவதற்கு ஊடகங்களின் நடவடிக்கைகள் மிகப் பிரதான காரணமாக அமைந்திருந்தது. இம் மனிதர்கள் தொடர்பான பின்னணியை வெளிச்சத்திற்கு கொண்டு வர அரசாங்கத்தால் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பாக நிலவும் வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்றார். (எ-5)

### சுற்றுலா செல்வோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

## கடலில் தத்தளிக்கும் நெடுந்தீவு பயணிகள்

நெடுந்தீவுக்கான பயணத்தில் தாம் தொடரும் அவலநிலை நீடித்துக் கொண்டே செல்வதாக அவ்வூர் மக்கள் தெரிவித்தனர். தற்போது தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகள் அதிகளவானோர் சென்று வருவதால் அவலநிலை மேலும் அதிகரித்துள்ளதாக அவர்கள் கவலை தெரிவித்தனர்.

நெடுந்தீவு-குறிகாட்டுவான் பயணத்தில் வடதாரகை படகு மட்டுமே சேவையில் ஈடுபட்டுள்ளது. அப்படகு நெடுந்தீவு துறைமுகத்துக்குள் செல்வதற்கு கடலின் ஆழம் போதாமையால் ஆழ்கடலின் மத்தியிலே தரித்து நிற்கும்.

இந்நிலையில் சிறிய படகுகள் சென்று வடதாரகையில் இருக்கும் மக்களை கரைக்கு அழைத்துவரும். அப்பணியை சில நாட்களாக கடற்படையினரின் படகுகளே மேற்கொண்டு வருவதாக தெரியவருகிறது.

இந்நிலையில் முதலில் தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகளே கரைக்கு அழைத்துச் செல்லப்படுவர் என்றும் அதன் பின்னரே தாம் அழைத்துச் செல்லப்படுவதாகவும் அவ்வூர் மக்கள் தெரிவித்தனர்.

நெடுந்தீவு-குறிகாட்டுவான் போக்குவரத்திற்கு சுமார் ஒரு மணி நேரம் எடுக்கின்ற போதும் நெடுந்தீவுக் கரையில் இருந்து தரைக்கு செல்வதற்கு சுமார் ஒரு மணித்தியாலங்களுக்கு மேல் எடுப்பதாக அவர்கள் கூறினர்.

இ[illegible] இவ்வாறிருக்க இரண்டு தளங்களை [illegible]காண்டு அமைக்கப்பட்டுள்ள [illegible] தாரகையில் சௌகரியமாக [illegible]ணிக்கக் கூடியதாக கருதப்படும் மேல் தளத்தில் சுற்றுலாப் பயணிகளையும், அடித்தளத்தில் நெடுந்தீவு மக்களையும் கடற்படையினர் ஏற்றுவ[illegible]கவும் பொது மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (எ)

## பிரபாகர...

வாகனங்கள் சகிதம் வீட்டின் எச்சங்கள் அகற்றப்பட்டு அவையும் எங்கோ ஏற்றிச் செல்லப்படுவதாகவும் தெரிவித்தார்.

அண்மைக்காலங்களில் யாழ். வரும் தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகள் பார்வையிட வேண்டிய சுற்றுலா மையங்களில் ஒன்றாகவும் அது மாறியிருந்தது.

இதையடுத்து அவசரஅவசரமாக அவ் வீடு மீண்டும் படையினரால் தகர்க்கப்பட்டிருந்தது. ஆனாலும் அந்த இடிபாடுகளை பார்வையிடவும் நாள்தோறும் சுற்றுலாப் பயணிகள் தொடர்ந்தும் படையெடுத்து சென்றவண்ணமே உள்ளனர். இதையடுத்தே அந்த இடிபாடுகளையும் அகற்றிவிட படைத்தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஏற்கெனவே வல்வெட்டித்துறையின் தீருவிலில் அமைக்கப்பட்டிருந்த குமரப்பா புலேந்திரன் ஞாபகார்த்த தூபிகளும் அண்மையில் இடித்தழிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (எ-1)

# அழிவடைந்த சுயவிபரக்கோவைகள் பூரணப்படுத்தப்படுகின்றன!

## முல்லை.கல்விப் பணிப்பாளர் அறிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கல்வி வலய அதிபர், ஆசிரியர்களின் சுயவிபரக் கோவைகளை பூரணப்படுத்தும் செயற்பாடுகள் நாளை தொடக்கம் 26-ம் திகதி வரையும் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர், ஆசிரியர்களின் சுயவிபரக் கோவைகளின் பெரும் பகுதி கடந்தகால போர்ச்சூழல் காரணமாக அழிவடைந்த நிலையில் அவற்றில் 80 % சுய விபரக் கோவைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்தது.

அழிவடைந்த ஏனையோரின் சுயவிபரக் கோவைகள் நாளை புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை முல்லைத்தீவு கல்வி வலயத்தில் பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார்.

இதற்கமைய, இதுவரையில் சுயவிபரக் கோவைகளை பூரணப்படுத்துவதற்கு அறிவிக்கப்படாத கரைத்துறைப்பற்று கோட்ட பாடசாலைகளை சேர்ந்த அதிபர், ஆசிரியர்களுக்கு நாளை புதன்கிழமையும், நாளைமறுதினம் வியாழக்கிழமை புதுக்குடியிருப்பு கோட்ட பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர், ஆசிரியர்களும், எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இதுவரை அறிவிக்கப்பட்டோரில் வருகைத் தர தவறியவர்களும் இடமாற்றத்தில் சென்று வருகை தரத் தவறியவர்களும் முல்லைத்தீவு கல்வி வலயத்திற்கு சமுகமளித்து தமது சுயவிபரக் கோவைகளை பூரணப்படுத்தும் செயற்பாடுகளுக்குஒத்துழைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (எ-8)


## மணமக்கள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த 1979 இல் பிறந்த நட்சத்திரம் உத்தரம் 4-ம் பாதம் உதயத்து செவ்வாய், கிரகபாவம் 40, உயரம் 5'7", பிரபலமான மருத்துவராகவும் மருத்துவ மேல் அதிகாரியாகவும் கடமையாற்றும் வைத்திய அதிகாரிக்கு Doctor, Engineer, Accountant அழகிய குடும்பபக்குவமுள்ள மணமகள் தேவை.

1980 பிறந்த மகம் 1- ம் பாதம் கி.பாவம் 29 1/2, உயரம் 5'6" பிரபலமான 3 சந்ததியினர் பரம்பரை உடைய நகைக்கடை உரிமையாளருக்கு ஓர் அளவு படித்த, அழகிய குடும்பப் பக்குவமுள்ள மணமகள் தேவை, சீதனம் எதிர்பார்க்கப்படாது.

1975 பிறந்த விசாகம் 2-ம் பாதம், உதயத்தில் செவ்வாய், 56 1/2 கிரகபாவம். பிரபலமான காட்வெயார்ஸ் உரிமையாளருக்கு அழகிய குடும்பபக்குவமுள்ள மணமகள் தேவை.

1989-ல் பிறந்த நட்சத்திரம் ஆயிலியம் 2 ம் பாதம் கிரகபாவம் 32 1/2 உயரம் 5'4", ஆசிரியராக கடமைபுரியும் Germany,Holand,Zurish ஆகிய மூன்று மொழிகளிலும் கற்பிக்க தெரிந்த மணமகனுக்கு சுவிஸ்,கனடா, லண்டன், ஜேர்மன் , அமெரிக்கா ஆகிய நாடுகளில் மணமகள் தேவை.

**VANY INTERNATIONAL MARRIAGE BUREAU**

Govt.Registered(International)

**யாழ்.கிளை**
இல.181, 2-ம் குறுக்குத் தெரு,யாழ்ப்பாணம்.
விஜய் :0771307185
வாணி :0778501013

**வவுனியாக் கிளை**
S.சிந்து C/o சோ.மங்கையற்கரசி
இல.102/52,சூசைப்பிள்ளையார்குளம்,வவுனியா.
T.P.:0773380265

**மட்டக்களப்பு கிளை** T.P.:0772848495
தொடர்பு கொண்டால் நேரில் வந்து சந்திப்பார்.

(C-4157)

**தலைமையக முகவரி**
S.PONNAMPALAM
211#Liverpool Rd,
London (U.K)

**கனடா கிளை**
P.AKILAN
212/1 Parliament Rd
Ontarrio - Canada.

எமது இணையத்தள முகவரி:www.keethannet.com
உடனடித் தொடர்புகளுக்கு: 0771307185
தயவு செய்து தொலைபேசியில் தொடர்பு கொண்டு நேரம் குறித்து வரவும்.



## பிரத்தியேக/குழு வகுப்புகள்

க.பொ.த.(உ/தரம்) : இரசாயனவியல்
க.பொ.த.(சா/தரம்)(09,10): கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம்
மேற்படி வகுப்புகள் உங்கள் இல்லங்களுக்கு வந்து கற்பித்துத் தரப்படும்.(இலகு,தெளிவு)
தொடர்புக்கு: 077-4014345

(5967)


## பெயர் மாற்றம்

வெட்டுக்கட்டை, கரணவாய் தெற்கை பிறப்பிடமாகவும் மதவடி, திருநெல்வேலியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சரஸ்வதி காசியன் ஆகிய நான் 12.08.2011 இலிருந்து எனது பெயரை பரமேஸ்வரி காசியன் என மாற்றம் செய்துள்ளேன் என்பதனை இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

பரமேஸ்வரி காசியன்

(5966)


## வீடு வாடகைக்கு தேவை

வாணி சர்வதேச திருமண நிலைய அலுவலகத்திற்கு யாழ்.நகரப் பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு:0771307185

(C-4158)


# மரண அறிவித்தல்

## செல்வி மகேஸ்வரி பழனிப்பிள்ளை



(முன்னாள் யா/சின்னத்தம்பி வித்தியாலய ஆசிரியை )

அல்வாய் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி மகேஸ்வரி பழனிப்பிள்ளை 2011.08.22-ம் திகதி திங்கட்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் அமரர்களான பழனிப்பிள்ளை-இராசம்மா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியும் கணேசதாஸ், தில்லைராணி (முன்னாள் ஆசிரியை), கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அல்வாய் கிழக்கு கருகம்பன் மயானத்திற்கு பகல் 10.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலட்டி,
அல்வாய் கிழக்கு.

தகவல்:
ப.ஸ்ரீஆனந்தராசா (மைத்துனர்)

# கண்ணீர்க் காணிக்கை



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தரம் 13C (2011/A/L கணிதப் பிரிவில் கல்வி பயிலும் மாணவனாகிய

**செல்வராஜா ஜனகன்**

அவர்களின் திடீர் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**2011 கணித பிரிவு சகமாணவர்களும், ஆசிரியர்களும்.**

(5969)

## இன்று ஒரு தகவல்

# தன் முனைப்பு

ஒரு காட்டில் நரி இருந்தது. ஒருநாள் அதிகாலை வேளையில் அது தன் இருப்பித்தைவிட்டு வெளியே வந்து சிறிது தூரம் நடந்து சென்றது.

அவ்வேளையில் அது தனது நிழலை கவனித்துப் பார்த்த போது, அதனது நிழல் மிகவும் பெரிதாக தென்பட்டது.

காலை நேரத்தில் நிழல் அப்படித்தான் இருக்கும் என்று நரிக்கு விடயம் தெரியவில்லை.

தன்னுடைய நீண்ட பெரிய நிழலைப் பார்த்து ஆச்சரியமடைந்தது.

“ஆகா... நாம் இவ்வளவு பெரிதாகவா இருக்கிறோம். அப்படியென்றால், என்னுடைய காலைச் சாப்பாடு ஒரு யானை அல்லது ஒட்டகத்தை வேட்டையாடினால் தான் சரியாக இருக்கும்” என்று முடிவு செய்தது.

உடனே அது ஒரு யானை அல்லது ஒட்டகத்தை வேட்டையாடுவதற்கு தேடியது ஒன்றுமே கிடைக்கவில்லை.

மதியம் 12 மணி ஆனது அதன் பசி அடங்கவில்லை. அந்த நேரத்தில் தன்னுடைய நிழலை பார்த்தது. மதியம் தெரியும் நிழல் எப்படியிருக்கும்? அது மிகவும் குறுகியதாக தெரிந்தது.

உடனே நரி என்ன நினைத்தது தெரியுமா? “காலை ஆகாரம் சாப்பிடாதபடியால்தான் தனது உடம்பு இளைத்துப் போய்விட்டது என்று கவலைப்பட்டது.

சிறிது நேரம் கழித்து மறுபடியும் தன்னுடைய நிழலைப் பார்த்த போது... அதன் நிழல் குறுகிப் போய் காலடியில் கிடப்பது போல் தெரிந்தது. அதற்கு பணம் ஏற்பட்டது.

“ஐயய்யோ... இன்னும் சிறிது நேரத்தில் நான் இறந்து விடுவேன் போல இருக்கிறது. இப்போது என்ன செய்வது இந்த நேரத்தில் ஒரு எறும்பு கிடைத்தால் போதும் அதை காலை ஆகாரமாக நினைத்துச் சாப்பிடலாம்” என்று நினைத்ததாம்.

எமது நிழல்கூட எம்மைப் போலவே இருக்கிறது. அடிக்கடி மாறிக்கொண்டே இருக்கிறது. அது எப்போதும் ஒரே மாதிரியாக இருக்காது!

மனிதனுக்குள் இருக்கிற “தன் முனைப்பு” கூட ஒரு “Ego” தான். அதுவும் ஒரு நிழல் மாதிரிதான்.

“தன் முனைப்பை நிழல் போலவே ஏற்றுக் கொள்ளுங்கள்” என்று கூறுகிறார் ஓஷோ!

ஒரு காரியத்தை வெற்றிகரமாக செய்து முடித்தால் அந்தச் சமயத்தில் ஒருவித நுட்பமான தற்பெருமை எமக்குள்ளே உருவெடுக்கும். தற்பெருமை மீது நாம் பற்று வைக்கக் கூடாது. பற்றுவைத்தால் ஒரு நிரந்தர விருந்தாளியாக அது தங்கி விடும்.

நிழல் என்பது யாருக்கும் எந்தப் பிரச்சனையையும் ஏற்படுத்துவதல்ல. ஆனால், அந்த நிழலைக் கண்டு நாம் பயப்பட ஆரம்பத்தால் எதிலேயும் வெற்றி காண முடியாது.

நிழலோடு சண்டை போடக்கூடாது. அதுமாதிரி தன்முனைப்போடும் சண்டை போட வேண்டியதில்லை. இல்லாத ஒன்றோடு சண்டை போடுவது எப்படி இருக்குமோ அது இருட்டோடு சண்டை போடுவது மாதிரி தான் அமையும்.

நாம் நிழல் அல்ல... எம்மிடம் இருக்கிற தன் முனைப்பு ஒரு நிழல். எமது நிழலையும் எமக்குச் சமமாகப் பார்க்க ஆரம்பிக்கும்போதுதான் சிக்கல் ஆரம்பிக்கிறது.

நாம் நடந்து கொண்டிருக்கும் போது எமது நிழல் தரையில் விழுகிறது. யாரோ ஒருவர் எமது நிழலின் மேலே காலை வைத்து நடந்து போகிறார்... உடனே அவருடன் “ஏன் எனது நிழலை மிதித்தாய்?” என்று சண்டை போடுவது சரியா? எமக்குத் தெரியும் அது நிழல்தான் என்று அவர் உங்களின் மேலே நடக்கவில்லையே... உங்கள் நிழல் மேலேதானே நடந்தார்.

எங்களின் நிழல் மேலே நடக்கிறவர் எங்களை காயப் படுத்துவதில்லை.

தன் முனைப்பை வேண்டாத ஒன்றாகவும் பார்க்க வேண்டியதில்லை அது இயற்கை. நிழலை உங்கள் முன்னால் வைக்க வேண்டாம். அது உங்களின் பின்னால் இருக்கட்டும்.

‘நிழலின் நிழலாகி விடவேண்டாம்.

நீங்கள் நீங்களாகவே இருங்கள்!’ இதுதான் ஓஷோ கூறும் கருத்தாகும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# புலமைப்பரிசில் பரீட்சையின் போது தவறிழைத்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை

## பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவிப்பு

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் போது தவறிழைத்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள் ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் போது தவறுகள் இடம் பெற்றிருப்பதாக கல்வி அமைச்சுக்கு புகார்கள் கிடைத்துள்ளன.

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை நடைபெறும் பாடசாலைகளுக்கு போதியளவு பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்படவில்லை என்றும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நுகேகொட வித்தியாலயம் ஒன்றில் இந்தப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்த போது வித்தியாலய கட்டடத்திற்குள் நடைபெற்ற இன்னுமொரு கூட்டத்தில் நிகழ்த்தப்பட்ட உரைகள் ஒலிபரப்பப்பட்டதன் மூலம் பரீட்சை எழுதிய பிள்ளைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மூன்றாவதாக கிளிநொச்சியில் உள்ள ஒரு பரீட்சை நிலையத்தில் புலமைப்பரிசில் பரீட்சைக்கு விண்ணப்பிக்காத 8 பிள்ளைகள் பரீட்சை எழுத அனுமதிக்கப்பட்டார்கள் என்ற மற்றுமொரு முறைப்பாடும் கிடைக்கப்பட்டுள்ளது.

இது பற்றி மேலும் தகவல் தெரிவித்த பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க, பரீட்சைகள் திணைக்களம் இந்தப் பரீட்சை எழுத வேண்டிய மாணவர்கள் பற்றிய இறுதி பட்டியலை ஒவ்வொரு பாடசாலைக்கும் அனுப்பி வைத்திருக்கிறது என்றும் அதனை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட பின்னர் சம்பந்தப்பட்ட மாணவர்களை பரீட்சை எழுத அனுமதிப்பது பாடசாலை அதிபர்களின் பொறுப்பு என்றும் கூறினார்.

எனவே, இந்தப் பரீட்சை விடயத்தில் தவறிழைத்த பாடசாலை அதிபர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அவர் கல்வி அமைச்சருக்குவேண்டுகோள் விடுத்துள்ளார்.

மன்னாரில் ஒரு பரீட்சை மண்டபத்திற்குப் பொறுப்பாக இருந்த அதிகாரி அந்தமண்டபத்திற்குபோதிய பொலிஸ் பாதுகாப்பு அளிக்க நடவடிக்கை எடுக்க தவறிய குற்றச்சாட்டின்பேரில் அவரை அந்தப் பதவியில் இருந்து இடைநிறுத்தி அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை தாம் எடுக்கப்போவ தாக பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சட்டவிரோத சிகரெட்டுக்கள் மீட்பு

(கொழும்பு)

சட்டவிரோதமாக வெளிநாட்டிலிருந்து இலங்கைக்குள் கடத்தப்பட்ட ஆறாயிரம் சிகரெட்டுக்களை பொலிஸ் விஷேட அதிரடிப் படையினர் கிராண்ட்பாஸ் பகுதியில் கைப்பற்றியுள்ளனர்.

சட்டவிரோத சிகரெட்டுகளுடன் சந்தேகநபர்கள் இருவரையும் முச்சக்கரவண்டி ஒன்றையும் அவர்கள் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட சட்டவிரோத சிகரெட்டுக்கள் மற்றும் முச்சக்கர வண்டியையும் கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களையும் மேலதிக விசாரணைகளுக்காக கிராண்ட்பாஸ் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

(ஸ்ரீ-2)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 20 |
| உருளைக்கிழங்கு | 75 | 80 |
| பச்சைமிளகாய் | 90 | 60 |
| தக்காளி | 30 | 30 |
| மரவள்ளிக் கிழங்கு | 45 | 60 |
| கோவா | 40 | 30 |
| கரட் | 60 | 40 |
| பூசணி | 25 | 25 |
| புடோல் | 30 | 20 |
| வாழைக்காய் | 40 | 20 |
| சின்ன வெங்காயம் | 60 | 90 |
| பெரிய வெங்காயம் | 85 | 70 |
| பாகற்காய் | 90 | 80 |
| வெண்டிக்காய் | 70 | 40 |
| கருணைக் கிழங்கு | -- | 90 |
| பயற்றங்காய் | 80 | 70 |
| லீக்ஸ் | 50 | 40 |
| பீற்றூட் | 30 | 25 |
| கறிமிளகாய் | 40 | 40 |
| முருங்கைக்காய் | 90 | 80 |
| போஞ்சி | -- | 110 |
| கத்தரிதம்புள்ள | 35 | 15 |
| கீரை - 1 பிடி | 8 | 20 |
| தேசிக்காய் | 80 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 |

## இராசி பலன்

*23.08.2011*
*(ஆவணி 6, செவ்வாய்க்கிழமை)*
*சூரிய உதயம் காலை*
*நவமி பிற்பகல் 2.19 மணிவரை*
*ரோகிணி பிற்பகல் 2.02 மணிவரை*
*இராகுகாலம் 3.05-4.35 மணிவரை*
*சுபநேரம் 10.35-12.05 மணிவரை*
*நல்லைக் கந்தன் கைலாச வாகனம்,*
*அமிர்த சித்தம்.*

**மேடம்** காலைப் பொழுதே நல்ல தகவல் வந்து சேரும், பணத்தேவைகள் பூர்த்தியாகும், சொத்துக்கள் வாங்க எடுத்த முயற்சி வெற்றியளிக்கும், வாக்கு மேன்மையால் பிறரைக் கவருவீர்கள்.

**இடபம்** ஆன்மீக சிந்தனை மேலோங்கும், உடல்நலம் சீராக உணவில் கட்டுப்பாடு தேவை, தொலைபேசி வழித்தகவல் ஆச்சரியப்படவைக்கும்.

**மிதுனம்** ஆறுமுகப் பெருமான் வழிபாட்டால் ஆனந்தம் காணவேண்டிய நாள், அன்பு நண்பர்களின் சந்திப்புக் கிட்டலாம், தாராளமாகச் செலவு செய்து மகிழ்வீர்கள்.

**கடகம்** வருமானம் அதிகரிக்கும் நாள், மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதில் செய்து முடிப்பீர்கள், ஊக்கத்தோடு பணி புரியும் நாள்.

**சிங்கம்** பிறர் உதவியுண்டு சந்தோசமான சம்பவங்கள் நடைபெறும் நாள், தொழிலில் மேன்மையும் விருத்தியும் ஏற்படும், ஆரோக்கியமான நாள்.

**கன்னி** புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடிவுக்கு வரும், பூர்வீகச்சொத்துக்களால் நன்மையுண்டு.

**துலாம்** கவலைகள் தீர கந்தனை வழிபடவேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, பிரயாண பயமுண்டு.

**விருச்சிகம்** களஸ்திர சுகமுண்டு, எண்ணங்கள் எளிதில் நிறைவேறும், இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், செல்வாக்கான நாள்.

**தனுசு** ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படும் நாள், தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள், வியாபார விரோதம் விலகும், கௌரவமான நாள்.

**மகரம்** சுப செய்திகள் வந்து சேரும் நாள், பிள்ளைகள் வழியில் பெருமைப்படும் சம்பவங்கள் நடைபெறலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**கும்பம்** தாய்வழி உறவில் அனுகூலமுண்டு, வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், நீங்கள் நினைத்த நபர் உங்களைத் தேடி வரலாம்.

**மீனம்** உடன்பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர், போசன சுகமுண்டு, முருக வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், செல்வாக்கான நாள்.

வளவன்

# குற்றச் செயல்களை கட்டுப்படுத்த இராணுவம்,பொலிஸார் ரோந்துப்பணி

(கரவெட்டி)

வடமராட்சிப் பிரதேசத்தில் இரவு வேளைகளில் இடம்பெறும் குற்றச் செயலைகளைக் கட்டுப்படுத்த இராணுவம் மற்றும் பொலிஸார் ரோந்துப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, வடமாராட்சியில் கொள்ளை, களவு மற்றும் சட்ட விரோதமான கடத்தல்கள் என்பவற்றை கட்டுப்படுத்துவதற்கு இராணுவம் மற்றும் பொலிஸார் ரோந்துப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.இரவு வேளைகளில் துவிச்சக்கர வண்டியில் செல்லும் இராணுவத்தினரும் பொலிஸாரும் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடும் நபர்களை விசாரணைக்கு உட்படுத்துகின்றனர்.

அத்துடன் வடமராட்சியில் முக்கிய வீதிகளில் இராணுவத்தினரும் பொலிஸாரும் வாகனங்களை சோதனைக்குட்படுத்தி பதிவுகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஸ்ரீ-24)




# அல்வாய் கிழக்கு அத்தாய் வீதியை புனரமைத்து தருமாறு கோரிக்கை

(கரவெட்டி)

அல்வாய் கிழக்கு அத்தாய் வீதியை புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேற்படி கிராம வீதி கடந்த பத்து வருடங்களாக புனரமைக்கப்படாத நிலையில் குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

அத்துடன் பருவகால மழை ஆரம்பமாகவுள்ளதால் இவ் வீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதனால் வீதியால் முற்றாக பயணிக்க முடியாத நிலை ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

மேலும் இக்கிராமத்தில் வசிக்கும் 100 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் இவ்வீதியையே தமது போக்குவரத்துக்காக பயன்படுத்துகின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக்கருத்திற்கொண்டு இவ்வீதியை புனரமைத்துக் தரும்படி மக்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

(ஸ்ரீ-24)

# மீன்சந்தைக்கு புதிய வீதி அமைக்க தென்னிந்திய திருச்சபை உதவி


(காரைநகர்)

காரைநகர் கசூரினாக் கடற்கரையில் புதிதாக அமைக்கப்பட்ட மீன்சந்தைக்கு புதிய வீதி அமைப்பதற்காக தென் இந்திய திருச்சபைக்குச் சொந்தமான ஆதனத்தில் இருந்து 12 அடி அகலமான பாதையை வழங்க முடிவு செய்துள்ளதாக தென்இந்திய திருச்சபையின் யாழ்.அத்தியட்சாதீன பேராயரும், அமெரிக்கன் இலங்கைத் திருச்சபைத் தலைவருமாகிய அதி வணக்கத்துக்குரிய கலாநிதி டி.எஸ். தியாகராஜா காரைநகர் பிரதேச சபைக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிப்பட்டுள்ளதாவது,

கரைநகர் மீனவ சமூகத்தினர் தமக்கு போதியளவு வீதி இல்லாத காரணத்தினால், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஊடாக தென் இந்திய திருச்சபையின் யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தை அணுகி விண்ணபித்தமையினால் கசூரினாக் கடற்கரை ஆஞ்சநேயர் ஆலயத்தின் எல்லையில் இருந்து திருச்சபையின் 12 அடி அகலமான பாதையை தருவதற்கு முடிவு செய்துள்ளோம்.

மீனவ சமூகத்தின் நன்மை கருதி திருச்சபை இந்த வழிப்பாதையை நன்கொடையாக வழங்கவுள்ளது என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-246)



காரைநகர் கசூரினாக் கடற்கரைக்கு கடற்றொழிலாளர்களின் கோரிக்கையை ஏற்று விஜயம் செய்த யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் மற் றும் தென் இந்திய திருச்சபையின் யாழ்.அத்தியட்சாதீன பேராயர் அதி வணக்கத்துக் குரிய கலாநிதி டீ.எஸ்.தியாகராஜா ஆகியோர் தென் இந்திய திருச்சபையால் நன்கொடையாக வழங்கப்படும் பாதையை பார்வையிடுவதையும் படத்தில் காணலாம்.

# சுமந்திரன் எம்.பி.யின் கார் விபத்து

## ஒருவர் படுகாயம்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சமந்திரனின் கார் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில்வல்லைப் பாலத்தில் மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு பாலத்திற்குள் பாய்ந்துள்ளது.

இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ். பாலன் (வயது-35) என்ற குடும்பஸ்தர் படுகாயமடைந்து அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற் றப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் சேதமடைந்த வாகனத்தை கனரக வாகனத்தைப் பயன்படுத்தி பாலத்திலிருந்து பொலிஸார் மீட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக வடமராட்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஸ்ரீ-24)

# நல்லூர் தேர்த்திருவிழாவன்று ஊழியர்களுக்கு விடுமுறை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் தீர்மானத்திற்கு அமைய எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை நல்லூர் கந்தசுவாமி கோவில் தேர்திருவிழாவை முன்னிட்டு சகல வர்த்தக நிலையங்களிலும் கடமையாற்றும் வர்த்த ஊழியர்களுக்கு விடுமுறை வழங்க வேண்டுமென யாழ். வணிகர் கழகம் வேண்டுகோள்விடுத்துள்ளது. (ஸ்ரீ)

# கலந்துரையாடல்

(அச்சுவேலி)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவினால் வடமராட்சியிலுள்ள ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலிருந்தும் 3 ஆற்றலுடைய சிறுவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கான கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் உதவி அரசாங்க அதிபர் எஸ்.திருலிங்கநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(ஸ்ரீ-70)

* * * * * * * * * *

(அச்சுவேலி)

வடமராட்சி கிழக்கு முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பால் விநியோகம் சம்பந்தமான கலந்துரையாடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் குடத்தனை பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு வடமராட்சி உதவி அரசாங்க அதிபர் ந.திருலிங்க நாதன் கேட்டுக் கொள்கின்றார்.

(ஸ்ரீ-70)

# நல்லூர் பிரதேச சபைக்கு தெரிவான உறுப்பினர்கள் பதவியேற்பு

நடைபெற்று முடிந்த உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தலில் நல்லூர் பிரதேசசபைக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பதவியேற்பு வைபவம் நாளை புதன்கிழமை பி.ப 3 மணிக்கு நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் தவிசாளர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியற்கட்சிகளின் பிரமுகர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், நல்லூர் பிரதேசசபை செயலாளர் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

(ஸ்ரீ-3)

# மருதங்கேணி பிரதேச மக்களுக்கான நடமாடும்சேவை

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான தேசிய பாதுகாப்பிற்கும் நிரந்தர தீர்விற்குமான செயற்றிட்டத்தினால் மருதங்கேணி பிரதேச மக்களுக்கான நடமாடும் சேவை எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 3.15 மணிவரை வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க செயலகத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்நடமாடும் சேவையில் சட்ட உதவி ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பதிவாளர் நாயகத் திணைக்களம், வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க செயலகம், பருத்தித்துறை வலயக்கல்விப் பணிமனை, பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி, பருத்தித்துறை பொலிஸ் நிலைய சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு, பால்நிலை வன்முறைக்கு எதிரான அமைப்பு, கடற்றொழில் திணைக்களம், விவசாயத் திணைக்களம், பருத்தித்துறை பிரதேசசபை போன்றவை தமது சேவைகளை வழங்கவுள்ளன.

எனவே, இப்பகுதி மக்கள் இந்நடமாடும் சேவையில் பங்குபற்றுவதன் மூலம் தங்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதுடன் இந்நிறுவனங்களைப் பற்றிய விழிப்புணர்வையும் பெற்றுக் கொள்ள முடியும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

(ஸ்ரீ)

# போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் யாழ்.மாவட்டத்தில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள மோட்டார் இயந்திர திருத்துநர், குளிரூட்டும் இயந்திர வல்லுநர், விவசாய உபகரண திருத்துநர், காய்ச்சி இணைத்தல்ஆகிய பயிற்சி நெறிகளை கற்பிப்பதற்கு உரிய கல்வி தகைமையுடைய போதனாசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு விண்ணப்பிப்போர் 2 வருட அனுபவசான்றிதழ் உடையவராக இருத்தல் வேண்டும்.

இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன் மாவட்ட காரியாலயம்,375, கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ)





ஜீ.ரி.இசற் நிறுவனத்தின் திட்டமிடல் மற்றும் தேவை அடையாளம் காணல்பயிற்சிப்பட்டறை யாழ்.நூலக கேட்போர் கூடத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது. இதில் வடமாகாண பிரதம செயலாளர் ஆர்.சிவசுவாமி, வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி வி.றமேஸ் மற்றும் ஜீ.ரி.இசற் சிரேஷ்ட ஆலோசகர் ஸ்டெபன் எர்லின் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் இதில் கலந்து கொண்ட உயர் அதிகாரிகளையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-என்.குமார்)

# கொழும்பிலும் மர்ம மனிதர்கள் ஊடுருவலால் பதற்றம்

## இராணுவம், பொலிஸ் தேடுதல்

(கொழும்பு)

கொழும்பு புதுக்கடை பகுதிக்குள் மர்ம மனிதர்கள் ஊடுருவியுள்ளதாக வெளியான தகவலால் இப்பகுதியில் நேற்று முன்தினம் காலை பெரும் பரபரப்பும் பதற்றமும் ஏற்பட்டது. மர்ம மனிதர்கள் இருவரை தாம் கண்டதாக சிலர் தெரிவித்ததையடுத்தே இந்த நிலை இங்கு ஏற்பட்டது.

மர்ம மனிதர்கள் இருவர் ஊடுருவியுள்ளதாக தகவல் வெளியானதையடுத்து புதுக்கடை பகுதியில் ஒன்று கூடிய மக்கள் மர்ம மனிதர்களை பிடிப்பதற்கு முயற்சித்துள்ளனர்.

பொல்லுகள், தடிகள் , கற்களை ஏந்தியவாறு மக்கள் மர்ம மனிதர்களை தேடினர். இவ்விடயம் குறித்து பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டதையடுத்து படையினரும் பொலிஸாரும் அப்பகுதிக்கு வந்து தேடுதல் நடவடிக்கையினை மேற்கொண்டனர். ஆனாலும் எவரும் கைது செய்யப்படவில்லை.

நேற்று முன்தினம் அதிகாலை 2 மணியளவில் மர்ம மனிதர்கள் இருவரை கண்டதாகவும் இவர்கள் வீடுகளின் கூரை மீது ஏறி தப்பியோடியதாகவும் புதுக்கடை வாசியொருவர் தெரிவித்துள்ளார்.

கறுப்பு நிற காற்சட்டையும் அதே நிறத்திலான ரீசேட்டும் அணிந்திருந்த இருவரே இவ்வாறு புதுக்கடை பகுதிக்குள் ஊடுருவியதாக நேரில் கண்டவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்திலும் மலையகத்திலும் மர்ம மனிதர்களின் செயற்பாடுகள் அதிகரித்து வரும் நிலையில் கொழும்பிலும் சில பகுதிகளில் மர்ம மனிதர்களின் ஊடுருவல்கள் குறித்து தகவல்கள் வெளியிடப்படுகின்றன.

ஆனாலும் இத்தகைய மர்மமனிதர்கள் எவரும் இல்லையெனவும் இவை வெறும் கட்டுக்கதை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ஸ்ரீ-2)

# ரணிலுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தக் கோரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தேசிய தொழிலாளர் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் லால் பெரேராவினால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவிடம் எழுத்து மூலம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திடம் கட்சியை ரணில் அடகு வைத்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஜனநாயக ரீதியான 17 ஆம் திருத்தச் சட்ட மூலம் இரத்து செய்யப்பட்டு, 18 ஆம் திருத்தச் சட்ட மூலத்தை அமுல்படுத்த ரணில் விக்ரமசிங்க வழியமைத்துக் கொடுத்துள்ளார்.

சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்காக பாரியளவில் ஆர்ப்பாட்டம் நடத்துவதாக சூளுரைத்து அதனை நடைமுறைப்படுத்தாமை, தனியார்துறை ஓய்வூதிய சட்டத்திற்கு எதிராக குரல் கொடுக்காமை உள்ளிட்ட 13 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் திறமைசாலிகளை அரசாங்கத்தின் சார்பில் ரணில் வேட்டையாடி வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். ரணிலின் சர்வாதிகாரப் போக்கிற்கு சிரேஷ்ட உறுப்பினர்கள் அளித்து வரும் ஆதரவு அதிருப்தி அளிப்பதாக லால் பெரேரா தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# மீண்டும் டெங்கு பரவும் அபாயம்; சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் வடகீழ் பருவப் பெயர்ச்சி ஆரம்பிப்பதனால் மீண்டும் டெங்கு நோய் பரவும் அபாயம் காணப்படுவதாக சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடகீழ் பருவப் பெயர்ச்சி மழை நாட்டின் பல பகுதிகளுக்கு கிடைப்பதன் காரணமாக நாடு முழுவதும் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்கு பாதுகாப்பு அமைச்சின் பூரண ஒத்துழைப்பும் பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் டெங்குக் காய்ச்சல் காரணமாக 121 மரணங்கள் பதிவாகியுள்ளதோடு ஒரு இலட்சத்து 60 ஆயிரத்து 63 பேர் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் ஆய்வுப் பிரிவு குறிப்பிடுகின்றது.

கொழும்பு மாவட்டத்தில் 6 ஆயிரத்து 345 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 58 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# கொலைச் சம்பவம் தொடர்பில் நான்கு சந்தேகநபர்கள் கைது

(கொழும்பு)

குளியாப்பிட்டிப் பிரதேசத்தில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பாக நான்கு சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபர் கூரிய ஆயுதத்தால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

14 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)


## நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை

### அறிவித்தல்

"நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய மகாசபை உறுப்பினர்களை சேர்த்துக் கொள்வதற்கான முன்னெடுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில் மகாசபை உறுப்பினர்களை சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்கள் தொடர்ந்து ஏற்றுக் கொள்ளப்படும். எனினும் 2011.09.30ஆம் திகதிக்கு முன் இணைந்து உறுப்புரிமை பெற்றுக் கொண்டவர்கள் மட்டுமே அடுத்த நிர்வாகசபை தெரிவின் போது மகாசபை உறுப்பினர்களாகப் பங்குபற்ற முடியும் என ஆலய யாப்பினூடாக வரையறுக்கப்பட்டுள்ளதால், உரிய தகைமை உடையவர்கள் மேற்குறித்த காலப்பகுதிக்குள் ஆலயக் கருமபீடத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் விண்ணப்பப்படிவத்தை பெற்றுப் பூர்த்தி செய்து மீளவும் கருமபீடத்தில் ஒப்படைத்து ஆலய மகாசபை உறுப்புரிமையை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்."

சி.இராஜரஞ்சன்,
தலைவர்/ பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பாளர்,
பூர்வீக நாகதம்பிரான் ஆலயம், நாகர்கோவில்.

(சி-4155)





கனவு நனவாகிடும்
வியாபாரம் ஓங்கிடும்
செல்வம் பெருகிடும்
இவை அனைத்தும்
நேஷன்ஸ் லீஸிங் மூலம் கிடைத்திடும்

உங்கள் எண்ணங்களை நிறைவேற்றும் லீஸிங் பங்காளி

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் நேஷன்ஸ் லீஸிங் சேவையின் மூலம்
உங்களுக்கு தேவையான வாகனம் அல்லது இயந்திர உபகரணங்களை இலகுவாகவும்
சிறந்த கொடுப்பனவு முறையிலும் இன்றே பெற்றுக்கொள்ளுங்கள்.

அருகிலுள்ள நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியை நாடுங்கள்.

அழையுங்கள்: (011) 4 791 777
(011) 4 218 218

www.nationstrust.com

Nations Trust Bank PLC - PQ 118

Nations Trust Bank
Nations Leasing

www.sagittarius.lk

# வவுனியாவில் பொலிஸார் மீது பொதுமக்கள் தாக்குதல்

## 10 பேர் கைது

வவுனியா பெரியகோமரசன்குளம் கிராமத்தினுள் சிவில் உடையில் நடமாடிய சந்தேகத்திற்குரிய மூவர் மீது கிராம மக்கள் கடந்த சனிக்கிழமை இரவு தாக்குதல் நடத்தியுள்ளனர். பின்னர் நடத்தப்பட்ட விசாரணையின்போது இவர்கள் பொலிஸார் என்பது தெரியவந்துள்ளது.

இவர்கள் மர்மமனிதர்கள் அல்லது கொள்ளையர்களாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் கிராமத்தவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு வந்த பொலிசாருக்கும் கிராமமக்களுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டதையடுத்து இதனைக் கட்டுப்படுத்த இராணுவம் அழைக்கப்பட்டது. இந்த சம்பவத்தில் ஊர் இளைஞர்கள் இருவர் காயமடைந்துள்ளனர்.

பத்து பேரை இராணுவம் விசாரணைக்கு கைது செய்து அழைத்து சென்றது. கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கை எடுக்குமாறு கிராம மக்கள் ஜனாதிபதியின் இணைப்பாளர் சிவநாதன் கிஷோரிடம் நேற்று முன்தினம் காலை முறையிட்டனர்.

இதற்கிடையில் பொலிஸாரை தாக்கினார்கள் என்ற குற்றச்சாட்டில் கைதான 10 பேரும் நேற்று முன்தினம் காலை வவுனியா மாவட்டதில் நீதிவான் எம். சிற்றம்பலம் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த சம்பவத்தில் காயமடைந்த சிவில் உடையில் சென்ற மூன்று பொலிஸாரும் இளைஞர்கள் இருவரும் வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ஸ்ரீ-2)

# பூந்தோட்டம் இடம்பெயர்ந்தோர் முகாமில் மின்சாரம், நீர் விநியோகம் துண்டிப்பு

(கொழும்பு)

கடந்த 16 வருடங்களாக வவுனியா பூந்தோட்டம் இடம்பெயர்ந்தோர் முகாமில் வசித்து வரும் 187 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 200 பேருக்கு வழங்கப்பட்டு வந்த மின்சாரம் மற்றும் நீர் விநியோகத்தை 10 நாட்களாக அதிகாரிகள் துண்டித்துள்ளனர்.

கிளிநொச்சியில் மீள்குடியேற மறுப்பு தெரிவித்துள்ள இந்த மக்கள் தமக்கு வவுனியாவில் காணிகளும் வீடுகளும் வழங்கப்பட வேண்டும் எனக் கோரி வருவதாகவும் இது நியாயமற்ற கோரிக்கை எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இடம்பெயர்ந்த அனைத்து மக்களையும் விரைவில் அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்றுமாறு அரசாங்கம் விடுத்துள்ள உத்தரவு காரணமாக தாம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாகவும் பூந்தோட்ட அகதி முகாமில் உள்ள மக்களை கிளிநொச்சிக்கு அனுப்பி வைப்பதற்காகவே தாம் மின்சாரம் மற்றும் நீர் விநியோகத்தை துண்டித்துள்ளதாகவும் அதிகாரிகள் கூறியுள்ளனர். (ஸ்ரீ-2)

# போர்க் குற்றத்திற்காக இலங்கை அரசை பகிரங்கமாக விசாரிக்க வேண்டும்

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தெரிவிப்பு

யுத்தக் குற்றத்திற்காக இலங்கை அரசு பகிரங்கமாக விசாரிக்கப்பட வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டி.ராஜா தெரிவித்துள்ளார். நாகர் கோவில் பிரதேசத்தில் செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில், இலங்கை தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும், காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு இலங்கை தமிழர் நலனில் எந்த நிலைப்பாட்டை எடுத்துள்ளது என்பதை விளக்க வேண்டும், இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்படுவது தடுத்து நிறுத்தப்படவேண்டும், கச்சதீவு உடன்பாட்டை இரத்து செய்ய வேண்டும் என்று இலங்கையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும். மத்திய அரசு பல்வேறு நிலைகளில் தோல்வி கண்டுள்ளது. விலைவாசியை கட்டுப்படுத்த மத்திய அரசால் இயலவில்லை.

இந்திய பொருளாதாரம் பெரும் நெருக்கடியில் உள்ளது. பெற்றோலிய பொருட்களின் விலை உயர்ந்து வருகிறது. வேலை இல்லா திண்டாட்டமும் வறுமையும் அதிகரித்துள்ளது. இதனால் நாடு தழுவிய அளவில் ஒரு பதற்றமான சூழல் உருவாகியுள்ளது என்றார். (ஸ்ரீ-2)

# இலங்கை விடயத்தில் பா.ஜ.க தலையிடவேண்டும்

## பிரித்தானிய தமிழர் பேரவை வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாகட்சி தலையிட வேண்டுமென பிரித்தானிய தமிழர் பேரவையின் மனிதாபிமான ஆலோசனைக்கான பணிப்பாளர் நாதன் பத்மநாதன் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜை நாதனும் பாரதீய ஜனதாவின் வெளிவிவகாரங்களுக்கான ஏற்பாட்டாளர் விஜேஜொலியும் சந்தித்துள்ளனர்.

இச்சந்திப்பின் போது விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்ட பின்னர் இலங்கையின் தற்போதைய நிலைவரங்கள் குறித்து சுஷ்மா சுவராஜுக்கு அவர்கள் விபரித்துள்ளனர்.

இதேவேளை அடுத்த மாதம் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ள சுஷ்மா சுவராஜ் உத்தேசித்திருந்த நிலையில் அதனை இரத்து செய்யுமாறு உலகத் தமிழர் பேரவைத் தலைவர் வலியுறுத்தியதாக செய்திகள் குறிப்பிடுகின்றன.

தமிழ் மக்கள் மீதான தாக்குதலை நிறுத்துமாறும் அவர்களின் மத சுதந்திரத்துக்கான தாக்குதல்களை முடிவுக்கு கொண்டு வருமாறும் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு முன்னணி அரசாங்கம் செயற்பட வேண்டுமென அதற்கு அழுத்தம் கொடுக்குமாறு பாரதீய ஜனதாவிடம் பிரிட்டிஷ் தமிழர் பேரவை கோரியுள்ளது.

இந்த விடயத்தை பாராளுமன்றத்தில் எழுப்புவதாக சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார். தமிழர்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பாரதீய ஜனதா உறுதிப்பாட்டுடன் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# கிண்ணியா பிரதேசத்தில் பதற்றநிலையை கட்டுப்படுத்த புதிய இராணுவ படையணி

(கொழும்பு)

கிண்ணியா பிரதேசத்தில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையைக் கட்டுப்படுத்துவதற்காக இராணுவத்தின் புதிய படையணியொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் பிரிகேடியர் அத்துல் கொப்பிலி தலைமையிலான 224 ஆவது படையணி உருவாக்கப்பட்டுள்ளதாக இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் ஹப்புஆராச்சி தெரிவித்துள்ளார்.

அண்மைய நாட்களாக கிண்ணியாவில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையை அடுத்து அப்பிரதேசத்தின் பாதுகாப்பை பலப்படுத்தி நிலைமையினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக மேலதிக இராணுவத்தினர் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மேலதிக படையினரை கட்டுப்படுத்தி பிரதேசத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காகவே மேற்படி படையணி உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு புதிதாக உருவாக்கப்பட்டுள்ள படையணி அங்கு செயற்பட்டு வரும் படையணிகளுடன் இணைந்து செயற்படாது தனித்துவமாகவே பிரதேசத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் என்று இராணு வப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

கிண்ணியா பிரதேசத்துக்குள் உட்புகுந்த மர்ம மனிதர்கள் காரணமாக கடந்த 15 ஆம் திகதி பொதுமக்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையில் மோதல் சம்பவமொன்று இடம்பெற்றது. இதனால் அப் பிரதேசத்தில் பெரும் பதற்றநிலை ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவிருந்த மாணவர்கள் உட்பட 25 பேர் கைது செய்யப்பட்டனர். அத்துடன் திருகோணமலை மாவட்ட பொதுச் செயலாளர் மேஜர் ஜெனரல் ஆர்.டி.சில்வா மற்றும் இராணுவத்தின் கிழக்கு மாகாணக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பெரேரா ஆகியோர் பல்லாயிரக்கணக்கான பொதுமக்களால் கிண்ணியா பிரதேச செயலகத்துக்குள் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# கொழும்பு மாநகர மேயர் வேட்பாளராக மிலிந்த


(கொழும்பு)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கொழும்பு மாநகர சபையின் மேயர் வேட்பாளராக மிலிந்த மொரகொடவின் பெயரிடப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இதற்கமைய ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் குழுவின் தலைமை வேட்பாளராகவும் அவர் செயற்படுவார் என கட்சியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் இந்த தீர்மானம் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. (ஸ்ரீ-2)



சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தால் இலவச தையல் இயந்திரம் வழங்கும் நிகழ்வு துன்னாலை அல்லையம்பதி முருகன் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்ட தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தாணு மகாதேவக் குருக்கள் தம்பதிகள் மற்றும் ஒன்றியச் செயலாளர் சிவஸ்ரீ சர்வேஸ்வர ஸ்ரீகாந்தக்குருக்கள் ஆகியோர் பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள் வழங்குவதை படங்களில் காணலாம்.

# நாட்டின் நன்மதிப்பை மேம்படுத்த புலம்பெயர் மக்களின் ஒத்துழைப்பு தேவை



## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச ரீதியில் இலங்கையின் நன்மதிப்பை மேம்படுத்துவதற்கு புலம்பெயர் இலங்கையர்களின் ஒத்துழைப்பு இன்றியமையாதது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வலுவான தொடர்பாடல் வலையமைப்பு ஒன்றை கட்டியெழுப்புவதன் மூலம் சர்வதேச சமூகத்தில் இலங்கை தொடர்பாடல் சாதகமான நிலையை ஏற்படுத்த முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பிரசாரங்களை முறியடிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

அண்மையில் அலரி மாளிகையில் அவுஸ்திரேலிய மற்றும் ஐரோப்பிய புலம்பெயர் இலங்கையர்களை சந்தித்த போது ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

போலியான பிரசாரங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு சாதகமான வகையில் சர்வதேச ரீதியில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் அதற்கு புலம்பெயர் இலங்கையர்களின் காத்திரமான பங்களிப்பு அவசியமானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

# பதுளை பிரதேச சபையின் தலைவர் உள்ளிட்ட 2பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

பதுளை ஆளுபோமுல்ல பகுதி வீடொன்றின் மீது தாக்குதல் நடத்தினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பதுளை பிரதேச சபையின் தலைவர் உள்ளிட்ட இரண்டு சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய நேற்று காலை சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

பதுளை நீதிவான் முன்னிலையில் சந்தேகநபர்கள் ஆஜர்செய்யப்பட்டபோது அவர்களை பிணையில் விடுவிப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமிரவு குறிப்பிட்ட வீட்டுக்குள் நுழைந்து நடத்தப்பட்ட தாக்குதலால் சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# குழாய் கிணற்றிலிருந்து வாயு வெளியேற்றம்

(கொழும்பு)

புவியியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தினால் தோண்டப்பட்ட குழாய் கிணறு ஒன்றிலிருந்து விசேட வாயுவொன்று வெளியேறுவதாக வண்ணாத்திவில்லு பொலிஸார் தெரிவித்தனர்.


புத்தளம், அரவக்காடு மற்றும் எழுவான் குளம் பகுதியில் நிலத்தடி பகுதியை பரீட்சிப்பதற்காக ஒரு வாரத்திற்கு முன் இக்குழாய் கிணறு தோண்டப்பட்டது.

இவ்வாயு வெளியேறுவதை அறிந்து அச்சமடைந்த ஊழியர்கள் இது குறித்து உடனடியாக பொலிஸாருக்கு அறிவித்தனர்.

சீமெந்து தயாரிப்புக்கான இப்பகுதியிலிருந்து சுண்ணாம்புக்கல் மற்றும் ஏனைய கனியப் பொருட்கள் எடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இவ்வாயு வெளியேற்றம் குறித்து புவியியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகமும் வண்ணாத்திவில்லு பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஸ்ரீ-2)



இலங்கை வங்கியின் கணனி வலையமைப் பின்னல் சேவையுடன் இணைந்து கொடிகாமக்கிளை ஆரம்ப திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மூத்த வாடிக்கையாளர் சுப்பிரமணியம் பரஞ்சோதி மற்றும் பிரதம விருந்தினரான வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளர் எ.ஈ.டி. சுமண சிறி ஆகியோர் இணைந்து நாடாவெட்டி ஆரம்பித்து வைப்பதனை படத்தில் காணலாம். (படம்:-சாவகச்சேரி செய்தியாளர்)

# சட்டவிரோத வாகன உற்பத்தி நிலையம் சுற்றிவளைப்பு

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் இயங்கி வந்த வாகன உற்பத்தி நிலையமொன்றை விசேட அதிரடிப்படையினர் சுற்றி வளைத்துள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட வாகன உதிரிப் பாகங்களைக் கொண்டு இந்த வாகன உற்பத்தி நிலையம் இயங்கி வந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

ஹோமாகம கொட்டாவப் பிரதேசத்தில் இந்த வாகன உற்பத்தி நிலையம் இயங்கி வந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்த சட்டவிரோத வாகன உற்பத்தி நிலையத்தின் உரிமையாளர் மற்றும் பணிப்பாளர்களை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

பல இலட்சம் ரூபா பெறுமதியான சொகுசு வாகனங்கள் இந்த உற்பத்தி நிலையத்தின் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

பெருமளவிலான வாகனங்களும் பொறியியலாளர்களும் வாகன உதிரிப்பாகங்களும் மீட்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

(ஸ்ரீ-2)

# மூவரின் தூக்குத் தண்டனையை இரத்து செய்ய கோரிக்கை

## அமெரிக்காவில் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்




(கொழும்பு)

முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோர்களின் தூக்கு தண்டனையை இரத்து செய்யக் கோரி அமெரிக்காவில் உள்ள தமிழ் உணர்வாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அத்துடன் பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரின் தூக்கு தண்டனையை இரத்து செய்வதற்காக கையெழுத்து பிரசாரமும் நடைபெற்றது. சான் ஒசேகன்னிவேல் உட்பட அருகில் இருந்த பல நகரங்களில் இருந்தும் தமிழர்கள் குடும்பத்துடன் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோர்களின் தூக்குத் தண்டனையை இரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை மனுவில் அவர்கள் கையெழுத்துகளை சேகரித்தனர்.

இந்திய தூதரகத்தின்மூலம் இந்த கோரிக்கை மனு இந்திய அரசிற்கும் தமிழக முதல்வருக்கும் அனுப்பி வைக்க இருப்பதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

மரண தண்டனைக்கு எதிரான பதாகைகளை கைகளில் ஏந்தியவண்ணம் பிரிமாண்ட சென்ரல் பூங்காவை சுற்றி அவர்கள் ஊர்வலமாக சென்றனர். (ஸ்ரீ)

# கிறிஸ் பூதம் என்ற பெயரில் பேஸ்புக் இணையத் தளங்கள்

(கொழும்பு)

கிறிஸ் பூதம் தொடர்பாக மக்கள் மத்தியில் பெரும் அச்ச சூழல் ஏற்பட்டுள்ள நிலையில் சில நபர்கள் கிறிஸ் பூதம் என்ற பெயரில் பேஸ்புக் இணையத்தள கணக்குகளை ஆரம்பித்துள்ளதாக தெரியவருகிறது.

பல்வேறு புகைப்படங்களை பதிவேற்றி இவர்கள் இந்த கணக்குகளை ஆரம்பித்துள்ளனர். இதன் மூலம் அச்சமூட்டும் நடவடிக்கை மேலும் உக்கிரமடையும் என நோக்கர்கள் கூறியுள்ளனர். எவ்வாறாயினும் இந்த விடயம் குறித்து தமக்கு முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கவில்லை என இலங்கை இணையத்தளங்கள் தொடர்பான அமைப்பு தெரிவித்துள்ளது.

(ஸ்ரீ-2)

# சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் தொடர்பான சட்டத்தில் திருத்தம்

(கொழும்பு)

சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்காக நீதி அமைச்சுடன் இணைந்து செயற்றிட்டமொன்றை தயாரித்துள்ளதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது இந்த நடவடிக்கை தொடர்பாக கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திணைக்களத்தின் பணிப்பாளர் சரத் அபேகுணவர்த்தன கூறியுள்ளார்.

குறிப்பாக சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு புனர்வாழ்வளித்து சமூகமயப்படுத்தும் நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்கான சட்டங்களை வகுப்பது தொடர்பாக இதன்போது அதிக கவனம் சலுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

(ஸ்ரீ-2)

# நல்லூர் ஆலய சூழலில்...

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்தி ஆலய மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு நடைபெற்று வரும் கம்பராமாயாணம் பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதாவாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா *அனுமன் தூது* பற்றி இசைப் பேருரை நிகழ்த்தவுள்ளார்.

★ ★ ★ ★ ★

யாழ்ப்பாணம் சிந்மயா மிஷனால் நல்லூர் முருகன் மஹோற்சவத்தை முன்னிட்டு தினமும் மாலை 6.30 மணிக்கு நடராசா பரமேஸ்வரி மண்டபத்தில் ஆன்மீகச் சொற்பொழிவுகள் நடைபெற்று வருகின்றது. இதில் இன்றைய தினம் *நம்மால் முடியும் நம்பு!* எனும் தொனிப் பொருளில் யாழ்ப்பாணம் சிந்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியர் பிரம்மச்சாரி ஜாக்ரத் சைதன்யா சொற்பொழிவாற்றவுள்ளார்.

★ ★ ★ ★ ★

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ஆன்மீக சிந்தனையுடன் நடத்தும் சமய சொற்பொழிவுகளும் கலை நிகழ்வுகளும் தினமும் மாலை 3 மணி முதல் 6 மணிவரை நடைபெற்று வருகின்றது.

இதில் 20 ஆம் திருவிழாவான இன்றைய நிகழ்வில் *வாக்கிற்கு அருணகிரி* என்ற தொனிப் பொருளில் சிவ.மகாலிங்கம் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். அதனைத் தொடர்ந்து ஒல்லுடை ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை, சித்திரமேழி ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை, சங்கானை நிற்சாமம் ஞான வைரவர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறும்.

★ ★ ★ ★ ★

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பளை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கின் 20 ஆவது நாள் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும். இன்றைய நிகழ்வில் செல்வி தனசொரூபி நவரத்தினத்தின் பாட்டுக்கச்சேரி இடம்பெறும். இதில் வயலின்- கே.குகபரன்,மிருதங்கம்- எஸ்.துரைராசா, முகர்சிங்- என். சதீஸ்குமார் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக பங்கேற்கவுள்ளனர்.

## இலங்கையின் கறுவா தொடர்பாக விசேட மரபணு பரிசோதனை

இலங்கையின் கறுவா தொடர்பாக விசேட மரபணு பரிசோதனையை நடத்துவதற்கு ஆராய்ச்சியாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

உலகின் மிகவும் தூய்மையான கறுவா இனம் இலங்கையிலேயே உள்ளது என்பதை சர்வதேச மட்டத்தில் உறுதிப்படுத்துவதே இதன் நோக்கம் என தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனத்தின் உயிரியல் தொழிநுட்ப ஆராய்ச்சியாளர் வஜிர வீரசேகர குறிப்பிடுகிறார்.

சீனா மற்றும் இந்தோனேசியா போன்ற நாடுகள் கெஷியா என்ற பெயரில் தரம் குறைந்த கறுவா இனமொன்று சர்வதேச சந்தைக்கு விநியோகிக்கப்படுகின்றமை தெரியவந்துள்ளது.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் ஆய்வு தொடர்பான அறிக்கை வெளியிடப்பட்டதன் பின்னர் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கறுவாவுக்கான கேள்வி அதிகரிக்குமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## நாடு முழுவதும் 72 சட்ட ஆலோசனை நிலையங்கள்

மக்களுக்கு இலவசமாக சட்ட ஆலோசனையை பெற்றுக்கொடுப்பதற்காக நாடு பூராகவும் 72 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக சட்ட உதவி ஆணைக்குழு தெரிவிக்கிறது.

எதிர்காலத்தில் மேலும்3 நிலையங்களை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி எஸ். எஸ். விஜேரத்ன தெரிவிக்கிறார்.

குறித்த ஆலோசனை நிலையங்களூடாக எந்தவொரு நபருக்கும் சட்டரீதியான பிரச்சினைகளுக்கு ஒத்துழைப்பினை இலவசமாக பெற்றுக்கொள்ள முடியுமென தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் தொடக்கம் அம்பாந்தோட்டை வரை 72 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் வாரியபொல, கெக்கிராவ மற்றும் பருத்தித்துறை ஆகிய பகுதிகளில் 3 நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் சட்டத்தரணி எஸ்.எஸ்.விஜேரத்ன குறிப்பிடுகிறார்.

கடந்த ஆண்டு 52ஆயிரம் பேருக்கு சட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் வரையறையற்ற வகையில் இந்த உதவிகள் வழங்கப்படுவதாகவும் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் குறிப்பிடுகிறார். (ஸ்ரீ-2)

## புத்தளம் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களை கைதுசெய்ய நடவடிக்கை

புத்தளம் பிரதேசத்தில் ஏற்பட்ட அமைதியின்மையுடன் தொடர்புடையவர்களை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தற்போது பிரதேசத்தில் அமைதி நிலவுவதாக புத்தளம் பிரதேசத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவீ அபேகுணவர்தன கூறியுள்ளார்.


புத்தளம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட அமைதியின்மையின்போது நடத்தப்பட்ட தாக்குதலில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அமைதியின்மையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக சென்றிருந்த போக்குவரத்துப் பிரிவில் கடமையாற்றும் கான்ஸ்டபிளே உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

கடும் காயங்களுக்கு இலக்கான அவர் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார். இந்நிலையில் காயமடைந்து புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஐவரில் நால்வர் மேலதிக சிகிச்சைக்காக குருநாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

புத்தளம் மணல்குன்று பிரதேசத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் மூவர் நடமாடுவதாக பரவிய தகவலை அடுத்து இந்த அமைதியின்மை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## நல்லூரான் திருவடிக்கு இன்று கைலாசவாகனத் திருவிழா



### தொல்லைகள் போக்கிடும் முருகன்

தொல்லைகள் போக்கிடும் முருகன் இவன்
தொழுவோரை காத்திடும் வேலன் அவன்
நல்லையில் குடிகொண்ட கந்தன் இவன்
நாடிவரும் பக்தர் மனம் கவர்ந்த கடம்பன் அவன்
எல்லையில்லா துன்பங்களை போக்கிடவே- குமரன்
எழுந்தருளி வருகின்றான் திரு வீதியிலே

காரை. விது.தீபன்

### விழிதிறவாய் வேலா!

கோலமயில் ஏறிக்குன்றுதோறாடி வந்து
ஞாலம் காத்தருள நல்லையிலே உறை கந்தா
காலத்தின் கொடுமைதனைக் கண்கொண்டு பாரய்யா
சாலச்சிறந்ததென்று சான்றோர் பகர்ந்த இனம்
சீலம் இழந்தின்று சீரழியும் நிலைபாராய்
நீல நிறந்தோனின் நேசமிகு மருகோனே
ஆலம் உண்டவர்க்கு ஆசனாய் ஆனவனே
ஓலம் இருக்கின்றோம் ஓடிவந்து காத்தருள்வாய்

பத்மசரஸ்- புலோலி

### கலாசாரம் பேணி கந்தனை தொழுவோமடி ஞானத்தங்கமே

சைவத்தமிழ் பண்பாட்டை பேணிவரும்
சரித்திரம் எங்களுக்கு சொந்தமடி ஞானத்தங்கமே
வையகத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு
வழிகாட்டுவானடி நல்லூரான் ஞானத்தங்கமே
எல்லோரும் சேர்ந்து எங்கள் கலாசாரம் பேணி
எழிலார்ந்த பூலோக கைலாசத்துக்குப் போவோமடி ஞானத்தங்கமே
நல்லூரான் நமையங்கு அரவணைத்து அருள்தந்து
நலம்காண வைப்பானடி ஞானத்தங்கமே

மதுரகவி, காரை.எம்.பி.அருளானந்தன்.

### கருணை தந்திடுவாய் நல்லைக்கந்தா!

மறைகள் நான்கும் போற்றும்
மாண்பு மிகு செவ்வேளே
கறையானுக் கிளை யோனே
கருணை உள்ள வடிவேலவனே
நிறைவாக அடியவர்கள் நித்திலம்
உன்னை துதித்து வழிபடுவதற்கு
குறைவில்லா பெருங்கருணை என்றும்
தந்திட வேண்டுகிறேன்- நல்லைக்கந்தா!

தர்மகுலசிங்கம் சுதர்ஷினி,
நல்லூர்.

JAFFNA ELECTRICAL



LG



141, Power House Road, Jaffna.
T.P:0212228378, 0212225766.
(C-4151)
Abans

# மற்றொரு கோணம்



## ஆசை உயிருக்கே அடிப்படையான தன்மை

**ஆயிரம் கோடி, இரண்டாயிரம் கோடி என சொத்து சேர்த்திருக்கும் பணக்காரர்கள் யாரும் நேர்மையாக சேர்த்ததாக வரலாறு இல்லை. அத்தனைக்கும் ஆசைப்படு அதையும் நேர்மையாகச் செய்ய நினை என்பதெல்லாம் நடைமுறைக்கு ஒத்துவராத தத்துவங்களாகத் தோன்றுகிறதே?**

மற்றவர்களைப்பற்றி விட்டு விடுங்கள். ஆசை, உயிருக்கே அடிப்படையான தன்மை. மக்கள்

### ஆன்மீகம் 19

ஆசையை விட்டுவிட மிகத்தீவிரமாக முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். உங்கள் வாழ்வின் ஒரே துன்பம், வாழ்க்கை நீங்கள் நினைத்த விதமாக நடக்கவில்லை என்பதுதான். நிறைவேறாத ஆசையால்தான் மனிதனுக்குத் துன்பம் நேர்கிறது. 100 விடயங்கள் ஆசைப்பட்ட விதமாக நடந்து, ஒரு விடயம் உங்கள் ஆசைப்படி நடக்காமல் போனாலும் அது துன்பமாய் இருக்கிறது. எனவே, ஆசையை விட்டு விட வேண்டுமென்று உங்களுக்குப் போதித்து விட்டார்கள். கவனித்துப் பார்த்தால், உங்கள் உயிருக்கு அடிப்படையே ஆசைதான். ஆனால், ஆசையை விட்டுவிட வேண்டுமென்று உங்களுக்கு சொல்லியிருக்கிறார்கள் . ஆசையை விட வேண்டும் என்பதே ஒரு ஆசைதானே?

நிறைவேறாத ஆசை உருவாக்கிய பாதிப்பின் காரணமாக மக்கள் ஆசையை விட்டுவிட வேண்டுமென்ற ஒரு ஆசையை உருவாக்கியிருக்கிறார்கள். ஆசையை விட்டுவிட்டால் நீங்கள் சாப்பிடவும் முடியாது, வாழவும் முடியாது, எதுவும் செய்ய முடியாது. உங்கள் ஆசை பெரிதாக இருந்தாலும் மிகச் சிறிதாக இருந்தாலும் அது நிறைவேறாமற் போகும் போது நேர்கிற பாதிப்பில் எந்த மாற்றமும் இல்லை.

ஆசையென்பது அடிப்படையான சக்தி, ஆசையின் அடிப்படை விரிவடைய வேண்டும் என்பது தான். தற்போது நீங்கள் எந்த நிலையில் இருந்தாலும் சரி, அதற்கும் மேல் இன்னும் சிறிது வளர வேண்டும் என்ற ஆசை எப்போதுமே இருக்கிறது. அந்த ஆசை நிறைவேறியவுடன் இன்னும் சிறிது வளர வேண்டும் என்கிற ஆசை வருகிறது. உங்களுக்குத் தெரிந்த விதத்தில் மேலும் மேலும் வளர்ச்சியடைய வேண்டும், விரிவடைய வேண்டும் என்ற ஆர்வம் எப்போதுமே இருக்கிறது. சிலருக்கு தங்களிடம் உள்ள பணத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசை, சிலருக்கு இன்பங்களை அதிகரித்துக்கொள்ள ஆசை, சிலருக்கு அன்பு, சிலருக்கு அறிவு, இப்படி உங்களுக்கு எது தெரியுமோ அதில் விரிவடைய வேண்டும் என்ற ஆசை எப்போதுமே இருக்கிறது.

இன்னும்கொஞ்சம், இன்னும் கொஞ்சம் என்று இந்த விரிவடைதல் தொடர்ந்து கொண்டே இருக்கிறது இது முழுமை பெறுவதாகத் தெரியவில்லை. அப்படியானால், இந்த ஆசையின் அடிப்படைத்தன்மை



எல்லையில்லாமல் போக வேண்டும் என்பதுதான். எல்லையில்லாத தன்மை இந்த உடலோடு அடையாளம் எடுத்தவுடன் ஆசை என்பது பிறந்து விட்டது.

எல்லையில்லாமல் வளர வேண்டும், எல்லையில்லாமல் விரிவடைய வேண்டும் என்கிற ஆசை, விழிப்புணர்வில்லாமல் இப்போது பொருள் தன்மையை நோக்கிப் போய் விட்டது. பொருள் தன்மையில் எல்லையில்லாமல் போக நிச்சயம் வாய்ப்பில்லை. பொருள் தன்மை என்பதே எல்லையோடு இருப்பது தான். மனிதன் விரும்பாததும் இந்த எல்லையைத் தான். எல்லையை எவ்வளவு அதிகரித்தாலும், இன்னும் விரவடைய வேண்டும், அந்த எல்லையை உடைத்துச் செல்ல வேண்டும் என்ற ஆர்வம் எப்போதும் இருக்கிறது. இந்த எல்லை, பொருளாதார நிலையில் இருக்கலாம். மனநிலையில் இருக்கலாம், உடல் நிலையில் இருக்கலாம். உணர்வு நிலையில் இருக்கலாம் எப்படியென்றாலும் எல்லையை உடைத்து எல்லையற்ற நிலைக்குச் செல்லவேண்டும் என்ற ஆசை எப்போதும் இருக்கிறது. பொருள் தன்மையில் எல்லையற்ற நிலைக்குச் செல்ல வேண்டும் என்ற ஆசை நிறைவேற வாய்ப்பில்லை. பொருள் தன்மையில் உள்ளவற்றோடு ஆசைப்பட்டால் அது நடைமுறையில் சாத்தியமற்றது தான். பொருள் தன்மையைத் தாண்டி எப்போது நாம் வாழ்க்கையை உணரத் தொடங்குகிறோமோ, அப்போதுதான் அந்த ஆசை நிறைவேற வாய்ப்பு இருக்கிறது.

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசு தேவ்**

# தமிழ்... மொழி... சில பிற... பல

## தமிழ்...மொழி, மற்றும் சிறுபல விடயங்கள், பல சிறு விவகாரங்கள் சம்பந்தமான குறு ஆய்வு 07

**திராவிட மொழிக்குடும்பம்**

திராவிட மொழிகளின் தொடக்கம், சிரம்சங்கள், குறைகள் பற்றி எக்கச்சக்கமான அறிஞர்கள் ஆராய்ந்துள்ளனர். மேற்கத்தையவர்களின் வருகையுடன் அவர்களால் தான் இந்த ஆராய்ச்சி கணிசமான விதத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மேற்பட்டர், கால்ட்வெல் காலத்தில் (1856) பன்னிரண்டு மொழிகளிலே திராவிடக்கூட்டில் உள்ளதாகக் கணக்கிடப்பட்டிருந்தது. இன்று இதன் எண்ணிக்கை முப்பதைத் தாண்டிவிட்டது. இந்த எல்லா மொழிகளுமே யார்த்தத்தின் சேர்க்கைப்படிக்கும் நிரூபணச் சான்றின் படிக்கும் சரியான வகைக்குக் கொடுக்கப்பட்டன என்றில்லை என்றது மிகப் பிரதானமாகக் கவனிக்கத்தக்கது.) இந்திய உபகண்டத்து, இந்திய-ஆரிய, சீன-தீபெத்திய போன்றவற்றிலும் முதன்மையானதாக திராவிட மொழிக் குடும்பம் இருந்தும் அதை ஆரம்ப காலத்து ஆய்வாள அறிஞர் தகைமைக்கேற்ற அளவில் கணக்கெடுக்கவில்லை.

1866 இல் வியன்னாவில் நடைபெற்ற உலக மொழி ஆய்வு மாகாநாட்டின் தீர்மானப்படி, பல காலங் கடந்தபின் மேற்பட்டர், ஜி.ஏ. கிறியர்சன் தலைமையில் இந்திய மொழிகளை ஆராயப்போன குழு திராவிட மொழிகளுக்கு முழு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. ஆயினும் கிரியர்சனுடன் ஆராய்ச்சியில்ஈடுபட்ட மேற்பட்டர். ஸ்ரென் கொநௌ விதிவிலக்காக முண்டா மொழிக் குடும்பத்துடன் திராவிட மொழிகளுக்கும் பிரதானத்துவம் கொடுத்து 1906 இல் ஒரு முக்கிய அறிக்கையை வெளியிட்டார். இதையண்டித்தான் திராவிட மொழிகளின் சிறப்பம்சங்களும் அவற்றின் சீராராய்ச்சி பற்றிய

> **"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

தேவையும் முதன்மை பெற்றன. கடைசி 1940 கள், முன்னடி 50 களில் திராவிடப் பாஷைக் கூட்டத்தை தென், நடு, வட திராவிட மொழிகள் என்று வகுக்கும் பக்குவம் வந்தது. ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலைப் பள்ளியில் வட மொழிப் பேராசன் மேற்பட்டர். தோமஸ் பறோ என்பவரே இவ்வகுப்பின் மூலதாரி. கலிஃபோர்னியா பல்கலைப்பள்ளியின் பேராசான் மேற்பட்டர். எம்.பி. எமனோவுடன் இணைந்து பரோ வெளியிட்ட திராவிட சொல் மூல அகராதி/- இம்மொழிக் கூட்டத்திடையான ஒப்பீட்டியலின் ஆராய்ச்சிக்கு உந்து நெம்பு கோலாயிற்று உலகில் ஏலவே அழிந்து போனவையாகட்டும். இன்றும் கோடி மாற்றங்களுடன் நவீன பொலிவுடனும் நின்று நிலைப்பனவாகட்டும் எம்மொழிக் கூட்ட பாஷைகளும் எல்லாமே கிட்ட மட்டந்தானும் ஒரேயளவிலான வளர்வை கொண்டிருப்பதில்லை. என்பது வெள்ளிடை மலை. சில மொழிகள் உச்சமான ஏற்றத்தையும் செழுமையையும் கொண்டிருக்கிற வேளை எக்கச்சக்கமான மொழிகள் இன்னும் துருக்கலான வளர்ச்சியுறாத நிலபரத்தில் தான் உள்ளன. ஏராள மொழிகள் பற்பலரால் பேசப் பட்டாலும் இவற்றில் பலவற்றிற்கு வரிவடிவங்கள் இல்லை. அஃதாவது இவற்றினை எழுத்தில் போட முடியாது. நுற்றுக்கணக்கான இனக் குழுக்கள் பேசுகிற பன்னூற்றுக் கணக்கான ஆபிரிக்க (பேச்சு) மொழிகளுக்கு எழுத்துக்கிடையாது. இந்த திசை மொழிகள் பேச்சுப் பரிவர்த்தனையுடன் நின்று விடுகின்றன.

ஒரே மொழி பிரதேசத்திற்குப் பிரதேசம் வட்டாரப்பேச்சுவழக்கை எடுப்பதும் வித்தியாசான இன், மத, கலாசார- பண்பாட்டு விழுமிய, பாரம்பரிய நடைமுறை ஆசார வரி விவகாரங்கள் கருதி சமூக வரைபிலான வழக்கை எடுப்பதும் வழமை. நில ரீதியாக நீண்ட தூர வித்தியாசத்தில் வாழும் இரு, ஒரே பாஷையின் வெவ்வேறு பிரதேச / சமூக திசை மொழிப்பேச்சைப் பயன்படுத்தும் இருவர் ஒருவரையொருவர் பூரணமாகவே புரிந்து கொள்ள முடியாத வேடிக்கையான நிலபரம் ஏற்படும் இதனால்தான்.

### சிறீனோ சிறீ-சிறீசு

பிற அயல் மொழிகளால் பாதிக்கப்படும் ஒரு வீறான மொழி. பிறபல மொழிகளுக்கு தாயாவது வழக்கம். தமிழ் வீறான மொழி, திராவிட மொழிக்கூட்டின் தாயும் தந்தையும் ... இம்மூலத்திலிருந்து பல மொழிகள் பிரிந்து சென்றிருக்கின்றன. பிரிந்தவை பிரிவதும் உண்டு.

(தொடரும்)

# ஆவணி மாத இராசி பலன்கள்




(மூலம், பூராடம், உத்தராடம் முதலாம் பாதம்)

பார்க்கும் குருவால் பலன் அதிகம்!

*எதிர்ப்புக்களை இயல்பான பேச்சால் சமாளிக்கும் ஆற்றல் பெற்ற தனுசு இராசி நேயர்களே!*

வரவேற்புக் கொடுப்பதில் உங்களுக்கு நிகர் யாருமில்லை. பாசத்தோடு பழகியே பலர்மூலம் ஏமாற்றங்களை சந்திப்பவர்களின் பட்டியலில் இடம்பிடிப்பவர்களும் நீங்கள்தான். மாற்றுக்குணமுடையோர் உங்களுடன் பழகினால் மறுநிமிடமே குணத்தை மாற்றிக் கொள்வர். கூட்டாளிகளாக உங்களை சேர்த்துக் கொண்டவர்கள் பெருமைப் படுவார்கள்.

உங்களுக்கு இந்த ஆவணி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது குருவின் பார்வை பலம் கூடுதலான நன்மையைக் கொடுக்கும் என்றாலும் சப்தம ஸ்தானத்தில் விரயாதிபதி செவ்வாய் சஞ்சரிப்பதால் திடீர் விரயங்களும் உருவாகும். பத்தாமிடத்துச் சனியால் புதிய பொறுப்புக்களும் பதவிகளும் ஒரு சிலருக்கு வந்து சேரும். புதிய கூட்டாளிகளின் ஒத்துழைப்போடு பழைய தொழிலில் இருந்து ஒரு சிலர் விடுபட்டு புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர்.

உத்தியோகத்தர்கள் வி.ஆர்.எஸ். பெற்றுக் கொண்டு விரும்பிய துறையில் ஈடுபட முன்வருவர். ஆயினும் இம்மாதம் பெயர்ச்சியாகப் போகும் செவ்வாய் எட்டாமிடத்தில் சஞ்சரிக்கப் போவதால் ஆரோக்கியம் மாதக் கடையிசில் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும். உடன் பிறப்புக்களாலும் ஒரு சில பிரச்சினைகள் அகலும். வங்கியில் கடன் சுமை கூடுகின்றதே என்று கவலைப்படுவீர்கள்.

இருந்தாலும் தொடர்ந்து நீங்கள் குரு வழிபாட்டையும் சனி வழிபாட்டையும் மேற்கொண்டால் முன்னேற்றத்தின் முதல் படியில் நிற்கலாம். செவ்வாய்க்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்கு யோக பலம் பெற்ற நாளில் சென்று வந்தால் எல்லா நாட்களும் இனிய நாட்களாக மாறும். வீட்டில் முன்னோர் வழிபாட்டையும் முறையாக செய்வது நல்லது.

மாதத்தின் தொடக்க நாளிலேயே சிம்மத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இது மிகுந்த நன்மையைக் கொடுக்கும். அரசு வழி ஆதரவோடு ஒரு நல்ல காரியத்தை செய்து முடிப்பீர்கள். அந்நியதேசத் தொடர்பு அனுகூலம் தரும். இளைய சகோதரத்தாலும் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். எதிர்வரும் 31 ஆம் திகதி சிம்மத்திலேயே புதனும் சஞ்சரிக்கப்போவதால் புதிய தொழில் தொடங்கும் வாய்ப்புக்கள் கைகூடும். சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறத் தொடங்கும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு.

செப்டெம்பர் 10 ஆம் திகதி கடக இராசியில் செவ்வாய் நீச்சம் பெறப்போகிறார். இது ஒருவழிக்கு நன்மைதான் என்றாலும் ஐந்துக்கு அதிபதியாகவும் செவ்வாய் இருப்பதால் பிள்ளைகள் வழியில் பிரச்சினைகளை உருவாக்கும்.

பெற்றோர் மேற்பார்வை பிள்ளைகள் மீது இருப்பது நல்லது.

மேலும் செப்டெம்பர் 11 இல் கன்னி இராசியில் சுக்ரன் நீச்சம் பெறப்போகிறார். இது மிகுந்த நன்மைதான். ஆறுக்கு அதிபதி நீச்சம் பெறுவதால் புதிய வாய்ப்புக்கள் வந்து அலை மோதும். பிறரை நம்பி நடைபெறாமல் இருந்த காரியத்திற்கு மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

இம்மாதம் இனிய மாதமாக அமைய நந்தீஸ்வரர் வழிபாட்டில் கவனம் செலுத்துங்கள். பிரதோஷத்தன்று வழிபட்டால் பிரச்சினைகள் தீரும்.

இம்மாதம் குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் அகலும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினையும் தீரும். கடுமையாக உழைத்தும் பலன் இல்லையே என்று கவலைப்பட்ட உங்களுக்கு மாதத் தொடக்கத்தில் நல்ல பலன்கள் வந்து சேரப் போகின்றது.

கணவன்-மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். குழந்தைப்பேறு இல்லையே என்ற கவலை அகலும். குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கி சேர்க்க முன்வருவீர்கள். சூரியனார் கோவில் வழிபாடும் பௌர்ணமி கிரிவல வழிபாடும் உங்களுக்குப் பலன் தரும்.




(உத்தரம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்)

நிம்மதி தருவது ஆண்டவன் சந்நிதி!

*நிதானத்தைக் கடைப்பிடித்து வாழ்க்கையில் நினைத்ததை சாதிக்கும் மகர இராசி நேயர்களே!*

நீங்கள் அன்பிற்கு அடிமையானவர்கள். ஆற்றலையும் அனுபவ அறிவையும் கொண்டு மற்றவர்கள் மனதில் இடம் பிடிப்பீர்கள். உழைப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் நீங்கள் களைப்பை கருதமாட்டீர்கள். அழைப்பு இல்லாமலேயே கூட வந்து உதவி செய்வீர்கள். நீதிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நீங்கள் வளைந்து கொடுத்துப் போவதால் தான் வாழ்க்கையில் வெற்றி பெறுகிறீர்கள்.

உங்களுக்கு இந்த ஆவணி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ஆரம்பத்திலே ஆறில் செவ்வாயும் எட்டில் சூரியனும் சஞ்சரிப்பதால் ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும். அதுமட்டுமல்ல குரு அர்த்தாஷ்டம குருவாக நான்காமிடத்தில் சஞ்சரிக்கிறார். எனவே இடம், பூமி விற்பனையால் பிரச்சினைகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது. தாய்வழி உறவினர்களால் மனக் கசப்பும் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால் நண்பர்கள் பகைவர்களாகி போவதும் ஏற்படலாம்.

எனவே முன்னெச்சரிக்கையோடு நடந்து கொள்வதோடு முருகப் பெருமான் வழிபாட்டையும் முறையாகச் செய்யுங்கள்.

எண்ணங்களை நிறைவேற்றுவது இறை வழிபாடு ஒன்றுதான். செவ்வாய் கடகத்திற்கு மாறினாலும் குடும்ப ஸ்தானாதிபதியாக செவ்வாய் நீச்சம் பெறுவதால் குடும்ப சுமை கூடும். கூட இருப்பவர்களை அனுசரித்து செல்ல வேண்டிய சூழ்நிலை உருவாகும். கடன்சுமை குறைய புதிய முடிவெடுப்பீர்கள்.

இராகு இலாப ஸ்தானத்தில் பலம் பெறுவதால் வருமானம் போதுமானதாக இருக்கும். அதோடு அரவு நின்ற வீட்டுக்காரர் வலிமை இழந்தால் யோகம் என்ற அடிப்படையில் செவ்வாய் நீச்சமாகும் நேரத்தில் உடன்பிறப்புக்கள் வழியில் விரயமாகலாம். ஒரு சிலருக்கு பூமியோகமும் வீடு கட்டும் வாய்ப்பும் உருவாகி மகிழ்ச்சி தரும்.

மாதத்தின் முதல் நாளே சிம்மத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். ஐந்து, பத்துக்கு அதிபதி எட்டாமிடத்தில் சஞ்சரிக்கும் பொழுது தொழில் கூட்டாளிகளிடம் விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது. பிள்ளைகள் வழியில் ஏற்படும் பிரச்சினையை ஒரு வழியாகச் சமாளிப்பீர்கள். எதிர்வரும் 31 ஆம் திகதி சிம்ம இராசியில் புதனும் சஞ்சரிக்கப் போவதால் புத,சுக்ர யோகம் செயற்படும். எனவே வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். வரன்களும் வாயில் தேடி வரலாம்.

கடக இராசியில் செப்டெம்பர் 10 ஆம் திகதி செவ்வாய் நீச்சம் பெறுகிறார். நாலுக்கு அதிபதி நீச்சம் பெறும் போது தாய்வழி ஒத்துழைப்பு குறையலாம். குடியிருக்கும் வீட்டால் பிரச்சினைகள் உருவாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்ல

**சிவல்புரிசிங்காரம்**

வேண்டிய இந்தநேரத்தில் அடுத்த நாளே சுக்ரனும் நீச்சம் பெறுகிறார். 5,10 க்கு அதிபதி நீச்சம் பெறுவதால் பூர்வீக சொத்துக்களை விற்று புதிய சொத்துக்களை வாங்கும் சூழ்நிலை ஒரு சிலருக்கு.உருவாகலாம். செவ்வாய் பலம் பெற்ற குடும்ப உறுப்பினர்களின் பெயரில் சொத்துக்கள் வாங்குவது நல்லது.

இம்மாதம் இனிய மாதமாக அமைய சனிபகவானுக்கு எள் தீபம் ஏற்றுங்கள். சூரிய பகவானையும் வழிபாடு செய்யுங்கள்.இம்மாதம் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய மாதமாக அமைகிறது.

சூரிய பலம் கூடுவதால் யாரையும் நம்பி செயற்படும் பொழுது முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. புத-சுக்ர யோகத்தால் பணவரவு திருப்தி தரும். செவ்வாய் பெயர்ச்சிக்கு பின்னால் குடும்பச் சுமை கூடும். சுபகாரியப் பேச்சுக்கள் வந்து சேரும். அர்த்தாஷ்டமக் குருவின் ஆதிக்கத்தால் குழப்பங்கள் அதிகரிக்கும் என்பதால் குரு வழிபாட்டை முறையாக மேற்கொள்வது நல்லது. (தொடரும்)

## மர்ம மனிதன் என்ற சந்தேகத்தில் வங்கிப் பணியாளர் மீது தாக்குதல்

மன்னார், உப்புக்குளம் பள்ளிவாசலுக்கு அருகாமையில் மர்ம மனிதன் என்ற சந்தேகத்தின் பேரில் மக்கள் வங்கி மன்னார் கிளையின் பணியாளர் ஒருவர் அப்பகுதி விழிப்புக்குழுவினரால் கண் மூடித்தனமாக தாக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் இடம்பெற்றது.

கொழும்பைச் சேர்ந்த செனவிரத்தின (வயது-27) என்பவரே மர்ம மனிதன் என்ற சந்தேகத்தின் பேரில் விழிப்புக்குழுவின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

தாக்குதலுக்குள்ளான நபர் மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் செனவிரத்தின தெரிவிக்கையில்,

வங்கி அலுவலக பணிகளை முடித்து விட்டு ஒவ்வொரு பணியாளர்களும் தத்தமது இருப்பிடம் நோக்கி சென்றனர். நானும் எனது இருப்பிடம் நோக்கி சென்றுகொண்டிருந்த போது மன்னார் உப்புக்குளம் பள்ளிவாசலுக்கு அருகாமையில் என்னை இடைமறித்த சிலர் எவ்வித கேள்வியும் இன்றி பாரிய தடிகளால் கண்மூடித்தனமாக தாக்கினார்கள். வங்கிச் சீருடையில் காணப்பட்ட நான் மக்கள் வங்கியின் பணியாளர் என சிங்கள மொழியில் கத்த கத்த தாக்கினார்கள்.

தாக்கியவர்கள் மது போதையில் காணப்பட்டார்கள். அவர்கள் விழிப்புக்குழு என தெரிவித்தனர். பின்னர் என்னை பொலிஸார் காப்பாற்றி மன்னார் வைத்தியசாலையில் அனுமதித்தனர் என்றார். (ஸ்ரீ-2)

## உத்தியோகபூர்வ மொழி ஆணைக்குழுவின் தலைவராக நிமால் ரணவக்க தெரிவு

உத்தியோகபூர்வ மொழி ஆணைக்குழுவின் தலைமைப் பொறுப்பிற்கு சட்டத்தரணி நிமால் ரணவக்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உத்தியோகபூர்வ மொழி ஆணைக்குழுவிற்கான உறுப்பினர்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார். பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, கலாநிதி சுனிமல், பி.டபிள்யூ பெர்னாண்டோ, சட்டத்தரணி நீல் டயஸ், திஸ்ஸ டி சில்வா மற்றும் எம்.ஐ.எம். மொஹதீன் ஆகியோர் இந்த மொழி ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் ஏனைய உறுப்பினர்களாவர்.

உரிய முறையில் உத்தியோகபூர்வ மொழிக் கொள்கை பின்பற்றப்படுகின்றதா என்பது குறித்து இந்த ஆணைக்குழு கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

## சனல் 4 காணொளிகள் குறித்து விசாரணை நடத்தப்படும்

### நல்லிணக்க ஆணைக்குழு அறிவிப்பு

சனல் 4 தொலைக்காட்சியால் வெளியிடப்பட்ட இரு காணொளி ஆவணங்களையும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவானது தனது இறுதியறிக்கையில் சேர்த்துக் கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை எதிர்வரும் நவம்பர் 15 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்படவுள்ளது.

கடந்த 2002 பெப்ரவரி முதல் 2009 மே வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற மோதல் விடயங்களை ஆராய்வதற்காக இந்த ஆணைக்குழு 2010 மே மாதம் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டது.

சனல் 4 காணொளி தொடர்பாக சுயாதீன விசாரணையை மேற்கொள்ளுமாறு அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் உட்பட சர்வதேச சமூகம் வலியுறுத்தியிருந்தது. ஆனால் நல்லிணக்க ஆணைக்குழுவே இந்த ஒளிநாடாக்கள் விசாரணைக்கான இடமாக அமையுமென்று இலங்கை பதிலளித்துள்ளது.

இதேவேளை ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக்கு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு சர்வதேச சக்திகள் அழுத்தம் கொடுத்திருப்பதாக நல்லிணக்க ஆணைக்குழுவின் பேச்சாளர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

## புத்தளத்தில் கிறிஸ் பூத பீதி!

# பொலிஸார், பொதுமக்கள் மோதல்; பொலிஸ் உத்தியோகத்தர் பலி

(கொழும்பு)

புத்தளத்தில் மர்ம மனிதர்களின் நடமாட்டம் காரணமாக பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றுள்ளதாகவும் அதன் காரணமாக அங்கு பதற்ற நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் இரவு மர்ம மனிதர்களின் நடமாட்டம் காரணமாக பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும்இடையில்மோதல்இடம்பெற்ற போது மர்ம மனிதர் என்ற சந் தேகத்தின் பேரில் பிரதேச மக்கள் நடத்திய தாக்குதலில் பொலிஸ் உத்தியோகத்தர் கொல்லப்பட்டுள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் கிராம மக்கள் ஐந்து பேர் காயப்பட்டிருப்பதாகவும் சிலர் காயமடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இச்சம்பவங்களில் காயமடைந்த பெண்ணொருவரும் 13 வயது சிறுமியும் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத நபர்கள் பிரதேச மக்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் இதில் ஐந்து பேர் காயமடைந்துள்ளதாகவும் மற்றுமொரு தகவல் தெரிவிக்கின்றது.

இப்பகுதியில் கிறிஸ் பூதம் என்ற மர்ம மனிதர்களின் நடமாட்டம் அவதானிக்கப்பட்டதாக பரவிய பீதியே இந்த மோதலுக்கும் பதற்றத்துக்கும் காரணமாகியுள்ளது. (ஸ்ரீ-2)

# மாந்திரீகர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை

## அரசாங்கம் எச்சரிக்கை

மாந்திரீக கொள்கைகளைக் கொண்டு பிழைப்பவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த எச்சரிக்கையை சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா விடுத்துள்ளார்.

தமது அமைச்சுக்கு இது தொடர்பான சட்டரீதியான பின்னணி ஒன்று இல்லாத போதிலும் பாதுகாப்பு அமைச்சின் ஊடக அமைச்சரவை பிரேரணை ஒன்றை தாக்கல் செய்ய உள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதனூடாக மாந்திரீகத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார்.

இதனிடையே, மாந்திரீக கொள்கைகள் மூலம் மக்கள் அடிமைப்படுத்தி பணம் வசூலிப்பது தொடர்பிலும் தமக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# வெளிநாட்டு இலங்கையர்கள் குழு ஜனாதிபதியுடன் சந்திப்பு

ஐரோப்பா மற்றும் அவுஸ்திரேலிய நாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் குழுவொன்று நேற்று முன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்துள்ளது.

இலங்கை தொடர்பில் சர்வதேச ரீதியாக நிலவும் அவப்பெயரை நீங்குவதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கை குறித்து இந்த சந்திப்பின் போது அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள், தமது நாட்டின் நன்மதிப்பை உயர்த்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தியுள்ளார். அண்மைக்காலமாக அவ்வாறு செயற்பட்டவர்கள் குறித்து அவர் பாராட்டும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சர்வதேச ரீதியான குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் வகையில் பலம்வாய்ந்த பிரசார பொறிமுறையொன்றை உருவாக்க வேண்டும் எனவும் இந்த சந்திப்பின் போது ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# மாலைதீவுக்கு இலங்கை அரசாங்கம் 10 மில். டொலர் இறக்குமதி கடனுதவி

(கொழும்பு)

மாலைதீவுக்கு இலங்கை அரசாங்கம் 10 மில்லியன் அமெரிக்க டொலர்களை இறக்குமதி கடனாக வழங்கியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் நஷீட் இலங்கைக்கு விஜயம் செய்த போது கையெழுத்திடப்பட்ட இந்த ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் நன்மையளிக்கும் ஒன்றாகும் என ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

சுற்றுலாத்துறையில் தங்கியுள்ள மாலைதீவு அந்நிய செலாவணி நெருக்கடியை எதிர்நோக்குகிறது. உலகில் வருமான வரி அறிவிடாத மிகச் சில நாடுகளில் மாலைதீவும் ஒன்றாகும். எனவே, அரசாங்கம் வரவு- செலவுகளை சமப்படுத்துவதற்கு தடுமாறுகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் இலங்கை வங்கியின் ஊடாக மாலைதீவுக்கு வழங்கப்பட்ட இந்தக்கடன் மூலம் தனது ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதற்கு இலங்கைக்கு உதவும் என இலங்கை அரசாங்கத்தின் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலைதீவின் ஹோட்டல்கள் உணவுப் பொருட்களை குறிப்பாக பழ வகைகளை இலங்கையிலிருந்து இறக்குமதி செய்வதை இந்தக் கடன் ஊக்குவிக்கும் எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இலங்கையைவிட இந்தியா அதிக கடன்களை மாலைதீவுக்கு வழங்கியிருக்கிறது. இந்நிலையில் இந்த ஒப்பந்தம் தோல்வியடைந்தால் இலங்கையுடனான வர்த்தகத்தை மாலைதீவு நிறுத்தியிருக்கலாம் என அமல் ஜயசிங்க கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

2011.08
23

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1305-ஸ்கொட்லாந்தின் நாட்டுப்பற்றாளர் வில்லியம் வொலஸ் இங்கிலாந்தின் முதலாம் எட்வேர்ட் மன்னனால் நாட்டுத்துரோகத்துக்காகக் குற்றம் சாட்டப்பட்டு தூக்கிலிடப்பட்டார்.

★ 1541-பிரெஞ்சு நாடுகாண் பயணி ஜாக் கார்ட்டியேர் கனடாவின் கியூபெக் நகரை அடைந்தார்.

★ 1555-நெதர்லாந்தில் கால்வினிஸ்துகளுக்கு முழுமையான உரிமைகள் வழங்கப்பட்டன.

★ 1784-மேற்கு வட கரோலினா (தற்போது கிழக்கு டென்னசி) பிராங்கிளின் என்ற பெயரில் தனி நாடாக அறிவித்தது. இது ஐக்கிய அமெரிக்காவால் ஏற்கப்படவில்லை.

★ 1821-மெக்சிகோ, ஸ்பெயினிடம் இருந்து விடுதலை அடைந்தது.

★ 1839-சீனாவின் கிங் சீனர்களுடன் போரிடுவதற்காக ஐக்கிய இராச்சியம் ஹொங்கொங்கைக் கைப்பற்றியது.

★ 1914-முதலாம் உலகப் போர்: ஜப்பான் ஜேர்மனியுடன் போரை அறிவித்தது.

★ 1929-பாலஸ்தீனத்தில் அரபுக்கள் யூதர்களைத் தாக்கி அவர்களில் 133 பேரைக் கொன்றனர்.

★ 1939-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியும் சோவியத் ஒன்றியமும் போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். பின்லாந்து, உக்ரேய்ன், போலந்து ஆகியவற்றை தமக்கிடையே பகிர்வது என்றும் இரகசிய முடிவெடுக்கப்பட்டது.

★ 1940-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியினர் லண்டன் மீது குண்டு வீச்சை ஆரம்பித்தனர்.

★ 1944-இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் போர் விமானம் ஒன்று இங்கிலாந்தின் பாடசாலை ஒன்றின் மேல் வீழ்ந்ததில் 61 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1948-ஏ.கே.செட்டியார் தயாரித்த காந்தி பற்றிய முதல் வரலாற்றுத் திரைப்படம் தமிழிலும் தெலுங்கிலும் வெளியிடப்பட்டன.

★ 1952-அரபு லீக் அமைக்கப்பட்டது.

★ 1966-லூனார் ஆர்பிட்டர் 1 முதன் முதலாக சந்திரனின் சுற்று வட்டத்தில் இருந்து எடுத்த பூமியின் படங்களை லூனா ஆர்பிட்டர் 1 அனுப்பியது.

★ 1973-இண்டெல்சாற் தொலைத்தொடர்பு செய்மதி ஏவப்பட்டது.

★ 1975-லாவோசில் கம்யூனிசப் புரட்சி வெற்றி பெற்றது.

★ 1990-ஆர்மேனியா சோவியத் ஒன்றியத்தில் இருந்து விடுதலை பெற்றது.

★ 1990-மேற்கு ஜேர்மனியும் கிழக்கு ஜேர்மனியும் ஒக்டோபர் 3 இணையவிருப்பதாக அறிவித்தன.

★ 2000-பஹ்ரேய்னில் விமானம் ஒன்று வீழ்ந்ததில் 143 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2006-நியூசிலாந்தின் ஆளுநராக ஆனந்த் சத்தியானந்த் பதவியேற்றார்.

### பிறப்புக்கள்

★ 1754-பதினாறாம் லூயி, பிரெஞ்சு மன்னன் (இ.1793)

★ 1868-அய்யன் காளி, தலித் போராளி (இ.1941)

★ 1914-டி.எஸ். பாலையா, தமிழ்த் திரைப்பட நடிகர்

★ 1919-சுசுமு ஒனோ, ஜப்பானியத் தமிழறிஞர் (இ.2008)

★ 1978-கோபி பிரயன்ட், அமெரிக்க கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புக்கள்


★ 1951-வ.ரா., தமிழ் எழுத்தாளர் (பி.1889)

★ 1997-ஜோன் கெண்ட்ரூ, நோபல் பரிசு பெற்றவர் (பி.1961)

### சிறப்பு நாள்

★ ருமேனியா- சுதந்திர தினம் (1944)


# நவீன எண் சோதிடம்



## தீர்க்கமான அறிவும் நல்ல யோசனையும் உடையவர்கள்

26

## உடல் எண் ௩ உயிர் எண் ௬



3,12,21,30 போன்ற தேதிகளில் பிறந்து, பிறந்த தேதி, மாதம், வருடம் ஆகிய மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 6 வருமேயானால் குரு, சுக்கிரன் ஆதிக்கத்தில் பிறந்தவராவர். தேவகுருவாகிய குருவும், அசுர குருவாகிய சுக்கிரனும் ஒன்றுக்கொன்று ஒத்துப் போகாததால் குருவாகிய 3, உடல் எண்ணாக வருகின்றவர்களுக்கு சுக்கிரனாக 6, உயிர் எண்ணாக வருவது சிறப்பல்ல.

இவர்கள் தன் நடவடிக்கையாலும், தன்வாயாலும் தனக்குத் தீங்கைத் தானே தேடிக்கொள்வர். இவர்களுடைய பெயர் தனது பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாக அமைந்தால் மிகவும் மேன்மையான நிலையை அடைவர். பொருத்தமற்ற பெயர் இருக்குமேயானால் காமவெறியாலும், பெண்களிடம் பழகுவதாலும் சிக்கல் ஏற்படும். சிலருக்கு உடன் பிறந்தவரிடத்தும், நண்பரிடத்தும் கருத்து வேறுபாடு உண்டாகும். தான் போட்ட திட்டங்கள் தோல்வியடையும்.

இந்த எண்ணிக்கையில் பிறந்த சிலர் அரசாங்க உத்தியோகத்திலிருந்தும் நிம்மதியின்றி வாழ்கின்றனர். தொழில் செய்வோர் ஏறவும் இறங்கவுமாக இருக்கின்றனர். ஆனால், பெயர் தனது பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாக அமைந்து விட்டால் எல்லா வளமும் பெற்றுச் சிறப்பாக வாழ்வார். இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்கள் பெண்ணாக இருந்தால் ஆண்களாலும், ஆணாக இருந்தால் பெண்களாலும் கவலைப்படும் சூழ்நிலை உருவாகிறது. இதனால் பார்ப்பதற்கு அழகாகத் தோற்றமளிக்கும் இவர்கள் காமத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவர்களுக்கு தீர்க்கமான யோசனையும், நல்ல அறிவும் இருக்கும். தீய காரியங்களில் இறங்கி விடுகின்றனர். சிலர் நல்லவர்களாக வாழ முயற்சி செய்தாலும் கெட்ட பெயரெடுக்கும் சூழ்நிலை அமைந்துவிடுகிறது. விதி சதா சதி செய்யும். இதனால் 46 எண் வருகின்ற மாதிரி பெயரை அமைத்துக் கொண்டால் வாழ்க்கை படிப்படியாக உயரும்.

பெயர் நன்றாக அமையப் பெற்றவர்களுக்கு மேற்குறிப்பிட்ட கெட்ட பலன்கள் குறையும் ஆடம்பரமான பொருட்கள் விற்கும் தொழிலாலும், கலைத் தொழில்லாலும் கைத்தொழிலாலும் மேன்மையான நிலையை அடைவர். மலைப் பிரதேசங்களையும் இயற்கைக் காட்சிகளையும் கண்டுரசிப்பர். ஆடம்பரப் பிரியராகக் காட்சியளிக்கும் இவர்கள் சில நேரங்களில் வாழ்க்கையை வெறுத்தது போன்று இருப்பர். எதைச் செய்தாலும் திருப்தியாகச் செய்யாது குழப்பமாகவே செய்வர். இவர்கள் தன்னுடைய பெயரை நன்றாகக் கீழே குறிப்பிட்டபடி மாற்றியமைத்துக் கொண்டால் வாழ்கை சிறப்படையும்.

**தொழில்**

இவர்களுக்கு, ஆடம்பரப் பொருட்களை வியாபாரம் செய்வதன் மூலம் செல்வம் சேரும். ஜவுளி தொழிற்சாலை, கமிஷன் போன்ற தொழிலாலும் லாபம் அடையலாம்.

**நோய்**

இவர்களுக்கு மனவியாதி, இருதயவலி, மூட்டுவலி, பல்வலி, கண் நோய் போன்றவைகள் வரும். பெயரைச் சிறப்பாக அமைத்துக் கொண்டால் நிவர்த்தியாகும்.

**பெயர் அமைக்கும் முறை**

இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்கள் 19, 37, 46, 64, 27, 36, 45 போன்ற சூரியன், செவ்வாய் ஆதிக்கத்தில் பெயரை மாற்றியமைத்துக் கொண்டு சிறப்பாக வாழலாம்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்-1,9

யோகமான தேதிகள்-1, 10, 19, 28; 9, 18, 27

யோகமான மோதிரக்கல்-தங்க

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT

புஷ்பராகம், கனக- புஷ்பராகம், வெள்ளை புஷ்பராகம்

யோகமான நிறம்-வெளிர் நீலம், வெளிர் மஞ்சள்

ஆகாத நிறம் -இல்லை

ஆகாத தேதிகள்-இல்லை

■ ■ ■

## பெயர் எண்களின் பலன்

**79 எண் பலன்**


இந்த எண்ணைப் பெயரில் கொண்டவர்கள் அதிர்ஷ்டத்தைப் பெற்ற போதிலும், தனது குடும்ப வாழ்க்கையில் குழம்பி விடுகின்றனர். ஆரம்ப வாழ்க்கை பல்வேறு சோதனைகளுக்குள் ளாகி, பின் முன்னேற்றம் அடைவர். பலருக்கு அறிவுரை கூறும் திறமை கொண்ட இவர்களுக்குக் குடும்ப வாழ்க்கை மட்டும் சரியாக அமைவ தில்லை.

**80 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயராக உடையவர்கள் 5,14,23,6,15,24 போன்ற தேதிகளில் பிறந்திருந்தால் ஓரளவு முன்னேற்றத்தைக் கொடுக்கும். மற்றவர்களுக்கு இந்த எண் ஆபத்தான சூழ்நிலையையும் பயங்கரமான மனப்பீதியையும் கொடுக்கும். இதனால் இந்த எண் விரும்பத்தக்கதல்ல.

**81 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயராக



உடையவர்களுக்கு சிலர் ஏவல் செய்யக் காத்திருப்பார்கள். பலருக்குப் போதிக்கும் போதகராக விளங்கும் இவர்கள் முன்னேற்றத்தில் ஆர்வம் உள்ளவர்களாய் இருப்பர். தன் நிலையை உயர்த்திக் கொள்ள எப்பொழுதும் திட்டம் போட்ட வண்ணம் இருப்பர். பொதுவாக இந்த எண்ணைப் பெயரில்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

உடையவர்கள் சகல பாக்கியமும் பெற்று, மகிழ்ச்சியாக வாழ்க்கையை நடத்துவர்.

**82 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயராகக் கொண்டவர்கள் கடமை, கண்ணியம் என்ற இரண்டையும் பின்பற்றி பலருக்குத் தலைவராகவும் வழிகாட்டியாகவும் வாழ்வர். சாதாரண குடும்பத்தில் பிறந்திருந்தால் கூட இவரது உன்னதமான உழைப்பினால் மேன்மையான நிலையை அடைவர். வாகனப்பிரியரான இவர்கள் புதுப்புது வாகனங்களை வாங்க விரும்புவர். வெள்ளி, தங்கம், நவரத்தினங்கள் சேர்க்கை உண்டாகும். இவருடைய கவர்ச்சியான பேச்சாலும் காந்தக் கண்ணாலும் கவரக்கூடிய சக்தி இவர்களுக்கு உண்டு. ஆனால், போகம் சம்பந்தமான விடயங்களில் நிதானம் தேவை.

**83 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயரில் உடையவர்கள் எல்லோரையும் மதிப்பவராகவும் பலருக்கு உதவுபவராகவும் வாழ்பவராவர். இதனால், எல்லோரும் இவரை தெய்வீக மனிதர் என்று வணங்குவர். இவர்கள் விரும்பாதிருந்தாலும் பெரும் பதவி நாடி வரும். எப்பொழுதும் சந்தோஷமான வாழ்க்கை உண்டு. நிரந்தரமான பதவியும் நீடித்த செல்வமும் எப்பொழுதும் உண்டு.

**84 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயரில் உடையவர்கள் வாழ்க்கையில் எதிர் நீச்சல் போட வேண்டியிருக்கும். தேவையற்ற பகையும் வம்பு வழக்குகளும் ஏற்படும். மனம் நிலை கொள்ளாது, காரணமற்ற கவலையால் வாடும். இவர்களது மனதைத் திடப்படுத்திக் கொள்வதற்காக பக்தி மார்க்கத்தைக் கடைப்பிடிப்பர். ஆனால், 3,12,21,30 போன்ற தேதிகளில் பிறந்திருந்தால் வாழ்க்கை மிகச்சிறப்படையும்.

(தொடரும்)

# நீரிழிவு நோயை புரிந்து கொள்ளுங்கள்


03



***இன்சுலின் சுரக்கும் உறுப்பு***

வயிற்றுப் பகுதியில் தொப்புளுக்கு மேல் இரைப்பைக்கு பின்புறம் நீண்ட மாவிலை போன்ற வடிவத்தில் மூன்று அவுன்ஸ் அளவில் கணையம் உள்ளது.

இதிலுள்ள கணையச் சுரப்பு நீர்க் குழாய் வலப்பக்கம் நோக்கி வந்து பித்த நீர்க்குழாயுடன் இணைந்து முன் சிறு குடலிலுள்ள துவாரத்தில் முடிகிறது. நமது உடலில் இயங்கும் நாளமில்லாச் சுரப் பிகளுள் கணையமும் ஒன்று.



கணையமானது இதயத்தைப் போல இருபத்து நான்கு மணி நேரமும் செயற் பட்டுக் கொண்டிருக்கும். இதில் சுரக்கும் சுரப்பு நீர் இரண்டு வகையாக செயல் களை மேற்கொள்கிறது.

1.செரிமான நீரையும் நொதிப் பொருட் களையும் வழங்கி மாச்சத்துக்களை கரைத்து இரத்தத்தில் கலக்க உதவுகிறது. இந்த செல்களுக்கு அசினார் செல்கள் என்று பெயர்.

2.லாங்கர்ஹான் திட்டுக்கள் என அழைக்கப்படும் செல் தொகுப்பிலிருந்து சுரப்பது. ஏறக்குறைய பத்து இலட்சம் செல்கள் இந்தப் பணியினை மேற்கொள் கின்றன.

இவை,

**1.அல்பா செல்கள்**


**2.பீட்டா செல்கள்**

**3.காமா செல்கள்**

என மூன்று வகைச் செல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

இதில் பீட்டா செல்களே இன்சுலினைச் சுரக்கின்றன. இது நாளங்களின் மூலமி ன்றி நேரடியாக இரத்தத்தில் கலக்கிறது. இரத்தத்திலுள்ள சீனியினை திசுக்களு க்குச் செலுத்தி எரிபொருளாக்குகிறது.

சாப்பிடும்போது அதிக சீனிப்பொருள் உண்டாவதால் கணையமும் சுறுசுறுப் பாகி அதிகமான இன்சுலினை உற் பத்தி செய்து இரத் தத்தில் அனுப்பும். செல்களுக்கு இன் சுலின் சென்று சேர்ந்ததும் அதனு டைய அளவு குறைந்து விடும். செல்களுக்கு சரி யான அளவு சீனி கிடைத்தால் உட லின் சக்திக்கு போதும். அளவுக்கு மீறி நிறைய சீனி கிடைத்து விட்டால் என்ன செய்வது என்ற சிரமமே இல்லாமல் கல்லீரல் குளுக்கோஸை கிளைகோஜன் என்ற பொருளாக மாற்றிவிடும். சிறிது



சீனி இரத்தத்தில் கலந்திருக்கும். மீதமுள் ளவை சிறுநீரில் கலந்து வெளியேறி விடும்.

இன்சுலினோடு மற்ற ஓமோன்களும் இதில் முக்கிய பங்காற்றுகின்றன.

குளுகோஜன் என்கிற வளர்ச்சி ஓமோனும் கார்டிசோல் மற்றும் எபினெப் ரின் என்ற ஓமோனும் இன்சுலினுக்கு எதிர் திசையில் செயற்படும்.

சில சிரமமான சூழல்களில் இவை இரத்த ஓட்டத்தில் குளுக்கோஸை தள்ளி விடுவதால் சீனியின் தேவை சில வேளைகளில் அதிகரிக்கிறது. ஓமோன் களின் இந்த செயற்பாடுகள் எப்போதும் மிக எச்சரிக்கையாக இருந்து உடலின் சீனி அளவைசீராகவைத்துக் கொள்ளும்.

ஆனால் நீரி ழிவு நோய் தாக்கும்போது இந்த செயற் பாட்டில் குறை கள் தோன்று கிறது. அல் லது இன்சு லின் அளவு குறைந்து விடுகிறது.

தொடர்ச்சி யாக சாப்பிடும் போதெல்லாம் நம் உடலுக்கு தேவையான குளுக்கோஸ் சத்தை தேவைக்கேற்ப இன்சுலின் சுரப்பி உற்பத்தி செய்து கொண்டே இருக்கும். இந்தச் சுரப்பி பாதிக்கப்பட்டு இன்சு லினை சுரக்க முடியா மல் போவது அல்லது இன்சுலின் உற்பத்தி குறைவது அல்லது செயற்பட முடியாத நிலை ஏற்படும் போது தான் நீரிழிவுநோய் வந்துவிடுகிறது. இதைத்தான் நீரிழிவு நோய் என் கிறோம்.

இந்த நோயை பண்டைக்காலம் முதலே அறிந்து வைத்திருந்த போதி லும் நோயைப் பற்றிய விபரங்கள் அனைத்தும் விஞ்ஞானம் வளர்ந்த பின்னரே நமக்குக் கிடைத்தன.

ஆனால் அறிகுறிகளை வைத்து நீரி ழிவு நோய்க்கு டயபிடிஸ் என்று பெயரி ட்டவர்கள் கிரேக்கர்கள். அடிக்கடி அதிக மாக சிறுநீர் கழிவது நீரிழிவு நோயின் முக்கிய அறிகுறி என்பதை உணர்ந்த அவர்கள் இவ்வாறு பெயர் சூட்டினார் கள். கிரேக்க மொழியில் டயபிடிஸ் என் றால் நீரூற்று என்று பொருள். உடம்பி லுள்ள தசைகளையும் எலும்புகளையும் சிறுநீராக உருக்கிச் செல்லும் நோய் இது என கப்படோசியாவைச் சேர்ந்த எரேசி யஸ் (கி.பி.30-90) என்ற அறிஞர் தெரி வித்திருக்கிறார்.

இந்நோயைக் கட்டுப்படுத்த கடுமை யான உடலுழைப்பு முறைகளை இந்தி யர்கள் அப்போதிலிருந்தே கடைப்பிடி த்து வந்திருக்கிறார்கள் என்பது கூடுத லான தகவல்.

(முற்றும்)

பேராசிரியர்
டாக்டர் டி.காமராஜ்,
M.D.,P.G.D.C.G.,D.M.R.,
சென்னை.

Health Care
மருத்துவ உலகம்
உங்கள் நலம் உங்கள் கைகளில்


# இரத்த அழுத்த நோய்

01



***இரத்தக் கொதிப்பு என்றால் என்ன?***

நமது உடலுக்குள் எல்லா பாகங்களி லும் இரத்தக் குழாய்கள் உள்ளன. அவற் றுள் நமக்குத் தெரியாமலேயே எந்நேர மும் இரத்தம் ஓடிக்கொண்டே இருக் கிறது. இத்தகைய இரத்த ஓட்டம் சீராக நடைபெற்றால் தான் உடலில் உள்ள அங்கங்கள் அனைத்திற்கும் தேவை யான சக்தி, ஒட்சிசன் போன்றவை கிடைக் கும்.




உடலுக்குள் இரத்த ஓட்டம் தடையி ன்றி நடைபெற ஓர் உந்துசக்தி தேவைப் படுகிறது. இத்தகைய உந்து சக்தி ஒவ் வொரு முறை இதயம் துடிக்கும் பொழு தும் ஓர் அலை போல உடல் முழுவதும் பரவி இரத்த ஓட்டத்தை நடைபெற வைக் கிறது. இதைத்தான் **இரத்த அழுத்தம்** என்கிறோம்.

நாம் உயிரோடு வாழ இரத்த அழுத் தம் தேவை. சிலருக்கு இந்த அழுத்தம் அதிகமாகிப் போவதைத்தான் இரத்தக் கொதிப்பு என்கிறோம்.

***இரத்த அழுத்தம் அதிகமாக இருப் பதை எப்படிக் கண்டுபிடிப்பது? அதற் கான அறிகுறிகள் என்ன?***

இரத்தக் கொதிப்பு நோய் உள்ள வர்களில் பெரும்பாலோர்களுக்கு ஆரம்ப அறிகுறியே இருக்காது. மிக சிலருக்கு தலைவலி, உடல் சோர்வு, படபடப்பு போன்ற அறிகுறிகள் இருக்கலாம். அநேக சமயங்களில் இந் நோய் இருப்பதை தற் செயலாக இரத்த அழுத் தத்தைப் பரிசோதிக்கும் பொழுதே தெரியும்.

இதனால்தான் 30 வய திற்கு மேல் ஆண்டுக்கு ஒரு முறையேனும் இரத்த அழுத் தத்தைப் பரிசோதித்துக் கொள் வது நல்லது என்று சொல்கிறோம்.


***ஒரு சராசரி மனிதனுக்கு எவ்வளவு இரத்த அழுத்தம் இருக்கலாம்?***

இரத்த அழுத்தத்தை நாங்கள் SPHYG MONANOMETER என்ற கருவியால் அளக்கிறோம். சமீப காலங்களில் இலத் திரனியல் கருவிகளும் புழக்கத்தில் வந்துள்ளன. இரத்த அழுத்தம் குறிப்பிடும் பொழுது இரண்டு எண்கள் மேலும் கீழுமாக எழுதப்படும். மேலே குறிக் கப்படுவது சிஷ்டாலிக் பிரஷர் எனப்படும். கீழே குறிக்கப்படுவது டயஸ்டாலிக் பிரஷர் எனப்படும்.

ஒவ்வொரு இதயத் துடிப்பின் போதும் இதயம் சுருங்கி விரிவடைவதால் இரத்த அழுத்தமும் ஓர் அலைபோல் மேலெ ழும்பி பின்னர் கீழே இறங்குகிறது. மேலே எழும்பும் பொழுது உண்டாகும் அழுத் தம் தான் சிஷ்டா லிக்பிரஷர். கீழே தணியும் பொழுது உண்டாகும் அழுத்தம்தான் டயஸ்டாலிக் பிரஷர் எனப்படும்.

***இரத்தக் கொதிப்பு நோய் எதனால் வருகிறது?***

இரத்தக் கொதிப்பு உள்ளவர்களில் நூறு பேரில் 95 பேருக்கு எதனால் இந் நோய் வருகிறது என்பதற்கான காரணமே இருப்பதில்லை. மீதமுள்ள ஐந்து பேரு க்கு மட்டுமே குறிப்பிட்டுக் காரணம் காட்ட முடியும்.




முதல் வகையை Primary Hyperte nsion என்றும், இரண்டாம் வகையை Se condary Hypertenion என்றும் அழை க்கின் றோம். காரணம் புரியாத Primary Hypertension நோய்க்கு பரம்பரை, மன இறுக் கம், உண வில் அதிக அளவு உப்பு சேர்த்துக் கொள்வது ஆகிய மூன்றி னையும் குற்றம் சாட்டுகி றார்கள்.

Secondary Hypertension எனப் படும் நோய்க்கான முக்கிய காரணங்கள் சிறுநீரகக் கோளாறுகள், சிலவகையான ஓமோன் சம்பந்தமான நோய்கள், உடற் பருமன், மிதமிஞ்சிய மதுப்பழக்கம் போன்றவையாகும். சிலருக்கு நீரிழிவு நோயும் இரத்த அழுத்தமும் சேர்ந்தே இருக்கும் இணைபிரியா தோழர்கள்.

***இரத்த அழுத்த நோய் உடலை எவ்வாறு பாதிக்கிறது?***

எந்த அறிகுறியும் இல்லாமலேயே மூளை, கண்கள், இதயம், சிறுநீரகம் போன்றவற்றை இரத்தக்கொதிப்பு நாளா வட்டத்தில் தாக்குகிறது.

இதனால் பெரிய வியாதிகளான பக்க வாதம், பார்வை இழத்தல், மாரடைப்பு, இதய வீக்கம், சிறுநீரகச் செயலிழப்பு போன்றவை பின்விளைவாக ஏற்பட லாம். சுருக்கமாகச் சொன்னால் இரத்தக் குழாய்கள் அனைத்துமே இரத்தக் கொதிப் பினால் சேதமடையலாம். (தொடரும்)

இதயநோய் நிபுணர்
டாக்டர் டாக்டர் எம்.ஜெயராஜா, MD.,DM.,
சூர்யா மருத்துவ மனை, சென்னை-93

# லிபிய தலைநகர் டிரிபோலியை புரட்சிப்படை கைப்பற்றியது

## கடாபி தலைமறைவு; மகன்மார் கைது

(டிரிபோலி)

**லிபியாவில் கடந்த 5 மாதங்களாக நடைபெற்றுவரும் போராட்டம் தீவிரமடைந்து கலவரமாக மாறியுள்ளது. நேற்று முன்தினம் டிரிபோலியை கைப்பற்ற இலக்கு நிர்ணயித்து களமிறங்கிய புரட்சிப் படையினர் டிரிபோலி நகரம் முழுவதையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.**

**அத்துடன் கடாபியின் 2 மகன்களை கைது செய்து வீட்டுக் காவலில் வைத்துள்ளனர்.**



லிபியாவில் கடந்த 42 ஆண்டுகளாக நடைபெற்று வரும் ஜனாதிபதி கடாபியின் ஆட்சிக்கு எதிராக பொதுமக்கள் போராடி வருகின்றனர். அவர் பதவியை விட்டு விலக வேண்டும் என கடந்த 5 மாதங்களாக நடைபெறும் இப்போராட்டம் தீவிரம் அடைந்து கலவரமாக மாறியுள்ளது.

போராட்டக்காரர்கள் புரட்சிப் படையை அமைத்துள்ளனர். இவர்களுக்கு நேட்டோ படை உதவி வருகின்றது. அவர்கள் பெங்காசி, பிரகா உள்ளிட்ட முக்கிய நகரங்களை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். போராட்டத்தை ஒடுக்க கடாபி தனது ஆதரவு இராணுவத்தை பயன்படுத்தி வருகிறார். அவர்கள் புரட்சிப் படையுடன் கடுமையாக சண்டையிட்டு வருகின்றனர். இருந்தும் அவர்களை தோற்கடிக்க முடியவில்லை.

புரட்சிப் படையினர் தொடர்ந்து முன்னேறி வருகின்றனர். நேற்று முன்தினம் தலைநகர் டிரிபோலியை கைப்பற்ற இலக்கு நிர்ணயித்து களம் இறங்கினர். டிரிபோலிக்குள் நுழைந்த புரட்சி படையினருடன் இராணுவம் கடும் துப்பாக்கி சண்டையில் ஈடுபட்டது.

இருந்தும் அவர்கள் முன்னேறி நேற்று முன்தினம் இரவு டிரிபோலியின் பெரும் பாலான பகுதிகளை கைப்பற்றினர். குறிப்பாக இராணுவத்தின் முக்கிய தளத்தையும் கிரீன் சதுக்க பகுதிகளையும் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளனர்.

மேலும் சண்டை தொடர்ந்து நீடிக்கிறது. முன்னதாக புரட்சி படை டிரிபோலிக்குள் நுழைந்ததும் ஆயிரக்கணக்கான குடியிருப்புவாசிகள் வீதிகளில் திரண்டனர். மார்டயர்ஸ் சதுக்கம் அருகே வந்து வரவேற்றனர். தங்கள் கைகளில் கறுப்பு, சிவப்பு மற்றும் பச்சை நிறத்திலான லிபிய தேசியக் கொடியை அசைத்து மகிழ்ந்தனர்.

கடவுள் மிகப் பெரியவர் என வாழ்த்து கோஷங்களை கூறி நடனமாடி மகிழ்ந்தனர். துப்பாக்கியால் வானத்தை நோக்கி சுட்டு தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். வெற்றியின் அடையாளத்தை குறிக்கும் வகையில் வி வடிவில் 2 விரல்களை காட்டினர். கடாபி மற்றும் அவர்களது மகன்களுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். மேலும் அவர்களது சுவரொட்டிகளையும் கொடியையும் தீ வைத்து எரித்தனர்.

இதற்கிடையே கடாபியின் 2 மகன்கள் புரட்சிப் படையால் கைது செய்யப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் கைப் அல்-இஸ்லாம் என்பவரது பெயர் மட்டும் வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் கடாபி தலைமறைவாகி விட்டார். அவர் எங்கு பதுங்கி இருக்கிறார் என தெரியவில்லை.

புரட்சிப் படையிடம் சரணடைய மாட்டேன் என ஏற்கனவே அவர் அறிவித்து இருந்தார்.

ஆனால் அவரது பேச்சு அடங்கிய 2 ஒளிப் பதிவு நாடாக்கள் அரச தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது.

அதில் அவர் பேசும்போது,

டிரிபோலியை அவர்கள் புரட்சிப்படை தீ வைத்து கொளுத்துகிறார்கள். ஆனால் நீங்கள் (ஆதரவாளர்கள்) வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். அது எனக்கு மிகவும் கவலை அளிப்பதாகவும் பயமாகவும் உள்ளது. அங்கு தண்ணீர், உணவு மற்றும் மின்சாரம் இல்லை. மக்களின் சுதந்திரமும் பறிபோய் விட்டது என்று கூறினார்.

ஆனால் மக்கள் எதைப் பற்றியும் கவலைப்படவில்லை மாறாக புரட்சியாளர்கள் அவர்களது படைக்கும் ஆதரவாக கிரீன் சதுக்கத்தில் திரண்டனர். கடாபியின் வீழ்ச்சிக்கு மகிழ்ச்சி தெரிவித்தும் புரட்சி படையை வாழ்த்தியும் ஒருவருக்கொருவர் எஸ்.எம்.எஸ். அனுப்பினர்.

தற்போது டிரிபோலி நகரம் முழுவதும் புரட்சிப் படையின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஆனால் கடாபி தங்கியிருக்கும் பாப் அல்-அஷிசியா மட்டும் இராணுவம் வசம் உள்ளது. இதை லிபிய அரசு மறுத்துள்ளது.

லிபியா இன்னும் தங்கள் கட்டுப்பாட்டில் தான் உள்ளது என அரசு அறிவித்துள்ளது. அரசின் செய்தி தொடர்பாளர் மூசா இப்ராகிம் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது,

புரட்சிப் படைகள் தாக்கியதில் டிரிபோலியில் ஆயிரத்து 300 பேர் பலியாகியுள்ளனர். இன்னும் இராணுவம் அவர்களுடன் தீவிரமாக சண்டையிட்டு வருகிறது.

ஆயிரக்காணக்கான வீரர்களும் கடாபியின் ஆதரவாளர்களும் போரிட தயாராக உள்ளனர் என்று தெரிவித்தார்.

டிரிபோலியை புரட்சிப் படை கைப்பற்றியது குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கருத்து தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கடாபியின் ஆட்சி முடிவுக்கு வந்து விட்டதை இது காட்டுகிறது. எனவே அவர் பதவி விலகி மேலும் பலர் இரத்தம் சிந்துவதை தவிர்க்க வேண்டும் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)




# பேஸ்புக், டுவிட்டர் மூலம் உருவான அரசியல் சாசனம்

## ஐஸ்லாந்து நாட்டில் புதுமை

இருபத்தோராம் நூற்றாண்டின் முதல் புதுமையாக ஐஸ்லாந்து நாட்டின் அரசியல் சாசனம் பேஸ்புக், டுவிட்டர் போன்ற சமூக வலைத் தளங்களில் விவாதிக்கப்பட்டு பொது மக்களின் கருத்துக்கள் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த 1944இல் டென்மார்க் நாட்டிடம் இருந்து விடுதலை பெற்ற ஐஸ்லாந்து டென்மார்க்கின் அரசியல் சாசனத்தை சில சில மாற்றங்களுடன் அப்படியே ஏற்றுக் கொண்டது. 2008 இல் அந்நாட்டின் பிரதான வங்கி திவாலாகி நாட்டின் பொருளாதாரம் கேள்விக்குள்ளான நிலையில் புதிய அரசியல் சாசனம் உருவாக்கப்பட்ட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.

மொத்தம் மூன்று இலட்சத்து 20 ஆயிரம் பேரை மட்டுமே மக்கள் தொகையாகக் கொண்ட அந்நாட்டில் 80 சதவீதம் பேர் இணையத்தளங்களோடு தொடர்பில் இருந்தனர். ஒட்டுமொத்த மக்கள் தொகையும் கல்வியறிவு பெற்றதாக இருந்தது.

இந்நிலையில் புதிய அரசியல் சாசனம் காலத்திற்கேற்ற மாறுதலுடன் இருக்க வேண்டும் என அந்நாட்டு அரசு முடிவெடுத்தது. அதன்படி 950 நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்று 700 க்கும் அதிகமான பக்கங்களில் 9 அட்டவணைகளில் 114 பிரிவுகள்கொண்ட புதிய அரசியல் சாசனத்தை உருவாக்கியது.

இந்த அரசியல் சாசனம் குறித்த மக்களின் கருத்தை அறிவதற்காக ஒரு குழு அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. அந்தக்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க ஒரு தேர்தல் நடத்தப்பட்டது. அதன்படி மொத்தம் 522 வேட்பாளர்கள் போட்டியிட்ட தேர்தலில் 25 பேர் குழு உறுப்பினர்களாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களில் வழக்கறிஞர்கள், அரசியல் கற்பிக்கும் பேராசிரியர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் பிற தொழில்களைச் சார்ந்தவர்கள் என சமுதாயத்தின் அனைத்து தரப்பினரும் இடம்பெற்றுள்ளனர்.

இந்த 25 பேரும் புதிய அரசியல் சாசனத்தை அதற்கான இணையத்தளத்தில் முழுவதுமாக பதிவு செய்வது தொலைக்காட்சி, வானொலி, விக்கிபீடியா, பேஸ்புக், டுவிட்டர் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் தினசரி அரசியல் சாசனத்தின் ஒவ்வொரு பிரிவு தொடர்பாக விவாதிப்பது சமூக வலைத் தளங்கள் மற்றும் அரசியல் சாசன இணைய தளங்களில் மக்கள் பதிவு செய்துள்ள விமர்சனங்களை ஆராய்வது தகுதியான விமர்சனங்களை அரசியல் சாசனப் பிரிவுகளில் சேர்த்து தேவையான மாற்றங்களை மேற்கொள்வது என தன் பணிகளை வரையறை செய்து கொண்டது.

இந்த ஆக்கபூர்வமான பணிகளால் உந்தப்பட்ட ஐஸ்லாந்து மக்கள் சமூக வலைத்தளங்கள் மற்றும் இணையத்தளங்களில் பொருள் திருட்டு போனால் மீட்பது, கால்நடைகளைப் பாதுகாப்பது ஆகிய துறைகளில் ஆரம்பித்து வெளியுறவுக் கொள்கை வரை அனைத்து பிரிவுகளையும் பற்றி தங்கள் கருத்துக்களைப் பதிவு செய்தனர்.

இந்தக் கருத்துக்கள் அனைத்தையும் ஆய்வு செய்த 25 பேர் கொண்ட குழு அவற்றிலிருந்து தகுதியான 3 ஆயிரத்து 500 கருத்துக்களை மற்றும் ஏற்றுக் கொண்டு அவற்றை அரசியல் சாசனத்தில் சேர்த்து உரிய மாற்றங்களைச் செய்தது.

இந்த 21 ஆம் நூற்றாண்டில் உலகில் முதன் முறையாக சமூக வலைத்தளங்கள் மூலம் அரசியல் சாசனத்தை பொது மக்கள் பங்களிப்போடு உருவாக்க முடியும் என்பதை ஐஸ்லாந்து சாதித்துக் காட்டியுள்ளது. ஐஸ்லாந்தின் புதிய அரசியல் சாசனம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது. இதையடுத்து அது அமுலுக்கு வரும். (ஸ்ரீ)

## ஆப்கானில் தேர்தல் முறைகேடு: 9 எம்.பிக்கள் பதவி நீக்கம்


ஆப்கானிஸ்தானின் நாடாளுமன்றத் தேர்தலின் முறைகேட்டின்மூலம் வெற்றி பெற்ற 9 பாராளுமன்ற உறுப்பினர்களை அந்நாட்டு தேர்தல் ஆணையம் பதவி நீக்கம் செய்தது. அவர்களுக்குப் பதிலாக நியாயமாக வெற்றி பெற்ற 9 உறுப்பினர்களை மீண்டும் பதவியில் அமர்த்தி உத்தரவு பிறப்பித்துள்ளது.

முதலில் வெளியான பாராளுமன்றத் தேர்தலின் முடிவை ஆய்வு செய்ததன்மூலம் இப்போது புதிதாகப் பொறுப்பேற்றுள்ள 9 பாராளுமன்ற உறுப்பினர்களும் வெற்றி பெற்றது உறுதியாகியுள்ளது என்றும் தேர்தல் ஆணையம் குறிப்பிட்டுள்ளது.

தேர்தல் ஆணையத்தின் இந்த அதிரடி நடவடிக்கையை அந்நாட்டில் பெரும்பாலானோர் வரவேற்றுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் பாராளுமன்றத் தேர்தல் நடந்தது. இதைத் தொடர்ந்து உறுப்பினர்கள் ஜனவரி மாதம் பதவியேற்றுக் கொண்டனர். ஆனால் அன்று முதல் இன்றுவரை பாராளுமன்றம் கூட்வில்லை. தேர்தலில் மாபெரும் முறைகேடுகள் நடந்துள்ளதாக அரசியல் தலைவர்கள் மாறிமாறி குற்றம்சுமத்தியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டும் வருகின்றனர். இதனால் பாராளுமன்றத்தைக்கூட்ட முடியாத நிலைமை நீடிக்கிறது. (ஸ்ரீ-2)

# அன்னா ஹசாரேக்கு ஆதரவாக டில்லியில் பிரமாண்ட பேரணி



(புதுடில்லி)

அன்னா ஹசாரேக்கு ஆதரவாக டில்லியில் நேற்று முன்தினம் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்ட மாபெரும் பேரணி நடைபெற்றது.

ஊழலை ஒழிக்க வலுவான லோக்பால் மசோதா கொண்டுவரப்பட வேண்டும் என்று வலியுறுத்தி காந்தியவாதியும் சமூக சேவகருமான அன்னா ஹசாரே டில்லி ராம்லீலா மைதானத்தில் 2 ஆவது முறையாக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருகிறார்.

தினமும் பல்லாயிரக்கணக்கானவர்கள் இந்த மைதானத்துக்கு வந்து அன்னா ஹசாரேக்கு ஆதரவாக உண்ணாவிரதம் இருந்து வருகின்றார்கள்.

அன்னா ஹசாரேக்கு இந்தியாவில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலும் நாளுக்கு நாள் ஆதரவு பெருகி வருகிறது.

அவருக்கு ஆதரவு தெரிவித்து நேற்று முன்தினம் டில்லியில் மாபெரும் பேரணி நடத்த அன்னா ஹசாரே குழுவினர் ஏற்பாடு செய்து இருந்தனர். டில்லியில் இந்தியா கேட் பகுதியில் இருந்து ராம்லீலா மைதானம் வரை இன்று மாபெரும் பேரணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த பேரணியில் பெருந்திரளாக கலந்து கொண்டு ஆதரவு அளிக்கும்படி பேஸ்புக், கூகுள் பிளஸ் போன்ற இணையத்தளங்களில் பலர் வேண்டுகோள் விடுத்து இருந்தனர்.

நேற்று முன்தினம் மாலையில் நடந்த இந்த பேரணிக்கு டில்லியில் உள்ள இந்திய கேட் பகுதியில் பிற்பகல் 3 மணியிலிருந்தே பல்லாயிரக்கணக்கான மக்களும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ–மாணவிகளும் திரண்டனர். இதனால் அந்தப் பகுதியே மக்கள் வெள்ளத்தால் திணறியது. இந்திய கேட் மற்றும் ராம் லீலா மைதானம் செல்லும் வீதிகள் முழுவதும் மக்கள் தலைகளால் நிரப்பி வழிந்தது.

இந்த கூட்டத்திற்கு அன்னா ஹசாரே குழுவைச் சேர்ந்த சுவாமி அக்னிவேஷ், அரவிந்த் கெஜ்ரிவால், கிரண் பேடி மற்றும் பிரபல சமூக ஆர்வலர் மேதா பட்கர் ஆகியோரும் வந்து சேர்ந்தனர். திட்டமிட்டபடி மாலை 5 மணி அளவில் இந்திய கேட் முன்பிருந்து பேரணி புறப்பட்டது.

திலக் மார்க் வழியாக பேரணி ராம்லீலா மைதானம் நோக்கி சென்றது. பேரணியில் கலந்து கொண்டவர்கள் அன்னா ஹசாரேவுக்கு ஆதரவாகவும் ஊழ லுக்கு எதிராகவும் வலுவான லோக்பால் மசோதா கொண்டு வரும்படி மத்திய அரசை வலியுறுத்தியும் மத்திய அரசு கொண்டுவர உத்தேசித்துள்ள லோக்பால் மசோதாவை திரும்பப் பெறக் கோரியும் 2 ஆவது சுதந்திரப் போராட்டம் தொடங்கி விட்டது என்றும் கோஷங்கள் எழுப்பியபடி சென்றனர்.

அவர்களது கையில் தேசியக் கொடிகளும் ஊழலுக்கு எதிரான வாசகங்கள் மற்றும் 2 ஆவது சுதந்திரப் போராட்டம் இது என்று எழுதப்பட்ட பதாகைகளும் இருந்தன.

இந்த மாபெரும் பேரணியில் டில்லி நகரமே குலுங்கியது. அன்னா ஹசாரேக்கு ஆதரவாக ஏற்கனவே தினந்தோறும் நாடு முழுவதும் பல நகரங்களில் ஊர்வலம் தர்ணா, கண்டன பேரணி, மோட்டார் சைக்கிள் ஊர்வலங்கள், கார் மற்றும் வான் ஊர்வலங்கள் நடந்து வருகின்றன.

நேற்று முன்தினம் டில்லியில் நடந்த பேரணி போல் பெங்களூரில் சிம்லா நகரிலும் பேரணிகள் நடந்தன. பெங்களூர் பேரணிக்கு கணனி பொறியியலாளர்கள் உட்பட அலுவலகம் செல்வோர் ஏற்பாடு செய்து இருந்தனர். இமாசலப்பிரதேச மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் சிம்லா நகரில் மகாத்மா காந்தியின் வெண்கல சிலை அருகில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு பேரணி நடத்தினார்கள். (ஸ்ரீ–2)

## பாரதச் செய்திகள்

# அரசைக் கவிழ்க்கும் நோக்கம் இல்லை

## ஹசாரே குழு அறிவிப்பு

(புதுடில்லி)




வலுவான லோக்பால் மசோதா கோரி 7 ஆவது நாளாக அன்னா ஹசாரே உண்ணாவிரதம் இருந்து வரும் நிலையில் இந்த போராட்டத்தின்மூலம் அரசைக் கவிழ்க்கும் நோக்கம் எதுவும் இல்லை என அவரது குழுவினர் தெரிவித்தனர்.

ஓகஸ்ட் 16 ஆம் திகதியில் இருந்து டில்லி ராம்லீலா மைதானத்தில் அன்னாஹசாரே உண்ணாவிரதம் இருந்து வருகிறார். இத னால் அவரது எடை 5 கிலோ அளவுக்கு குறைந்துவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அவரது போராட்டம் தொடரும் நிலையில் அரசுத்தரப்பில் இருந்து பேச்சுவார்த்தை தொடர்பாக எந்த தகவலும் இல்லை என்று அன்னாஹசாரே குழுவினர் தெரிவித்தனர். பேச்சுவார்த்தைக்கு தயார் என ஊடகத்திடம் பிரதமர் தெரிவித்தார். எங்கே பேச்சுவார்த்தைக்கு வர வேண்டும்? யாரை சந்திக்க வேண்டும் என மீண்டும் மீண்டும் கேட்கிறோம். பதில் வரவில்லை என அரவிந்த் கேஜ்ரிவால் தெரிவித்தார். (ஸ்ரீ–2)

# சென்னையின் பல்வேறு பகுதிகளிலும் பொதுமக்கள் தொடர் போராட்டம்

(சென்னை)

அன்னா ஹசாரேக்கு ஆதரவாக சென்னையின் பல்வேறு பகுதிகளிலும் பொது மக்கள் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

ஊழலுக்கு எதிராகவும் வலுவான லோக்பால் மசோதவை வலியுறுத்தியும் டில்லியில் உண்ணாவிரதம் இருந்து வரும் அன்னா ஹாரேக்கு ஆதரவாக ஊழலுக்கு எதிரான இந்திய அமைப்பினர் சென்னையில் ஆறாவது நாளாக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர்.

இந்த அமைப்பினர் நேற்று முன்தினம் மாலை சென்னை மெரீனா கடற்கரையில் கூடி கலங்கரை விளக்கத்திலிருந்து உழைப்பாளர் சிலை வரை மெழுகுவர்த்தி ஏந்தி அமைதி வ்ழி போராட்டம் நடத்தினர். நூற்றுக்கணக்கான இளைஞர்கள், வியாபாரிகள், கல்லூரி மாணவர்கள், சுற்றுலாப் பயணிகளும் பங்கேற்றனர்.

சென்னை மெரீனா காந்தி சிலை அருகே கூடிய புதிய தலைமுறை அறக்கட்டளையினர் அன்னா ஹசாரேவின் போராட்டத்தை ஆதரித்துப் பேசினர். அன்னாஹசாரேவின் எல்லா போராட்டங்களுக்கும் துணை நிற்போம் என பேசிக் கொண்டிருந்த போதே பொலிசார் இங்கு அனுமதி இல்லை எனக் கூறவும் சற்று தூரம் சென்று கூட்டம் நடத்தினர். ஆசிரியர்கள், மாணவர்கள், அரசு அலுவலர்கள், இளைஞர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

அன்னாஹசாரேக்கு ஆதரவாக அம்பேத்கர் சட்டக் கல்லூரி, சட்ட பல்கலை, மாநிலக்கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, லயோலா கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் தி.நகரில் சைக்கிள் பேரணி நடத்தினர். சோமசுந்தரம் மைதானத்தில் புறப்பட்ட பேரணி சைதாப்பேட்டை வழியாக பெசன்ட்நகர் சென்றடைந்து. மக்களிடம் ஊழலுக்கு எதிராக பிரசாரம் செய்தனர். சவுகார்பேட்டை பகுதியில் பொது மக்கள், இளைஞர்கள் ஆயிரக்கணக்கில் கடந்த 20 ஆம்திகதி இரவு கூடினர். கைகளில் தேசியக்கொடி ஏந்தியும் மெழுகுவர்த்தி ஏற்றியும் பேரணியாகச் சென்றனர். மகா சக்தி ஹோட்டல் அருகே ஆரம்பமாகிய பேரணி காந்தி வீதி வரை சென்றடைந்தது. இதில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

வடசென்னையில் செயற்பட்டு வரும் மாணவர் திறன் மேம்பாட்டு சங்கத்தைச் சேர்ந்த 50 பேர் திருவொற்றியூர் முதல் திருவான்மியூர் வரை செல்லும் பஸ்களில் ஏறி கையில் தேசியக் கொடி ஏந்திச் சென்று பொது மக்களிடம் அன்னாஹசாரே போராட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். (ஸ்ரீ–2)

# மன்மோகன் சிங் பதவி விலக வேண்டும்

## அத்வானி வலியுறுத்தல்

(நெல்லூர்)

பிரதமர் மன்மோகன்சிங் அவரது கடமைகளைச் செய்வதில் முழுமையாகத் தோல்வி அடைந்து விட்டதால் அவர் தனது அலுவலகத்தை காலி செய்வதற்கான நேரம் வந்தவிட்டது என பா.ஜ.க மூத்த தலைவர் அத்வானி தெரித்துள்ளார்.

ஸ்வர்ண பாரத் அறக்கட்டளையின் 10ஆவது ஆண்டுவிழாக் கொண்டாட்டங்களில் பங்கேற்பதற்காக அத்வானி நேற்று முன்தினம் நெல்லூர் வந்தார்.

அங்கு கட்சித் தொண்டர்களிடம் பேசுகையில், அரசியல் ரீதியாகவும் நிர்வாகரீதியாகவும் சாதாரண முடிவைக் கூட எடுக்க முடியாத நிலையில் மன்மோகன் சிங் இருக்கி றார். காங்கிரஸ் தலைவர் சோனியாவின் கை[illegible]யாக மட்டுமே அவர் செயற் படுகிறார் என அத்வானி குற்றம் சாட்டினார். (ஸ்ரீ–2)

# புலமைப்பரிசில் பரீட்சை எழுத சென்ற மாணவர்கள் அசௌகரியம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் நடை பெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு குருநாகல் மாவட்டத்திலுள்ள 2 முஸ்லிம் பாடசாலைகளைச் சேர்ந்த 65 மாணவர்களுக்கு முன்னேகுளம் சிங்கள மகா வித்தியாலயம் பரீட்சை நிலையமாக ஒதுக்கப்பட்டிருந்தது.

ஆனால், அங்கு தமிழ்மொழி பேசும் உத்தியோகத்தர்கள் எவருமே நியமிக்கப் படாததால் மாணவர்கள் பெரும் அசௌக ரியத்திற்குள்ளானதாக அம் மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

நிக்கரெட்டிய கல்வி வலயத்திலுள்ள அபுக் காகம முஸ்லிம் வித்தியாலயம் மற்றும் கல் பினம முஸ்லிம் வித்தியாலயம் ஆகியவற் றைச் சேர்ந்த மாணவர்களே இந்த அசௌ கரியத்தை எதிர்கொண்டனர்.

முன்னேகுளம் சிங்கள மகாவித்தியாலய பரீட்சை நிலையத்தில் தமிழ்மொழி பேசும் உத்தியோகத்தர்கள் எவரும் இல்லாததால் இம்மாணவர்கள் 65 பேரும் பெரும் நெருக் கடியை எதிர்நோக்கியதாக மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மாவட்ட கல்விப் பணிப் பாளர் திலகரட்னவிடம் கேட்டபோது தமிழ் மொழி தெரிந்த உத்தியோகத்தர்கள் எவரும் நியமிக்கப்படாதமையினால் அம் மாணவர் களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என வும் இது தொடர்பாக தான் விசாரணைக்கு உத்தரவிடவுள்ளதாகவும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# பணமோசடியில் ஈடுபட்ட பெண் ஒருவர் கைது

(கொழும்பு)

அரச துறையில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதாக மக்களை ஏமாற்றி பணத்தை மோசடி செய்த பெண் ஒருவர் பேராதனையில் பொலிஸாரால் கைது செய் யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண்ணிடமிருந்து போலியாக தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

சந்தேக நபர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரி என தம்மை அடையாளப்படுத்தியிருப்பதாகவும் பொலி ஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

கண்டி நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட பெண் செப்டெம்பர் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# சிலாபம் நகரில் விபத்து; பொதுமகன் பலி

(கொழும்பு)

சிலாபம் நகரில் கெப் வாகனம் மோதியதில் 45 வயதுடைய பாதசாரியொருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று நடைபெற்ற இந்த விபத்தின் போது கடுங்காயங்களுக்குள்ளான நபர் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

# தமிழக முதல்வரை சந்திக்க அனுமதி கோரி வைகோ கடிதம்

(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக் கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட மூவ ரை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முதல்வர் ஜெயலலிதா விடம் நேரில் சந்தித்து வலியுறுத்த அனுமதி கேட்டு அவருக்கு ம.தி.மு.க.பொதுச் செயலர் வைகோ கடிதம் எழுதியுள்ளதாக ம.தி.மு.க. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சட்டசபை தேர்தல் கூட்டணி முறிவுக்கு பின் அவர்கள் இருவரின் முதல் சந்திப்பு கோட்டையில் நடக்குமா? என்ற எதிர்பார்ப்பு அக் கட்சியில் எழுந்துள்ளது.

மூவரின் உயிரை பாதுகாக்கும் மக்கள் இயக்கம் ஒன்று ம.தி.மு.க.பொதுச் செயலர் வைகோ தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள் ளது. சென்னை விருகம்பாக்கம் அருகில் உள்ள விடுதலைப் புலிகளின் ஆதரவு தலை வர் ஒருவரின் வீட்டில் வைகோ மற்றும் விடுத லைப் புலிகளின் ஆதரவாளர்கள் கலந்து கொண்ட இரகசியக் கூட்டம் கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்றது.

அக் கூட்டத்தில் தமிழக சட்டசபையில் இலங்கைக்கு பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை மத்திய அரசை வலியுறுத்தி முதல்வர் ஜெயலலிதா நிறை வேற்றியதன்மூலம் அவரால் மட்டுமே தூக் குத் தண்டனை கைதிகளை காப்பாற்ற முடியும் என்ற கருத்து உட்பட இது குறித்து பல் வேறு கருத்துக்கள் பேசப்பட்டன.

முதல்வர் ஜெயலலிதாவை மக்கள் இயக் கத்தின் சார்பில் ஒருங்கிணைப்பாளார்கள் குழு நேரில் சந்தித்து கோரிக்கை மனுவை அளிக்க வேண்டும் என்ற முடிவும் எடுக்கப் பட்டது. அக் கூட்டம் முடிந்த மறுநாள் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்த தூக்குத் தண் டனை கைதிகள் மூவரை வைகோ மற்றும் அவரது சகாக்கள் சிலர் சந்தித்துப் பேசினர் என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தலுக்கு முன் அ.தி.மு.க.தலைமையை அரசியல் ரீதியாக விமர்சித்த வைகோ தற் போது முதல்வர் ஜெயலலிதாவை புகழ்ந்து பேசி வருகிறார். இப்பிரச்சினை குறித்து ம.தி. மு.க.மாநில நிர்வாகி ஒருவர் கூறும்போது, மக்கள் இயக்கத்தின் சார்பில் முதல்வர் ஜெய லலிதாவை நேரில் சந்தித்து கோரிக்கை மனு வழங்க அனுமதி கேட்டு கடிதம் எழுதப்பட் டுள்ளது. விரைவில் முதல்வர் ஜெயலலிதா வைகோ சந்திப்பு கோட்டையில் நடக்கும் வாய்ப்புள்ளது என்றார். (ஸ்ரீ-2)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருவர் கைது

(கொழும்பு)

சுமார் 45 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களுடன் இரண்டு சந்தேக நபர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று காலை இந்தியாவிலிருந்து நாட் டிற்கு வருகை தந்திருந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக குறித்த தங்க ஆபரணங் கள் நாட்டிற்கு கொண்டு வரப்பட்டதாக கிடைக் கப்பெற்ற தகவலுக்கமைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதோடு அவர்கள் விசார ணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ஸ்ரீ)

# வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் மக்கள் பெரும் திண்டாட்டம்

## ஜே.வி.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் மக் கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக ஜே.வி.பி.குற்றம் சுமத்தியுள்ளது.

சமையல் எரிவாயு, வெங்காயம், உரு ளைக்கிழங்கு மற்றும் வெள்ளைப் பூண்டு போன்றவற்றுக்கான விலைகள் அண்மை யில் உயர்த்தப்பட்டன.

மக்கள் ஏற்கனவே பொருட்கள் சேவை களின் விலையேற்றத்தினால் திண்டாடி வரு வதாக ஜே.வி.பி குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த நிலையில் பொருட்கள் சேவைக ளுக்கான விலை மேலும் அதிகரிக்கப்படுவ தனை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியினரின் ஊழல் மோசடி களின் சுமை பொதுமக்கள் மீது திணிக்கப்படு வதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)


## கட்டாக்காலி மாடுகள் ஏல விற்பனை

அரியாலை கிழக்கில் பிடிக்கப்பட்ட கட்டாக்காலி மாடுகள் எதிர்வரும் 25.08.2011 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அரியாலை கிழக்குப் பகுதியில் ஏலத்தில் விடப்படும். ஏலத்தில் பங்குபற்றி வெற்றிபெற்றவர்கள் உடனடியாகவே ஏலத்தொகையினை செலுத்துவதுடன், ஏலம் விடப்படும் இடத்திலிருந்து மாடுகளை தாமதிக்காமல் எடுத்துச் செல்ல வேண்டும் எனவும்

செயலாளர்,

(சி-4153)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## பேராசிரியர் அ.துரைராசா தங்கப்பதக்கம்

பேராசிரியர் அ.துரைராசா தங்கப்பதக்கத்தினை வழங்கும் பொருட்டு 06.10.2010 இற்கு பின்னர் பட்டம் பெற்ற மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமை:- எதிர்வரும் பட்டமளிப்பு வைபவத்தில் பட்டம் பெறவிருக்கும் முதலாம் அல்லது இரண்டாம் (மேற்பிரிவு) வகுப்புக்களில் சித்தியடைந்தவர்கள்.

விண்ணப்பப்படிவங்களை கீழ்க்காணும் முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

1. சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
2. சிரேஷ்ட உதவிப் பதிவாளர், வவுனியா வளாகம், வவுனியா.
3. www.jfn.ac.lk இணையத்தளம்

விருதுகள்:- பல்கலைக்கழக மட்டத்தில் சகலதுறைகளிலும் சிறப்பாக செயற்பட்டமைக்காக ஒரு பதக்கமும், பீட மட்டத்தில் சகல துறைகளிலும் சிறப்பாக செயற்பட்டமைக்காக பீடங்களுக்கு ஒவ்வொரு பதக்கமும் வழங்கப்படும்.

முடிவுத் திகதி:- 09.09.2011

சரியான, பொருத்தமான தகவல்களை உள்ளடக்காத தெளிவற்றதும் பூரணப்படுத்தப்படாததும் மற்றும் முடிவுத் திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர். (சி/4154)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## பேராசிரியர் கந்தையா குணரத்தினம் தங்கப்பதக்கம்

பேராசிரியர் க.குணரத்தினம் தங்கப்பதக்கத்தினை வழங்கும் பொருட்டு 06.10.2010 இற்கு பின்னர் பட்டம் பெற்ற தூய, பிரயோக விஞ்ஞான பட்ட மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமை:- எதிர்வரும் பட்டமளிப்பு வைபவத்தில் பட்டம் பெறவிருக்கும் விஞ்ஞானம், விவசாயம் மற்றும் பிரயோக விஞ்ஞானத்தில் நான்கு வருட இளமாணிப் பட்டம் பெறவிருக்கும் முதலாம் அல்லது இரண்டாம் (மேற்பிரிவு) வகுப்புக்களில் சித்தியடைந்தவர்கள்.

விண்ணப்பப்படிவங்களை கீழ்க்காணும் முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

1. சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் உ பல்கலைக்கழகம்.
2. சிரேஷ்ட உதவிப் பதிவாளர், வவுனியா வளாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், வவுனியா.
3. www.jfn.ac.lk இணையத்தளம்

முடிவுத் திகதி:- 09.09.2011

சரியான, பொருத்தமான தகவல்களை உள்ளடக்காத தெளிவற்றதும் பூரணப்படுத்தப்படாததும் மற்றும் முடிவுத் திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர். (சி/4154)

செய்தவினையும் செய்கின்ற வினையும் அதன் எதிரொலியை காட்டாமல் மறைய மாட்டாது. ~ ஓர் அறிஞர்.

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## ஊழல் என்ற வடிவில் காங்கிரஸை வந்துறுத்தும் ஊழ்வினை

பூச்சியத்திற்குள்ளே ஒரு இராஜ்ஜியத்தை ஆண்டு கொண்டு புரியாமலே இருப்பான் ஒருவன். அவனைப் புரிந்து கொண்டால் அவன்தான் இறைவன்.

இந்தப் பாடல் வரிகள் மகாதத்துவத்தை விளக்குகின்றன. உலகின் வரலாற்றையும் அதன் அசைவு நிலைகளையும் உன்னிப்பாக அவதானித்தால், ஊழ்வினையின் உண்மைப் பொருள் விளங்கும்.

நிகழ்கால வசதி வாய்ப்புகள், அதிகாரங்கள், பதவிகள் என்பவற்றை வைத்துக் கொண்டு எதிர்காலமும் அப்படித்தான் இருக்கும் என அனுமானிக்கும் எவரும் பகுத்தறிவு சிந்தனைக்குட்பட்டவர்கள் அல்ல என்ற முடிபுக்கு நாம் வர முடியும்.

இதற்கு இந்த நாட்டை ஆட்சி செய்தவர்களுக்கு நேர்ந்த கதி நல்ல சான்றாதாரமாகும்.

தமிழ் மக்களின் இன அழிப்புக் கொள்கைக்கு ஆட்சியாளர்கள் பலர் பயிற்சி கொடுத்திருந்தாலும் அதற்கு அரங்கேற்றம் வைத்தவர் இந்த நாட்டின் நிறைவேற்று அதிகாரத்தை கொண்டு வந்த காலஞ்சென்ற முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன என்பது மறுக்க முடியாத உண்மை.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை கருவறுக்கவும் ஐக்கிய தேசியக் கட்சியை நிலை நிறுத்தவும் அவர் எடுத்த முயற்சிகள் இன்று அவரின் கட்சியை தலைநிமிர விடாமல் செய்துள்ளது.

இதேபோல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என்ற உறுதிமொழியோடு ஆட்சிக்கு வந்த சந்திரிகா குமாரதுங்க, இப்போது எல்லாம் இழந்து வெறுங்கையோடு இருப்பதும் இனப்பிரச்சினையை நானே தீர்த்து வைத்திருக்கலாம் என்று அவர் காலம் கடந்து ஆதங்கப்படுவதும் அவரின் ஊழ்வினைப் பயன் என்றே கூறவேண்டும்.

எல்லாம் அனுருத்த ரத்வத்தையின் சொல்லைக் கேட்ட நாசம்.

இப்படி ஆட்சியில் அமர்ந்தவர்களை சுட்டிக் காட்ட முடியும் என்றாலும், அண்டை நாடான இந்தியாவின் ஆளும் காங்கிரஸை ஊழல் என்ற ஊழ்வினை துரத்துவதை பார்க்கும் போது,

வன்னிப் போரில் தமிழ் மக்கள் எழுப்பிய அபயக்குரல் அன்னா ஹசாரேயின் வடிவில் காங்கிரஸ் ஆட்சிக்கு கிடங்கு வெட்டத் தலைப்பட்டுவிட்டது என்பதை உணர முடிகின்றது.

அட! ஈழத் தமிழர் பிரச்சினையில் டி.ஆர்.பாலுவை இங்கே அனுப்பி நாடகம் நடித்த கலைஞர் இப்போது பதவியையும் இழந்து தன் குடும்பச் சண்டைக்கு தீர்வு காண முடியாமல் தவிக்கின்றார்.

அடேங்கப்பா! பூச்சியத்திற்குள் இருப்பவரின் ஆட்சியை நினைக்க இவை மட்டுமா?

விடுதலைப் புலிகளை சரிக்கட்டி விட்டால் எல்லாம் சரியாகி விடும் என்று நினைக்க, அது வலம் மாறி சர்வதேச மட்டத்தில் நின்று இலக்கு வைத்து தாக்கமுடியாத அளவில் புலிகள் கொடுத்த தொந்தரவை விட மிக மோசமாக தொந்தரவு கொடுக்கின்றது.

என்ன செய்வது! நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கிறது. அவ்வளவுதான்.

## அன்னா ஹசாரேக்கு ஆதரவு தெரிவித்து தமிழ்த்திரையுலகினர் இன்று உண்ணாவிரதம்

(சென்னை)

ஊழலுக்கு எதிரான வலுவான லோக்பால் மசோதா கோரி போராடி வரும் அன்னா ஹசாரே குழுவுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் தமிழ்த் திரையுலகினர் இன்று உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொள்ளவுள்ளனர்.

அன்னா ஹசாரேவுக்கு ஆதரவாக இந்தி, தெலுங்கு, கன்னட திரையுலகினர் இதுவரை குரல் கொடுத்தும், பேரணி நடத்தியும் வருகின்றனர். இந்த விவகாரத்தில் தமிழ் திரையுலகினர் இதுவரை மௌனம் காத்து வந்தனர்.

இந்நிலையில் சினிமா தயாரிப்பாளர் சங்க கட்டடம் அமைந்துள்ள ஃபிலிம் சேம்பர் வளாகத்தில் இன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை உண்ணாவிரதம் இருந்து தமிழ்த் திரையுலகினர் தங்களது ஆதரவை தெரிவிக்க இருக்கிறார்கள்.

இந்த உண்ணாவிரத போராட்டம் குறித்து தயாரிப்பாளர் கேயார் நேற்று நிருபர்களிடம் கூறுகையில், அன்னா ஹசாரே ஊழலுக்கு எதிராக போராடி வருகிறார். அவருக்கு தமிழ் திரையுலகினர் அனைவரது ஆதரவையும் தெரிவிக்கும் வகையில் இன்று சினிமா தயாரிப்பாளர் சங்க வளாகத்தில் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ளவுள்ளோம்.

காலை 9 மணி முதல் மாலை5 மணிவரை இப்போராட்டம் நடைபெறும். திரையுலகைச் சேர்ந்த அனைத்து சங்க உறுப்பினர்களும் இப்போராட்டத்தில் பங்கேற்க வேண்டும். இதற்காக படப்பிடிப்புகள் அனைத்தும் நிறுத்த வேண்டிய தேவை இல்லை. படப்பிடிப்பு இல்லாதவர்கள் நேரடியாக கலந்து கொண்டு ஆதரவு தெரிவிக்கலாம். படப்பிடிப்பு உள்ளவர்கள் படப்பிடிப்பில் கலந்து கொண்டு அங்கு இருந்தவாறே தங்களது ஆதரவை தெரிவிக்கலாம் என்றார்.

ரஜினி, கமல் உள்ளிட்ட நடிகர்கள் பங்கேற்பார்களா என்ற கேள்விக்கு உங்கள் மூலமாகத்தான் ஊடகங்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறோம். தனியாக நாங்கள் யாரையும் அழைக்கவில்லை. திரையுலகைச் சேர்ந்தவர்கள் யாராக இருந்தாலும் கலந்து கொள்ளலாம் என்று கேயார் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## மெனிக்பாமிலுள்ள 1760 குடும்பங்களை கோம்பாவிலில் குடியேற்ற நடவடிக்கை

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வவுனியா மெனிக்பாம் முகாமில் தங்கியுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மக்களை கோம்பாவில் பகுதியில் குடியேற்றம் செய்வது தொடர்பான கலந்துரையாடலொன்று நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள் குடியேற்றம் செய்ய அனுமதிக்கப்படாத 10 கிராம அலுவலர் பகுதிகளைச் சேர்ந்தவர்களையே கோம்பாவில் பகுதியில் குடியேற்றம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றதாகவும் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் ஏ.பத்திநாதன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் புதுக்குடியிருப்பு கிழக்கு, புதுக்குடியிருப்பு மேற்கு, மந்துவில், சிவநகர், மல்லிகைத்தீவு, ஆனந்தபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலும் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் கேப்பாப்பிளவு, முள்ளிவாய்க்கால் கிழக்கு, முள்ளிவாய்க்கால் மேற்கு, அம்பலவன் பொக்கணை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலும் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் இதுவரையில் முன்னெடுக்கப்படவில்லை.

இந்த நிலையிலேயே மேற்படி கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் கோம்பாவில் பகுதியில் குடியேற்றப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆயிரத்து 760 குடும்பங்கள் எதிர் வரும் செப்டெம்பர் மாதம் முதல் வார மளவில் கோம்பாவில் பகுதியில் குடியேற்றப்படவுள்ளனர். இந்த மக்களை குடியேற்றம் செய்வதற்கான பகுதிகளில் தற்போது துப்புரவுப் பணிகள் இடம் பெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ள மக்களை சந்தித்து அவர்களின் குறைநிறைகள் தொடர்பில் கேட்டறிந்து கொள்வதற்காக நாளை மறுதினம் யு.என்.எச்.சீ.ஆர். அதிகாரிகள், முல்லைத் தீவு மற்றும் வவுனியா மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், கரைதுறைப் பற்று மற்றும் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர்கள், இராணுவ சிவில் நிர்வாக அதிகாரிகள் ஆகியோர் மெனிக்பாம் முகாமிற்கு செல்லவுள்ளதாகவும் அரசாங்க அதிபர் ஏ.பத்திநாதன் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## தகவல் தொடர்பாடல் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் கீழ் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழ் பெறுவதற்கான பயிற்சிநெறிக்கு யாழ்ப்பாணம், மானிப்பாய் போன்ற பயிற்சி நிலையங்களிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு விண்ணப்பிப்போர் க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் கூடிய 6 பாடங்களில் சித்தி அல்லது ஏதேனும் 4 பாடங்களில் திறமைச்சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தி அல்லது ஏதேனும் 3 பாடங்களில் திறமை சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியுடன் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 2 பாடங்களில் சித்தி ஆகிய தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

அத்தோடு விண்ணப்பதாரி விண்ணப்பமுடிவுத் திகதியன்று 16 தொடக்கம் 25 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.தகுதி உடையவர் கள் முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இல க்கம், கல்வித் தகைமைகள், பயில விரும்பும் பயிற்சி நிலையம் என்ப வற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயா ரிக்கப்பட்ட மாவட்ட முகாமையாளர், NAITA, இல.7,கோவில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அத்துடன் காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் தகவல் தொடர்பாடல் கற்றைநெறி(NCICT)க்கான விண்ணப்பம் என தவறாது குறிப்பிடப்பட வேண்டும். (ஸ்ரீ)

## தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(கரவெட்டி)

தனது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு 7 மணியளவில் வடமராட்சி இன்பசிட்டிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, குடும்பத்தவர்கள் வெளியே சென்று விட்டு வீடு திரும்பிய வேளை குறித்த நபர் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் அப்பகுதியைச் சேர்ந்த இராமச்சந்திரன் அரவிந்தன்(வயது35) என்ற 2 பிள்ளைகளின் தந்தை என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சடலம் பருத்தித்துறை பொலிஸாரால் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-24)

## இலவச மருத்துவ பரிசோதனை


(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள மூத்த விநாயகர் ஆலய வளவில் உற்சவகாலங்களில் மாலை 6 மணி தொடக்கம் இரவு 9 மணிவரை இலவச மருத்துவ பரிசோதனைகள், சேவைகள், ஆலோசனைகள் பாட்லீட் பினான்ஸ் அனுசரணையுடன் நடைபெறுகிறது.

இதில் அனைவரையும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொள்கின்றனர். (ஸ்ரீ)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### ஆசி மொழிகள்



நான் உங்கள் அனைவரையும் இதய பூர்வமாக ஆசீர்வதிக்கிறேன். தேவி பேராற்றல் வடிவில் உங்கள் நெஞ்சில் எழுந்தருள்வாளாக. அபாயம், ப்ரிதிஷ்டாம், பயமின்மையின் இருப்பிடமான அவள் உங்களைப் பயம் இல்லாதவர்கள் ஆக்குவாளாக.

உங்கள் அனைவரையும் நான் ஆசீர்வதிக்கிறேன்.தேவியின் புண்ணியநாளான இந்த இரவில் அவள் எல்லையிலா வலிமை தருவாளாக! உங்கள் கைகளுக்கு எல்லையிலா வலிமை தருவாளாக!

ஜெய்காளி, ஜெய்காளி, ஜெய்காளி, ஜெய்காளி! அவர் நிச்சயமாக இறங்கி வருவாள், மகாபலத்துடன் வெற்றி அனைத்தையும் கொண்டுவரு[illegible]ள், உலகையே வெற்றி கொள்ளச் செய்வாள். தேவி வந்து கொண்டிருக்கிறா[illegible]

## துணுக்காய் பிரதேசசபை உறுப்பினர்கள் பதவியேற்பு

நடைபெற்று முடிந்த உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலில் துணுக்காய் பிரதேச சபைக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பதவியேற்பு வைபவம் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு துணுக்காய் பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் தவிசாளர் வீ.இராஜரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி திணைக்கள உயரதிகாரிகள், துணுக்காய் பிரதேச செயலாளர், துணுக்காய் பிரதேச மக்கள் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஶ்ரீ-3)

# இடைத்தங்கல் முகாமில் அவல வாழ்வு வாழ்ந்து வரும் கருநாட்டுக்கேணி மக்கள்

மீள்குடியேற்றத்திற்கென அழைத்து வரப்பட்ட போதும் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படாத நிலையில் உணவு, குடிநீர், வாழ்விடம் போன்றன இன்றி இடைத்தங்கல் முகாமில் அவல வாழ்வை வாழ்ந்து வருவதாக முல்லைத்தீவு மாவட்டம் கருநாட்டுக்கேணி குடாக்கரை இடைத்தங்கல் முகாம் மக்கள் தெரிவித்துள்ளனர்.

மீள்குடி யேற்றம் என்ற பெயரில் கடந்த 3 ஆம் மாதம் 29 ஆம் திகதி வவுனியா முகாம்களில் இருந்து அழைத்து வரப்பட்டோம். எனினும் எமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்படாமல் குடாக்கரையென்னும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாமில் தற்போதும் தங்கவைக்கப்பட்டுள்ளோம் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் கருநாட்டுக்கேணியைச் சேர்ந்த சுமார் 65குடும்பங்களைச் சேர்ந்த 200 இற்கும் மேற்பட்டோர் வெறும் தறப்பாள் கூடாரங்களுக்குள் ஒரு மாதத்திற்கு ஒரு தடவை மட்டும் வழங்கப்படும் நிவாரணத்தை மட்டும் நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

மேலும் மீள்குடியேற்றத்தில் வழங்கப்படும் 50 ஆயிரம் ரூபா மீள்குடியேற்ற நிதியில் 20 ஆயிரம் ரூபா மட்டுமே இற்றைவரைக்கும் வழங்கப்பட்டிருக்கின்றது. நிவாரணம் ஒரு மாதத்திற்கு ஒரு தடவை மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்படுகின்றது. குடிநீர் செம்மலைப் பிரதேசத்திலிருந்து பவுசர்கள் மூலம் கொண்டு வரப்படுகின்றது.

இந்த நீர் உணவுத் தேவைக்கான பயன்பாட்டிற்கே போதுமானதாக இல்லை. இந்நிலையில் இதர தேவைக்கான நீரைப் பெறுவதில் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

பிரதேச மக்களின் அடிப்படை வாழ்வாதார தொழில் கடற்தொழில். எனினும் கடற்தொழில் அனுமதி இன்னமும் வழங்கப்படவில்லை. இதனால் தொழில் இல்லை. வெளியில் சென்று தொழில் தேடுவதென்றால் பிரதேசத்திலுள்ள இராணுவ முகாமிற்குச் சென்று பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இதன்போது செல்லுமிடம், தங்குமிடம், மீள்முகாமுக்கு வரும்நாள் போன்றவற்றைக் கொடுக்க வேண்டும். இதனால் பெரும்பாலானோர் வெளியில் சென்று தொழில் செய்ய முடியாத நிலையில் முகாமுக்குள் அவல வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

கடந்த 20 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் முன்னால் கூடிய குறித்த இடைத்தங்கல் முகாம் மக்கள் தமது பிரச்சினைகள் தொடர்பில் எடுத்துக்கூறியதுடன் மகஜர் ஒன்றினையும் சமர்ப்பித்திருக்கின்றனர். எனினும் அதிகாரிகளிடமிருந்து எந்த விதமான பதிலும் உடனடியாக கிடைக்கப்பெறவில்லை.

எனவே இவ்விடயம் குறித்து உரிய தரப்பினர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுள்ள பிரதேச மக்கள் ஒரு வாரத்திற்குள் மீள்குடியேற்றம் செய்யப்படுவீர்கள் என்று அழைத்து வரப்பட்ட தாம் சொந்த மண்ணில் சுதந்திரமாக நடமாடக்கூட முடியாத நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பதாகவும் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை குறித்த பிரதேசத்தில் மக்களுடைய வாழ்விடங்களில் தொடர்ந்தும் இராணுவத்தினர் வெளியேறாத நிலையில் தங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஶ்ரீ-2)

## சர்வதேச நியாயாதிக்க சபையில் முறையிட இலங்கை முயற்சி

தமிழீழ விடுதலைப்புலிகள் சர்வதேச ரீதியாக மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து சர்வதேச நியாயாதிக்க சபையில் இலங்கை முறையிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏசியன் ரிபியூன் இணையத்தளம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் சர்வதேச ரீதியாக மேற்கொண்ட குற்றச் செயல்களை மையமாகக் கொண்டு இந்த நடவடிக்கையை இலங்கை மேற்கொள்ளலாம் என்று ஏசியன் ரிபியூன் சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்காக லண்டனில் இயங்கும் நிறுவனம் ஒன்றிடம் இலங்கை அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளின் குற்றச் செயல்கள் தொடர்பான தகவல்களை பெற்றுள்ளதாக ஏசியன் ரிபியூன் குறிப்பிட்டுள்ளது.

நாடுகள் தமது முறைப்பாடுகளை சர்வதேச சட்டமுறைகளுக்கு ஏற்ப மேற்கொள்வதற்கு சர்வதேச நியாயாதிக்க சபை உதவுகின்றது.

இந்தநிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் நிதிசேகரிப்பு ஆயுதக் கொள்வனவு உட்பட தமது குற்றச் செயல்களை பெரும்பாலும் பிரித்தானியா, பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, ஜேர்மனி, டென்மார்க், நோர்வே, நெதர்லாந்து, பெல்ஜியம், இத்தாலி, ஸ்பெயின், அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளில் மேற்கொண்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ஶ்ரீ-2)

## இறுதிப் போரின் போது வன்னியில் கடமையாற்றிய ஆசிரியர்கள் நெருக்கடியில்

இறுதிப் போரின் போது வன்னியில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு உரிய விடுமுறை ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக குறித்த ஆசிரியர்கள் தமது பதவியுயர்வு உள்ளிட்ட விடயங்களின் போது பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் தெரிவிக்கையில்,

குறித்த பிரச்சினைகள் தமக்கு முறைப்பாடுகளாக கிடைத்துள்ளதாகவும் இதில் 60 வீதமான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய பிரச்சினைகளையும் தீர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் உள்ள ஆசிரியர்களுக்கே இந்த பிரச்சினையின் தாக்கம் அதிகமாகவுள்ளது.

இதற்கு கல்வி அதிகாரிகளின் வெற்றிடங்களும் காரணமாக அமைந்துள்ளன.

எனவே பிரச்சினைகளுக்கு உள்ளாகியுள்ள ஆசிரியர்கள் தம்மை தொடர்பு கொள்ளுமாறும் வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஆசிரியர்கள் முகாமில் தங்கியிருந்த காலப்பகுதியில் விசேட விடுமுறையாக அறிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஶ்ரீ-2)


## மேலும் 52 மாணவர்கள் லண்டனில் நிர்க்கதி

லண்டனிலுள்ள ப்லூம்பரி பிஸ்னஸ் மற்றும் லண்டன் பிஸ்னஸ் அக்கடமி ஆகிய உயர்கல்வி நிறுவனங்கள் திடீரென மூடப்பட்டதால் மேலும் 52 இலங்கை மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக பிரித்தானியாவிற்கான இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகர் பி.எம்.அம்சா தெரிவிக்கையில்,

தற்போது மூடப்பட்டுள்ள உயர்கல்வி நிறுவனங்களின் தலைவர்களுடன் எதிர்வரும் வெள்ளிக்கிழமை விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளதாக குறிப்பிட்டார்.

ஏற்கனவே லண்டனின் ஈடன் ஹவுசிலுள்ள ஃபுல்ஹாம் ச்செல்சி கல்வியகம் மூடப்பட்டதால் 38 இலங்கை மாணவர்கள் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ-2)



நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு செல்வி சிவரூபி ஶ்ரீஜெகநாதனின் இசைக் கச்சேரி நிகழ்வு அண்மையில் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் வயலின் வித்துவான் வி.ரமணன் வயலின் வாசிப்பதையும் மிருதங்கவித்துவான் அ.ஜெயராமன் மிருதங்கம் வாசிப்பதையும் படத்தில் காணலாம்.
(படம்:-என்.குமார்.)

## ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

இந்த வருட இறுதிக்குள் இலங்கையில் ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கவுள்ளது.

இந்த எண்ணிக்கை 5 இலட்சமாக அதிகரிக்கும் என்று ஓய்வூதிய திணைக்கள பணிப்பாளர் கே.ஏ.திலகரட்ன தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக ஓய்வூதியக்காரர்களுக்கு செலுத்தும் கொடுப்பனவு தொகையும் வருடம் ஒன்றுக்கு 100 பில்லியன் ரூபாய்களாக அதிகரிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

2010 ஆம் ஆண்டு வரையில் 4 இலட்சத்து 73 ஆயிரத்து 762 பேர் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். இதில் சுமார் 75 ஆயிரம் பேர் படைத்தரப்பினர் ஆவர்.

இதேவேளை அரச பணியாளர்களுக்கான கட்டாய ஓய்வூதிய வயதெல்லையை 60 இலிருந்து 65 ஆக உயர்த்துவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஓய்வூதிய திணைக்கள பணிப்பாளர் தெரிவித்தார். (ஶ்ரீ-2)

## புத்தளம் மாவட்டத்தில் கடும் வரட்சி; பல இடங்களில் குடிநீர் தட்டுப்பாடு

புத்தளம் மாவட்டத்தில் நிலவும் கடுமையான வரட்சியின் காரணமாக பல இடங்களில் குடிநீர் தட்டுப்பாடு நிலவுகின்றது.

க்டுமையான வெயில், மழையின்மை போன்றவற்றின் காரணமாக இப்பகுதி கிணறுகளில் நீர் வற்றிப் போயுள்ளன.

மேட்டுப் பகுதிகளில் வாழும் ம்க்கள் தமது பகுதிகளில் குடிநீர் கிடைக்காமல் தாழ்வான இடங்களுக்குச் சென்று குடிநீர் கொண்டுவர வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியுள்ளனர்.

சில வேளைகளில் இவர்கள் குடிநீருக்காக பத்து முதல் பதினைந்து கிலோமீற்றர் தூரம் வ்ரை செல்லவேண்டிய சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கருவெலகெஸ்வெவ, ஆனைமடு, முண்டல் போன்ற பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பல கிராமங்களில் இவ்வாறான குடிநீர் தட்டுப்பாடு நிலவுகின்றது.

குடிநீர் தட்டுப்பாடு நிலவும் கிராமங்களுக்கு வெளியிடங்களிலிருந்து பௌசர் வண்டிகள்மூலம் குடிநீர் கொண்டு சென்று விநியோகிக்க பிரதேச செயலகங்கள் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன. (ஶ்ரீ-2)

## மாந்தை கிழக்கு பிரதேசத்தில் 11 வீதிகள் புனரமைப்பு

(முல்லைத்தீவு)

என்றிப் திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் முல்லைத்தீவு மாவட்ட மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட 11 வீதிகள் 19.6 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

இதில் வன்னி விளாங்குளம் முதலாம் ஆம் குறுக்குவீதி, வன்னி விளாங்குளம் 2 ஆம் குறுக்குவீதி, வன்னி விளாங்குளம் 3 ஆம் குறுக்குவீதி, வன்னி விளாங்குளம் 4 ஆம் குறுக்குவீதி, வன்னிவாளங்குளம் மைதானபின் இணைப்புவீதி, பாண்டியன்குளம் விக்னேஸ்வரா வீதியிலிருந்து எஸ்.ஆர் சந்தி வரையுள்ள வீதி, பாண்டியன் குளம் சந்தையிலிருந்து நட்டாங்கண்டல் சந்திவரையுள்ள வீதி, பாலிநகர் சந்தியிலிருந்து மதகுவரையுள்ள வீதி, கரும்புள்ளியான் குடியிருப்பு வீதி, கொள்ள விளாங்குளம் வடகாடு வீதி, அம்பாள்புர சகாய வீதி ஆகிய வீதிகளே புனரமைக்கப்படவுள்ளன. இப்புனரமைப்பு வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ-3)

# இந்திய அணிக்கு அவமானம்

# வெள்ளையடித்தது இங்கிலாந்து

(லண்டன்)

நான்காவது டெஸ்ட் போட்டியிலும் இந்திய அணியை இன்னிங்ஸ் மற்றும் 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி கொண்ட இங்கிலாந்து அணி தொடரை 4-0 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றியது.

இதன் மூலம் இங்கிலாந்து அணி தனது சொந்தமண்ணில் இந்திய அணிக்கு வெள்ளை அடித்தது. இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது.

இதில் முதல் மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி தொடரை 3-0 என்ற கணக்கில் தனதாக்கியது.

இந்நிலையில் நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 18 ம் திகதி லண்டன் ஓவலில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணய சழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 6 விக்கெட்டுகளை இழந்து 591 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதில் இயன் பெல்364 பந்துகளில்( 23 பவுண்டரிகள்,2 சிக்சர்கள் அடங்கலாக) 235 ஓட்டங்களையும் கெவின் பீற்றர்சன் 232 பந்துகளில்( 27 பவுண்டரிகள்உட்பட) 175 ஓட்டங்களையும் பொப்ரா 44 ,ஸ்ரொரஸ்-40,குக் 34 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் ஸ்ரீசாந்த் 3 விக்கெட்டுக்களையும் ரெய்னா 2 விக்கெட்டுக்களையும் இஷாந்த் சர்மா ஒரு விக்கெட்டையும் வீழ்த் தினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதலாவது இன்னிங்சில் 300 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன்மூலம் முதலாவது இன்னிங்சில் 291 ஓட்டங்களால் பின்னிலை வகித்த இந்திய அணியை பொலோன் நிலையில் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்சில் துடுப்பெடுத்தாட இங்கிலாந்து அணி அழைத்தது.

இந்திய அணியின் துடுப்பாட்டத்தில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ராகுல் ராவிட் ஆட்டமிழக்காமல்266 பந்துகளில் 20 பவுண்டரிகள் உட்பட 146 ஓட்டங்களையும் அமித் மிஸ்ரா 43 ஆர்.பி.சிங் 25,டெண்டுல்கர் 23 ஓட்டங்களையும் எடுத்தனர்

பந்து வீச்சில் பிரேஸ்னன்,சுவான் தலா 3 விக் கெட்டுக்களையும் அன்டர்சன்,பிரோட் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து பொலோன் அடிப்படையில் இரண்டாவது இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்று முன்தினம் நான்காவது நாள் ஆட்ட நேர முடிபில் 3 விக்கெட்டுக்களை இழந்து 129 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் 5 வதும் இறுதிநாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 2 வது இன்னிங்சில் 283 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இதன் மூலம் இங்கிலாந்து அணி இன்னிங்ஸ் மற்றும்8 ஓட்டங்களால் வெற்றி பெற்றுதொடரை 4:0 என்ற கணக்கில் முழுமையாகக் கைப்பற்றி இந்திய அணிக்கு வெள்ளையடித்தது. ( White wash )

துடுப்பாட்டத்தில் சச்சின் டெண்டுல்கர் 172 பந்துகளில்(11 பவுண்டரிகள் உட்பட)91 ஓட்டங்களையும் அமித் மிர்ஷா 141 பந்துகளில் (10 பவுண்டரிகள் உட்பட)84 ஓட்டங்களையும் சேவாக்33 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சுவான் 38 ஓவர்கள் பந்து வீசி106 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களையும்பிராட் 2 விக்கெட்டுக்களையும். அன்டர்சன்,பிரேஸ்னன் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

**மூன்றாமிடம்**

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை 0-4 என மோசமாக இழந்த இந்திய அணி ஐ.சி.சி டெஸ்ட் அணிகளுக்கான தர வரிசையில் 117 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டது. இங்கிலாந்து அணி 125 புள்ளிகளுடன் நம்பர்-1 இடத்துக்கு முன்னேறியது. தென்னாபிரிக்க அணி (118) இரண்டாவது இடம் பிடித்தது.

# டெண்டுல்கரை வீழ்த்திய திட்டம் அம்பலம்

# இங்கிலாந்துக்கு பலித்தது கணனிக் கணக்கு

(லண்டன்)

டெண்டுல்கரின் விக்கெட்டைக் கைப்பற்ற இங்கிலாந்து அணி வகுத்தஅதிரடித்திட்டம் அம்பலமாகியுள்ளது. கணித நிபுணர் உதவியுடன் நவீன கணனி தொழில் நுட்பத்தை பயன் படுத்திஇவரது பலவீனங்களை கண்டறிந்துள்ளது. இதன்மூலம் சதத்தில் சதம் காணும் இவரது கனவை தகர்த்துள்ளது.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. இதில் முதல் நான்கு டெஸ்ட்களிலும் தோல்வியடைந்த இந்திய அணி தொடரை இழந்தது. இம்முறை இந்திய வீரர் சச்சின் சர்வதேச அளவில் தனது 100 வது சதம் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது ஆனால் இவரது ஆட்டம் படு மோசமாக இருந்தது.

இங்கு 8 இன்னிங்சில் ( 34,12,16,56, 1,40,23,91) சேர்த்து 273 ஓட்டங்கள் மட்டுமே எடுத்துள்ளார். இவர் தொடர்ந்து தடுமாறியதற்கு இங்கிலாந்து அணியின் தொழில்நுட்ப ஆலோசகர் நாதன் லியாமன் வகுத்த திட்டமே காரணம் என தெரிய வந்துள்ளது.

கேம்பிறிட்ஜ் இல் படித்த லியாமன் மிகச்சிறந்த கணித நிபுணர். இவர் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய கணனி சிமுலேட்டரில் கிரிக்கெட் ஆடுகளங்களின் தன்மை,வீரர்கள் விளையாடும் முறை உள்ளிட்ட பல்வேறு தகவல்களை பதிவு செய்துள்ளார். உதாரணமாக ஆடுகளத்தில் பந்து விழும் இடத்தை 100X15 செ.மீ என்ற அளவில் 20 பகுதிகளாக பிரித்துக்கொண்டுள்ளார். இதன் மூலம் குறிப்பிட்ட துடுப்பட்ட வீரர்களுக்கு எந்த இடத்தில் பந்து வீசினால் நெருக்கடி ஏற்படும் என்பதைக் கண்டறிந்துள்ளார்.

கடந்த 5 ஆண்டுகளாக டெஸ்ட் அரங்கில் வீசப்பட்ட பந்துகளை பதிவு செய்து வைத்ருக்கிறார் துடுப்பாட்ட வீரர்களின் புட் வோர்க், துடுப்பு பிடிக்கும் முறை போன்றவற்றையும் துல்லியமாக கணக்கிட்டுள்ளார்.

லியாமன் கணக்குகளின் படி சச்சின்50 ஓட்டங்களை எட்டும் வரை பெரும்பாலும் ஓன் திசையில்தான் விளையாடுவாராம். இந்த பலவீனத்தை அறிந்து கொண்டு அவருக்கு ஓப் -சைடில் பந்து வீசச் சொல்லியுள்ளார். 3 வது டெஸ்ட் போட்டி வரை அவருக்கு பேசப்பட்ட 261 பந்துகளில் 254 பந்துகள் ஓப் சைட்டுக்கு வெளியே செல்லும் வகையில் வீசப்பட்டன. ஒரு பந்து மட்டுமே லெக் திசையில் வீசப்பட்டது.

இந்த திட்டத்தை அறிந்து கொண்ட சச்சின் 3 வது டெஸ்டில் தனது அணுகு முறையை மாற்றியுள்ளார். மிடில் ஸ்டம்பை மையமாக வைத்து ஆட முயற்சிசெய்துள்ளார். கிரீசுக்கு வெளியே நின்று துடுப்பாட்டம் செய்துள்ளார். இதற்கு பதிலடியாக அன்டர்சன் பந்து வீசியபோது விக்கெட் காப்பாளர் மாட் பிரையரை ஸ்டம்ப்ஸ் அருகில் வந்து நிற்கச் சொல்லியுள்ளார். இங்கிலாந்து அணித்தலைவர் ஸ்டிராஸ். இதனைப் பார்த்த சச்சின் மீண்டும் கிரீசுக்குள் செல்ல நேர்ந்ததாம்.

இது குறித்து லியாமன் கூறுகையில், வீரர்கள் பந்து வீசும்முறை,துடுப்புப் பிடிக்கும் விதம் போன்றவற்றை கண்டறிய வேண்டும். இதற்கு ஹாக்-ஐ தொழில்நுட்பம் உதவும். வீசப் படும் பந்துகளை பல்வேறு வகையாகப் பிரிக்கிறோம். இதனை துடுப்பாட்ட வீரர்கள் எவ்வாறு எதிர்கொள்கின்றனர் என்பதை வீடியோ ஆதாரங்களுடன் ஆய்வு செய்கிறோம். ஒவ்வொரு துடுப்பாட்ட வீரருக் கும் ஒருகுறிப்பிட்ட இடத்தில் பந்து வீசும்போது நெருக்கடி ஏற்படும் . இந்த பலவீனத்தை அறிந்துஅந்த இடத்தில் ஒரு ஓவரில்இரு முறை பந்து வீசினால் எளிதாக விக்கெட்டைக் கைப்பற்றி விடலாம். இந்திய வீரர்களில் சச்சினுக்கு எதிராக இத்திட்டத்தை சிறப்பாக நிறைவேற்றிக் காட்டினோம். இவருக்கு எதிராக இங் கிலாந்தின் வேகங்கள்அபாரமாக பந்து வீசினர் என்றார்.

**கவாஸ்கர் கிண்டல்**


இங்கிலாந்து திட்டத்தில் புதுமை ஒன்றும் இல்லை என இந்திய அணியின் முன்னாள் தலைவர் கவாஸ்கர் தெரிவித்துள்ளார். இது குறித்து இவர் கூறுகையில், ஒவ்வொரு துடுப்பாட்ட வீரர்களுக்கும்ஒவ்வொரு விதமான துடுப்பாட்ட ஸ்டைல் இருக்கும். துடுப்புபிடிக்கும் விதத்தைப் பொறுத்து இது அமையும் .உதாரணமாக கங்குலி பயன்படுத்தும் துடுப்பின் பிடி அதிக எடைகொண்டதாக இருக்கும். இது ஓப் சைட்டில் விளையாட எளிதாக விருக்கும். சச்சினை எடுத்துக் கொண்டால் துடுப்பு பிடிக்கும் பகுதி உருண்டை வடிவில் இருக் கும். இதன்மூலம் ஓன்சைட்டில் எளிதாக ஓட்டங்கள் சேர்க்கலாம். எனவே சச்சின் துடுப்பு பற்றி புதிதாக ஒன்றும் கண்டு பிடித்து விடவில்லை என்றார்.

## மலிங்க ஹட்ரிக்கில் புதிய உலக சாதனை

அவுஸ்திரேலிய அணியுடனான 5 ஆவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லஷித் மலிங்க நேற்று ஹட்ரிக் சாதனை படைத்தார்

சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் மலிங்க மூன்றாவது தடவையாக ஹட்ரிக் விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். மலிங்க போட்டியின் 46 வது ஓவரில் 234 பந்துகளில் முறையே ஜோன்சன், ஹோஸ்டிங்ஸ், டோஹர்த்தி ஆகியோரை லஷித் மலிங்க ஆட்டமிழக்க செய்தார்.

இதுவொரு புதிய உலக சாதனையாகும். இதற்கு முன் வஸிம்அக்ரம், சக்லைன் முஸ்தாக், சமிந்த வாஸ் ஆகியோர் தலா இரு தடவை ஹெட்ரிக் விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தனர்.



பெங்களூரில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள, வாழும் கலை நிறுவுனர் ஸ்ரீஸ்ரீரவிசங்கர் குருஜியின் பிரதம சிஷ்யரும் முருக பக்தருமான சுவாமி அலெக்ஸ்ஜி( ஹொலன்ட்) அவர்கள் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் சொற்பொழிவாற்றிய பின்னர் அடியவர்களை ஆசீர்வதிப்பதையும், யாழ்ப்பாணத்தில் உருத்திர அபிஷேகம் நடத்துவதையும் படங்களில் காணலாம்.



No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com


# நல்லூர் உற்சவ...

மக்கள் வருகின்றனர். இவர்களின் உடைமைகளை பாதுகாப்பதற்கும், அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்படாமல் பாதுகாக்கும் பொருட்டே ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்தே வரவழைக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே நல்லூர் கந்தசாமி கோவில் உற்சவத்தில் 300 க்கும் மேற்பட்ட தமிழ்ப்பொலிசார் பணியில் உட்படுத்தப்பட்டுள்ளனர்.

மக்களோடு மக்களாக பொது மக்களின் உடைகளிலும் பொலிஸ் சீருடையிலும் இவர்கள் பணியில் ஈடுபட்டுவருகின்றனர். அதுமட்டுமன்றி வரவழைக்கப்பட்ட பெருந்தொகையான பொலிஸாரும் அவ்வாறே பணியில் உட்படுத்தப்பட உள்ளனர்.

கோவிலுக்கு வரும் மக்கள் தங்களது தங்க நகைகளை மிகவும் பாதுகாப்பாக கண்காணித்துக் கொள்ளுங்கள் முடிந்தவரை தங்க நகைகளை அணிந்து வருவதை குறைத்துக்கொள்ளுங்கள் எனவும் அவர் வேண்டுகோள்விடுத்தார். விசேடபணிக்காக வரவழைக்கப்பட்ட பொலிசார் இன்று முதல் உற்சவகாலம் முடியும் வரைபணியில்உட்படுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை உற்சவ காலப் பணிக்கு அழைக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகஸ்தர்களில் பெண் பொலிஸ்உத்தியோகஸ்தர்களும் அதிகமாகவே காணப்பட்டனர். (ச-6)

# நாவாந்துறை...

களநிலைமைகள் தொடர்பாக கேட்டறிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. நீண்ட நேரமாக பொதுமக்களை சந்திக்க எம்.பிகள் காத்திருந்தபோதும் இராணுவத் தரப்பு அதற்கு அனுமதியளிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.(ச-5,8)

# கிளர்ந்தெழு...

தமது வீடுகளில் பாதுகாப்பை பலப்படுத்தும் முயற்சியிலும் ஈடுபட்டனர். நாவாந்துறை வடமராட்சி தேவரையாளி போன்ற இடங்களிலேயே இச் சம்பவம் இடம்பெற்றது. (எ-5)


இரசாயனவியல்
(தனி, குழு வகுப்பு)
மொழி:-
தமிழ்/ஆங்கிலம்
By: N.San B.Sc
☎ 0754169616/0726997883


# தஞ்சம்...

என்பது குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து கடந்த 2009 ஆம் ஆண்டு பிரித்தானியாவில் தஞ்சமடைந்த குறித்த பெண்ணின் அரசியல் தஞ்சக் கோரிக்கை பிரித்தானிய அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்டதையடுத்து அவரைநாடுகடத்த அதிகாரிகள் முயற்சித்தனர்.

நாடுகடத்துவதற்கான உத்தரவை அதிகாரிகளை வழங்கிய நிலையிலேயே அதிர்ச் சியடைந்த அந்தப் பெண்சமையல்அறைக்குஓடிச்சென்று கத்தியை எடுத்து தன்னைத்தானே கீறிக்கொண்டுள்ளார்.

தோள்பட்டையில் காயமடைந்த பெண்ணை அவரது நண்பி ஒருவர் மருத்துவமனையில் அனுமதித்துள்ளார். (எ-5)

# நாவாந்துறையில் கலவ...

### நாவாந்துறையில் நடந்தது என்ன?

நாவாந்துறையில்உள்ளகோவில் வீதியிலுள்ள வீடொன்றில் கிறீஸ் மனிதன் என சந்தேகிக்கப்படும் நபர்கள் சென்றதாக தெரிவிக்கப்பட்டதையடுத்து அந்த நபர்களை பொது மக்கள் துரத்திச் சென்றுள்ளனர்.

இதன்போது அந்நபர்கள்நாவாந்துறையில் உள்ள இராணுவ காவலரணுக்குள் புகுந்ததாக தெரிவித்து பொதுமக்கள் இராணுவ காவலரண் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

அதனைக் கட்டுப்படுத்துவதற்காக இராணுவத்தினர் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டதுடன் உதவிக்கு கலகமடக்கும் பொலிஸாரை வரவழைத்தனர்.

உடனடியாக பெருமளவு பொலிஸாரும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு கலவரத்தில் ஈடுபட்ட பொது மக்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனையடுத்து மக்கள் வீடுகளுக்குள் முடக்கப்பட்டுள்ளனர். வீதிகளில் காணப்பட்ட மக்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனையடுத்து மக்கள் பீதியில் உறைந்தனர்.

இதேவேளை இன்று அதிகாலை வீடுகளுக்குள் புகுந்த இராணுவத்தினரும் பொலிஸாரும் இளைஞர்கள் மற்றும் யுவதிகளை விசாரணைக்கென அழைத்துச் சென்று தாக்கியதாக பிரதேச தகவல்கள் தெரிவித்தன.

### பொலிஸ் வாகனங்கள் மீது பொதுமக்கள் தாக்குதல்

இதேவேளை நாவாந்துறையில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களையடுத்து அப்பகுதிக்கு சென்ற பொலிஸ் வாகனங்கள் மீது பொதுமக்கள் தாக்குதலை மேற்கொண்டனர். இதில் 2 பொலிஸ் வாகனங்கள் சேதமடைந்ததாக பொலிஸ் தரப்பு செய்திகள் தெரிவித்தன.

### இராணுவத்தினரால் பலர் கைது

நாவாந்துறையில் இடம்பெற்ற சம்பவங்களையடுத்து இன்று அதிகாலை தொடக்கம் பலர் கைது செய்யப்பட்டதாகப் பிரதேச தகவல்கள் தெரிவித்தன. **பலர் காயம்**

இதேவேளை பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் பொதுமக்கள் பலர் காயமடைந்ததாக கூறப்பட்டது.

செய்தி அச்சுக்கு போகும் வரை நாவாந்துறையில் பதற்றமான சூழ்நிலையே காணப்பட்து.

### வடமராட்சியில் பிடிபட்டான் கிறீஸ் மனிதன்

வடமராட்சியில் கொற்றாவத்தையில் உள்ள வீடொன்றினுள் நேற்றிரவு கிறீஸ் மனிதன் என சந் தேகிக்கப்படும் நபர் சென்றதை அவதானித்த பொதுமக்கள் அவனைத் துரத்திச் சென்று ஆலங்கட்டை மயானத்திற்கு அண்மையில் மடக்கிப் பிடித்துள்ளனர்.

இதனையடுத்து வாகன மொன்றில் வந்த இராணுவத்தினர் சிலர் அந்நபரைமீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

எனினும் அங்கு திரண்ட பொது மக்களின் எண்ணிக்கை அதிகரிக்கவே நிலைமை மோசமடைந்தது. இதனையடுத்து பெருமளவான பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டுள்ளனர். எனினும் பொதுமக்கள் பிடியிலிருந்த கிறீஸ் மனிதனை மீட்க முடியவில்லை எனக் கூறப்பட்டது.

பொதுமக்களை கலைக்க இராணுவத்தினரும் பொலிஸாரும் எடுத்த முயற்சி பலனளிக்காது போனதாக கூறப்பட்டது. அப்பகுதியிலும் இன்று அதிகாலை வரை பதற்றநிலை காணப்பட்டதுடன் தமது வீடுகளை பாதுகாக்கும் முயற்சியிலும் பொது மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை கிறீஸ் மனிதன் என சந்தேகிக்கப்படும் நபர்கள் மூவர் வந்ததாகவும் அவர்களில் இருவர் தப்பிச் சென்றதாகவும் கூறப்பட்டது எனினும் அதனை உறுதிப் படுத்த முடியவில்லை.

இதேவேளை இச்சம்பவம் குறித்து ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் யாழ். இராணுவக் கட்டளைத்தளபதியுடன் தொடர்பு கொண்டு பேசியுள்ளார். (எ-5,8,24,52)

# கிறீஸ்...

ஏற்பட்ட மோதல் குறித்து கேட்டபோது யாழ்.கட்டளைத்தளபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கிறிஸ்பூதம்என்பது வதந்தி. அது தொடர்பில் மக்கள் அச்சம் கொள்ளத்தேவையில்லை. பொலிஸார் உரிய பாதுகாப்பை வழங்குவர்.

நாவாந்துறைசம்பவத்தை பொலிஸார்கையாளுகிறார்கள் என யாழ். கட்டளைத்தளபதி தெரிவித்தார். (எ-5)

# பாதுகாப்பு அமைச்...

படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு கடந்தமாத இறுதியில் அறிவித்திருந்தது.

இந்நிலையில்பாதுகாப்பு அமைச்சர் கோத்தபாய ராஜபக்ஷவால் கடந்த முதலாம் திகதி கொழும்பில் வைத்து வெளியிடப்பட்ட 161 பக்கங்களைக் கொண்ட இவ்வறிக்கை அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் சகல பிரிவினருக்கும் கையளிக்கப்பட்டுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

அத்துடன் அமெரிக்க காங்கிரஸின் நூலகம், பல்கலைக்கழகங்கள் மற்றும் பாதுகாப்பு தொடர்பிலான சகல முகவர் நிலையங்களுக்கும் இவ்வறிக்கை கையளிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை இலங்கை விவகாரம் தொடர்பில் அமெரிக்க காங்கிரஸின் ஊடக வியலாளர் மாநாட்டில் கேள்விகளை எழுப்புகின்ற இந்திய ஊடகவியலாளர்களையும் விரைவில் சந்தித்து போருக்கு பிற்பட்ட இலங்கையில்நிலைமைகள் குறித்து விளக்கமளிக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்திற்கு எதிராகஅமெரிக்காசெயற்படவில்லை, அமெரிக்காவிலுள்ள சில தீவிரவாத சக்திகளே அரசாங்கத்திற்கு எதிரான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றன என அவர் குற்றம் சாட்டினார். (எ-5)


வீடு கட்டுவதற்கு இன்றே நாடுங்கள்



யாழ்ப்பாணத்தில் பொறியியலாளரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் தனியார் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும். புதிய வீட்டு வரைபடம் (Plan) மற்றும் அனுமதிகளுடன் 5 மாதத்திற்குள் கட்டிக் கொடுக்கப்படும்.

தொடர்பு: 0779341083


# மரண அறிவித்தல்

## பொன்னர் கணபதிப்பிள்ளை J.P



(சீமா ஆலடி விநாயகர் ஆலய தலைவர்)

மகாத்மா வீதி, அல்வாய் வடக்கு, அல்வாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னர் கணபதிப்பிள்ளை அவர்கள் 22.08.2011 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னர்-பொன்னி அவர்களின் அன்பு மகனும், முருகன் பார்வதி அவர்களின் மருமகனும் சின்னமணி அவர்களின் அன்புக் கணவரும் மாணிக்கம், சிதம்பரப்பிள்ளை, பழனிப்பிள்ளை, சண்முகம், இலட்சுமி, பாக்கியம் அவர்களின் அன்புச் சகோதரனும், லீலாவதி, சுசிலாவதி, லலிதாவதி, பிரதீபன்(பிரான்ஸ்), பிரசாந்தி அவர்களின் அன்புத் தந்தையும், பாலசுந்தரம், தமிழ்வாணன், மதியமுதன் (பிரான்ஸ்) அவர்களின் அன்பு மாமனாரும், லோஜினி, சுலோசனா, நிதர்சன், நிருபன், நிவேதா, நிதுசன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 23.08.2011 இன்று அன்னாரின் இல்லத்தில் காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லீலா பவனம்,
மகாத்மா வீதி, அல்வாய் வடக்கு, அல்வாய்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-4152)

# தவறிவிட்டது

குமாரசாமி சத்தியேந்திரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை, வாகன காப்புறுதி பத்திரம், வாகன வரிப்பத்திரம், சாரதி அனுமதிப் பத்திரம் ஆகியன பரமேஸ்வராச் சந்திக்கும் திருநெல்வேலி சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 0779907609/0776224218 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

சன்மானம் வழங்கப்படும். (C-4159)


No Prior Qualifications
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்
A/L 2011 மாணவர்களும் பதிவுசெய்யலாம்

இலவச முன் பதிவுகளுக்கு இன்றே உங்கள் <Name>, <Address>, <Course> 772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி, காலதாமதத்தை தவிருங்கள்

CIMA-UK | Engineering-USA | BIT University of Colombo | Multimedia_USA Visual Communication

Closing Date 24.08.2011

Diploma Courses MsOffice, DTP, English, AutoCAD, Hardware, Accounting, Web Designing



MCS
Supported By UNDP/JRRP
USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Kids Courses கணினி, சதுரங்கம், ஆங்கிலம், Games
Government Schol
324, Palaly Road, Campus Junction, Jaffna.
Free Course fee: BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Hardware, ICDL


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.08.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.